# பிற்பகல் விளையும் ...

தமிழ் குறுநாவல்

பூபதி கோவை



# பிற்பகல் விளையும்

பூபதி கோவை,

boopathycovai@gmail.com,

+91-7299543057

வெளியிடு

FreeTamilEbooks.com

உரிமை

Creative Commons Attribution-Share Alike 4.0 International License
You are free: to Share — to copy, distribute and transmit the work; to make commercial use of the work

கிரியேட்டிவ் காமன்ஸ். எல்லாரும் படிக்கலாம், பகிரலாம்.

மின்னூலாக்கம் *:GnuAnwar*

தொடர்புக்கு *:* ***gnuanwar@gmail.com***

## -: பிற்பகல் விளையும் :-

*கோயம்புத்தூர் ரயில் நிலையம் , அந்த மதிய வேளையிலும் , படு சுறுசுறுப்பாக இயங்கிக்கொண்டிருந்தது . சுவற்றில் மாட்டப்பட்டிருந்த பெரிய ரயில்வே கடிகாரத்தில், மணி **3.20** -ஐ தொட்டிருக்கும் . மதியம் **3.30** மணிக்கு வர வேண்டிய மங்களூர் எக்ஸ்பிரஸ் வண்டியை எதிர்பார்த்து , மிகப்பெரிய கூட்டம் நடைமேடையில் அங்கும் இங்குமாக உலாவிக் கொண்டிருந்தது .*

*திடீரென்று அங்கிருந்த ஒலிபெருக்கியிலிருந்து , பதிவு செய்யப்பட்ட பெண்ணின் குரல் , அழுத்தமான தமிழில் ஒலித்தது .*

*டின் ! டின் ! டின் ! ........ பயணிகளின் கனிவான கவனத்திற்கு, மங்களூரிலிருந்து , சென்னை வரை செல்லும் மங்களூர் எக்ஸ்பிரஸ் , தடம் 2-ல்*

, இன்னும் சற்று நேரத்தில் , வந்து சேரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது .

பயணிகள் தங்கள் உடமைகளை சரிபார்த்துக் கொண்டு தயாராயிருந்தார்கள் . அடுத்த சில நிமிடங்களில் , மங்களூர் எக்ஸ்பிரஸ் தண்டவாளம் -2 இல், மெல்ல, தலை காட்டியிருந்தது . பயணத்திற்காக முன்பதிவு செய்தவர்களின் பட்டியலை , ரயில் பெட்டிகளில் , வேக வேகமாக ஒட்டிக்கொண்டிருந்தார்கள் ரயில்வே ஊழியர்கள் . **S-7** பெட்டியில் , பயணம் செய்பவர்களின் பட்டியலில் ,

சீட் நம்பர் **27** , பெயர் : ரவி , வயது : **35** என்று அச்சிடப்பட்டிருந்ததைப் பார்த்தவுடன் , தன் தோளில் மாட்டியிருந்த பையுடன், ரயில் பெட்டியின் உள்ளே பிரவேசித்தார் இன்ஸ்பெக்டர் ரவி . நல்ல உயரம் . காவல்துறைக்கே உரிய கட்டுக்கோப்பான உடம்பு . அசட்டு தைரியம் , இவை அனைத்துமே அவரை போலீஸ் என்று அப்பட்டமாக காட்டிக்கொடுத்திருந்தது.

*ஜன்னல் ஓரத்தில் , படுக்கை வசதியுடன் கூடிய சீட் அவருக்கு தயாராயிருந்தது . சமீபத்தில் , அவர் விசாரணை நடத்திய வழக்கில், ஏற்பட்ட எதிர்பாராத திருப்பங்களால் , அரியலூர் மாவட்டம் தூத்தூர் காவல் நிலையத்துக்கு பணியிடமாற்றம் செய்யப்பட்டிருந்தார் . அதன் தாக்கத்தை அவர் முகத்தில் தெளிவாக உணர முடிந்திருந்தது . ரயில் மெல்ல புறப்பட தொடங்கியிருந்தது . சற்றே படுக்க முற்பட்ட அவரின் செல்போன் அலறியது . உடனே எடுத்து பார்த்தார் .*

*அவருடைய நண்பர் கணேஷ் . (தினச்செய்தி பத்திரிகையின் ஆசிரியர் ) லைனில் இருந்தார் .*

***கணேஷ்** : ஹலோ ! ரவி ! என்ன ரயில் கெளம்பிடுச்சா ?*

***இன்ஸ்பெக்டர் ரவி** : ஹ்ம்ம் ! இப்பதாண்டா கெளம்பிருக்கு . ஆமாம் நான் கேட்ட DETAILS என்னாச்சு ?*

**கணேஷ் :** *ஹ்ம்ம் ! எல்லா DETAILS யும் COLLECT பண்ணிட்டேன் !*

*நாளைக்கு நீ டூட்டில JOIN பண்ற தூத்தூர் போலீஸ் ஸ்டேஷன்ல இருந்து , சரியா 1 o கிலோமீட்டர் தூரத்துல தான் , அந்த மாத்தூர் கிராமம் இருக்கு . போன மாசம் 6 ஆம் தேதி தான் , வேளாண் ஆசிரியர் குமாரசாமிங்கற பெருசு அங்க செத்துப் போயிருக்காரு . அவர் சாதாரணமா சாகல . பேயடிச்சு செத்துப்போயிட்டதா அந்த கிராம மக்கள் சொல்றாங்க . அந்த ஊர்ல பேய் நடமாட்டம் இருக்குன்னும் நம்புறாங்க . இந்த கேஸ விசாரிச்ச போலீஸ் இன்ஸ்பெக்டர் சுந்தரம் , ட்ரான்ஸ்பர் வாங்கிட்டு வேற ஊருக்குப் போயிருக்காரு . காரணம் கேட்டதற்கு மன அழுத்தம்னு சொல்லிருக்காரு . BUT அந்த ஊர்ல எதோ ஒரு மர்மம் ஒளிஞ்சிருக்கு .*

**இன்ஸ்பெக்டர் ரவி : (**......... *சிறிது நேரம் மௌனம் .........* **)** .

**கணேஷ் :** என்ன ரவி ! ரொம்ப பயமுறுத்திட்டனா ? பேச்சையே காணோம்? என்றார் சிரித்துக்கொண்டே .

மறுமுனையில் மீண்டும் மௌனம் தொடரவே ,

ரவி ! ரவி ! என்றவர் பதற்றத்துடன் , இணைப்பைத் துண்டித்து விட்டு , மீண்டும் அவருக்கு போன் பண்ணினார்.

மறுமுனையில் , ரவி மீண்டும் பேசினார் .

**இன்ஸ்பெக்டர் ரவி :** ஹலோ ! என்றார் (தூக்க கலக்கத்தோடே)

**கணேஷ் :** என்னடா ! பேச்சையே காணோம் . தூங்கிட்டயா ?

**இன்ஸ்பெக்டர் ரவி :** ஆமாண்டா ! போன்ல CALL RECORDING OPTION CHOOSE பண்ணிருந்தேன் . அதான் தூங்கிட்டேன். நான் அப்புறம் கேட்டுக்கறேன் என்றார் சிரித்துக்கொண்டே .

**கணேஷ் :** *இன்னும் உன்னோட போலிஸ் புத்தி , உன்ன விட்டுப் போகல இல்ல . ஓகே ! ANYWAY கொஞ்சம் ஜாக்கரதையா இரு . மீடியா LEVEL ல என்ன உதவி வேணாலும் எங்கிட்ட கேளு . நான் இருக்கேன் .*

*ஓகே GOOD NIGHT . என்று இணைப்பைத் துண்டித்தார் ரவி .*

*அடுத்த சில நிமிடங்களில் கணேஷின் RECORD செய்யப்பட்ட குரல், இன்ஸ்பெக்டர் ரவியின் காதுகளில் ஒலித்துக் கொண்டிருந்தது . வெளியே ஜெட் வேகத்தில் ரயில் பறந்து கொண்டிருந்தது .*

## *2*

*சாயுங்கால நேரம் 5 மணி .... மரங்கள் அடர்ந்த மாத்தூர் கிராமத்தை , தென்றல் காற்று வருடிக்கொண்டிருந்தது .... அந்த மாலை வேளையில், கொட்டாப் பாக்கும் , சுண்ணாம்புடன் , வாயில் வெற்றிலையை மென்றவாறே , தென்னந்தோப்பில் , உட்கார்ந்திருந்தார் மாத்தூர் கிராமத்தின் ஊர்த்தலைவர் தவபுண்ணியம் . உடன் அவர் வேலைக்காரன் பொன்னையா , வெற்றிலையை மடித்து வைத்துக் கொண்டு நின்றிருந்தான் . தவபுண்ணியம் - வயது 53 ன் விளிம்புகளில் இருக்கும் . நல்ல வாட்ட சாட்டமான உடல் . தொடர்ந்து 5 ஆவது முறையாக மாத்தூர் கிராமத்தின் ஊர்த்தலைவராக ஒரு மனதாக தேர்ந்தெடுக்கப் பட்டவர் .*

***ஊர்த்தலைவர் - தவபுண்ணியம் :*** *டேய் ! பொன்னையா ! என்னடா அவனுங்கள இன்னும் காணோம் ? வந்து இவ்ளோ நேரமாச்சு ?*

***பொன்னையா :*** *ஐயா ! வந்துருவாங்கய்யா என்று சொல்லி முடிப்பதற்குள், சிவநேசனும் , ரமாலிங்கமும் தென்னந்தோப்புக்குள் நுழைந்திருந்தார்கள். இருவரும் வயதில் ஐம்பதைக் கடந்திருந்தார்கள் . ஊர்த் தலைவர் தவ புண்ணியத்தைக் கண்டவுடன் , வணக்கம் வைத்தவாறே எதிரே இருந்த நாற்காலியில் அமர்ந்தார்கள் .*

***ஊர்த்தலைவர் - தவபுண்ணியம் :*** *(....... சற்றே கோபமான தொனியுடன் ....... ) , குமாரசாமி கேஸ விசாரணை பண்றதுக்கு , தூத்தூர் போலீஸ் ஸ்டேஷனுக்கு புது இன்ஸ்பெக்டர் வர்றானாம் . அநேகமா இன்னிக்கு ராத்திரியே இங்க வந்துருவான்னு நெனைக்கிறேன் .*

***சிவநேசன் :*** *தலைவரே ! இதுக்குத்தான் இவ்ளோ அவசரமா வரசொன்னீங்களா ?  நான் வேற , என்னமோ ஏதோன்னு நெனச்சு பயந்துட்டேன் .*

***ஊர்த்தலைவர் - தவபுண்ணியம் :*** *யோவ் ! அதெல்லாம் ஒன்னும் இல்ல . ஆனா அவன் கொஞ்சம் கெடுபிடியான ஆள்னு எல்லாரும் சொல்றாங்க .  யாரையும் அவ்ளோ சீக்கிரமா நம்ப மாட்டானாம் . அதனால ,  குமாரசாமி விவகாரத்துல , அவங்கிட்ட நாம கொஞ்சம் ஜாக்கிரதையா இருக்கணும் .*

***ராமலிங்கம் :*** *அவன் வந்து என்ன பண்ணீரப் போறான் ? ........ தலைவரே !  குமாரசாமியக் கொன்னது ,  செத்துப்போன அந்த வெண்ணிலா பொண்ணோட , ஆவிதான்னு ஊரே சொல்லுது . அத மீறி அவனால என்னத்த பண்ணீர முடியும் ? நீங்க தைரியமா இருங்க .  பழைய இன்ஸ்பெக்டர் சுந்தரத்த ஊரை விட்டு ஓட வெச்ச மாதிரி ,  இவனையும் ஓட வெச்சுடலாம் . ஹ்ம்ம் .... அத விடுங்க . நம்ம கலையரசன்*

*கல்யாண விஷயம் என்னாச்சு ? பொண்ணு பாத்துட்டு இருக்கறதா சொன்னீங்க ? .*

***ஊர்த்தலைவர் - தவபுண்ணியம்*** *: நாங்களும் பொண்ணு பாத்துட்டுதான்யா இருக்கோம் . ஆனா அவன் கல்யாணமே பண்ணிக்க மாட்டேன்னு சொல்றான் . செத்துப் போன அந்த வெண்ணிலா பொண்ண , அவன் இன்னும் மறக்கவே இல்ல . அவளையே நெனச்சு நெனச்சு , தினம் தினம் செத்துகிட்டு இருக்கிறான் . இதுல , அவளோட தற்கொலைக்கு நான் தான் காரணம்னு சொல்லி , என்கிட்டயே சரியா பேச மாட்டீங்கறான் என்றார் விரக்தியுடன் .*

***சிவநேசன்*** *: தலைவரே ! இந்தக் காலத்து பசங்க மனசு , குரங்கு மாதிரி , அப்பப்ப மாறிகிட்டே இருக்கும் . அதெல்லாம் போகப் போக சரியாயிரும் .*

***ஊர்த்தலைவர் - தவபுண்ணியம்*** *: அப்புறம் இன்னும் ரெண்டு நாள்ல , அந்த உரம் தயாரிக்கிற கம்பெனிக்காரங்க கூட (* ***NEXTGEN FRETILIZERS LTD*** *(உரம் தயாரிப்பு நிறுவனம்) )*

ஒரு மீட்டிங் இருக்கு . அத முடிச்சுட்டு , அவங்க அக்ரிமெண்ட்ல SIGN பண்ணியாச்சுன்னா , நாம காச வாங்கிட்டு வந்தர்லாம் . அவ்ளோதான் .

**சிவநேசன்** : தலைவரே ! இதுல ஏதாவது பிரச்சனை வருமோன்னு நான் நெனைக்கிறேன் ...

**ஊர்த்தலைவர் - தவபுண்ணியம்** : சிவநேசா ! ... நம்ம ஊர்ல , நம்ம வைக்கிறதுதான் சட்டம் . யாரும் நம்மள எதிர்த்து பேச மாட்டாங்க . பழைய உரத்த தூக்கி எறிஞ்சுட்டு , இத பயன்படுத்துங்கன்னு சொன்னாப் போதும் . நம்ம பேச்சுக்கு , மறுபேச்சு பேசாம கேட்டுக்குவானுங்க நம்ம ஊர்க்காரங்க . இதுல யார் பிரச்சனை பண்ணாலும் , குமாரசாமிக்கு நடந்த கதிதான் அவங்களுக்கும் !!!! (என்றார் கறாராக) .

சற்று நேரத்தில் , வேலைக்காரன் பொன்னையா , இளநீரை வெட்டி , அதில் நாட்டுச்சாராயத்தைக் கலந்து தயாராக வைத்திருந்தான் .

**ராமலிங்கம் :** தலைவரே ! இன்னொரு விஷயம் . நம்ம ஊர்ல உண்மையாலுமே பேய் நடமாட்டம் இருக்குன்னு , ஊர் மக்கள் எல்லாம் பயப்படறாங்க . குறிப்பா அந்த சாமியார் கூட அத உண்மைன்னு சொல்லிருக்காரு . அதான் கொஞ்சம் பயமா இருக்கு .

இதைக் கேட்டவுடன் சத்தம் போட்டு சிரித்தார் தவபுண்ணியம் .

**ஊர்த்தலைவர் - தவபுண்ணியம் :** யோவ் ! யாரு அந்த அன்பாலயம் வேதாந்த சாமியாரா ? .. அவனே ஒரு ஏமாத்துக்காரன் . அவன் சொல்றதப்போய் நம்பிட்டு .......
குமாரசாமியக் கொன்னதே நாமதான் . அவன பேய் தான் கொன்னுச்சுன்னு , ஒரு வதந்திய கௌப்பிவிடலையா ? அந்த மாறிதான் இதுவும் .......... இவ்ளோ பெரிய மனுசனாயிட்ட , இதுக்குப் போய் ஏன்யா பயந்துட்டிருக்கற . அடேய் ரமாலிங்கம்...... , அரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்னு சொல்லுவாங்க .. அதெல்லாம் ஒரு எழவும் கிடையாது . நீ தைரியமா இரு என்று சொல்லி ,

அந்த இளநீர் பானத்தை எடுத்து கையில் கொடுத்தார். இத ஒரு ரவுண்டு உள்ள உடு .. எல்லா பயமும் வெளில வந்துரும் என்றார் சிரித்துக்கொண்டே ..

மூவரும், கிட்டத்தட்ட நான்காவது ரவுண்டைத் தாண்டியிருந்தார்கள்.

## 3

நேரம் சரியாக இரவு *1 o:5 o* மணி . மங்களூர் எக்ஸ்பிரஸ் , மிகுந்த சப்தத்துடன் , அரியலூர் ரயில் நிலையத்தில் வந்திறங்கியது . அரியலூர் ரயில் நிலையம் உங்களை அன்புடன் வரவேற்கிறது ..... என்கின்ற வாசகங்கள் ஆங்காங்கே இடம்பெற்றிருந்தன. கடைசி ஆளாக படிக்கட்டில் இருந்து இறங்கினார் இன்ஸ்பெக்டர் ரவி . கைகளை மேலே தூக்கி சோம்பலை முறித்து விட்டு , சுற்றும் முற்றும் பார்த்துக் கொண்டிருந்த அவர் , தன் கையில் இருந்த மொபைல் போனை எடுத்து , கந்தசாமி என்கிற நம்பரைத் தேடிக் கொண்டிருக்கிருந்தார் . சார் !!! என்ற குரல் கேட்டு , பின்னால் திரும்பிப் பார்த்த அவருக்கு , சல்யூட்டுடன் எதிர்ப்பட்டார் ஏட்டு கந்தசாமி . வயதில் **40**–ஐ நெருங்கியிருந்தார் . கட்டையான உயரம் . காவல்துறைக்கே சற்றும் சம்பந்தப்படாத ஒரு உடல் வாகு .

சார் ! நான்தான் சார் ! ஏட்டு கந்தசாமி ............ என்று அவர் ஆரம்பிப்பதற்குள் அவரைக் கையமர்த்தினார் இன்ஸ்பெக்டர் ரவி . என்னவென்று தெரியாமல் திருதிருவென்று முழித்துக்கொண்டிருந்தார் கந்தசாமி .

**இன்ஸ்பெக்டர் ரவி** : உன்னைப் பத்தி நானே சொல்றேன் என்று பேச ஆரம்பித்தார் ....... உன் பேரு கந்தசாமி . வயசு 40 . ரெண்டு புள்ள . ஒரு பொண்டாட்டி . 1 o வருஷமா இதே ஸ்டேஷன்ல, கான்ஸ்டபிளா இருந்து , இப்பதான் ஏட்டா ப்ரொமோஷன் வாங்கிருக்கே . எதப்பத்தியும் கவலைப்பட்றதே இல்ல ..... சொந்த ஊர் மாத்தூர்லயே , போஸ்டிங் வாங்கினது , ரொம்ப சவ்ரியமாப் போச்சு ......... பெரிய பெரிய ஆபீசர்ஸ்களுக்கு , ஜால்ரா போட்டே காலத்தைக் கடத்தியாச்சு .... உன் பர்சனல் ரெகார்ட்ஸ எடுத்துப் பார்த்தேன் . ரொம்பக் கேவலமா இருந்துச்சு . இது போதுமா ! இன்னும் ஏதாவது சொல்லனுமா ? என்றார் ரவி .

**ஏட்டு கந்தசாமி** *: முகத்தில் இருந்த அதிர்ச்சியைக் காட்டிக் கொள்ளாமல், இல்ல சார் ! நேரமாயிடுச்சு ! இன்னைக்கு இது போதும் ! போலாம் . என்று இருவரும் போலீஸ் ஜீப்பை நோக்கி நடந்தார்கள் . இருவரும் ஏறியவுடன் , ஜீப்பை வேகமாக ஓட்ட ஆரம்பித்தார் ஏட்டு கந்தசாமி .*

*நேரம் இரவு* ***11-****ஐக் கடந்திருந்தது . ஆள் நடமாட்டமே இல்லாமல் , எங்கு பார்த்தாலும் , காரிருள் சூழ்ந்திருந்தது . எண்ணிப் பார்த்து விடக் கூடிய அளவிலே , தெரு விளக்குகளின் எண்ணிக்கை இருந்தது . இவரிடம் ஏதாவது கேட்கலாமா வேண்டாமா என்கின்ற குழப்பத்துடனே ஜீப்பை ஓட்டிக் கொண்டிருந்தார் ஏட்டு கந்தசாமி . ஜீப்பின் வேகம் சீராக அதிகரித்திருந்தது . அங்கிருந்த மௌனத்தைக் கலைத்தார் இன்ஸ்பெக்டர் ரவி .*

**இன்ஸ்பெக்டர் ரவி** *: என்ன கந்தசாமி ? ஏதோ கேக்கணும்னு நெனைக்கிற. ஆனா சொல்ல மாட்டீங்கிற . ஏதாருந்தாலும் தைரியமா கேளு .*

**ஏட்டு கந்தசாமி** : அது ஒன்னும் இல்ல சார் ! என்னபத்தி எப்படி இவ்ளோ DETAILS கரெக்ட்டா தெரிஞ்சு வச்சிருக்கீங்க .

**இன்ஸ்பெக்டர் ரவி** : நான் யார்கிட்ட பேசுனாலும் , மொதல்ல அவங்களோட முழு விபரமும் தெரிஞ்சு வெச்சு கிட்டு தான் பேசுவேன் . அதான் என்னோட வழக்கம் ......... ஹ்ம்ம் !!! சரி அதெல்லாம் இருக்கட்டும் . பழைய இன்ஸ்பெக்டர் சுந்தரம் ஆள் எப்படி ?

**ஏட்டு கந்தசாமி** : கிட்டத்தட்ட ஒரு அஞ்சேமுக்கால் அடி இருப்பார் சார் . WEIGHT ஒரு 65 இருப்பார்னு நெனைக்கிறேன் . நல்ல மாநிறம் ! தாடி மீசையெல்லாம் வெச்சு பயங்கரமா இருப்பார் சார் . அப்புறம் அவர் வலது கைல மொத்தம் ஆறு விரல் இருக்கும் .

**இன்ஸ்பெக்டர் ரவி** : யோவ் ! நான் என்ன MILITARY க்கா ஆள் எடுக்கிறேன் . HEIGHT WEIGHT ல்லாம் சொல்லிட்டிருக்கிற .... அவர் மத்த விசயத்திலல்லாம் எப்படி ?

**ஏட்டு கந்தசாமி** *: அவரா சார் ! அவர் ரொம்ப நல்ல மனுஷன் சார் . கை சுத்தம் . மாமுல் வாங்கினா திட்டுவார் சார் !* ஸ்டேஷன்ல மட்டும் இல்ல பொதுமக்கள்கிட்ட கூட அவருக்கு நல்ல மரியாதை இருந்துச்சு . ஆனா கொஞ்ச நாளா எதையோ பறிகொடுத்தமாறியே இருந்தார் . நானும் கேட்டு பாத்துட்டேன் . ஆனா அவர் எதையுமே சொல்லல . கடைசில ட்ரான்ஸ்பர் வாங்கிட்டு ஊர விட்டே போய்ட்டார் சார் ! எனக்கு தெரிஞ்சு அவரும் பேயப் பாத்து பயந்துருப்பார்னு நெனைக்கிறேன் சார் .

**இன்ஸ்பெக்டர் ரவி** *: ( ...... சிரித்துக்கொண்டே ......)* யோவ் ! இந்தக் காலத்துலயும் இன்னும் இந்த மாதிரி கன்றாவிகள , நாம நம்பிட்டுதான் இருக்கிறோம் இல்லையா . இந்தக்காலத்துல அவனவன் *FACEBOOK , TWITTER* னு போய்கிட்டு இருக்கானுங்க , இன்னும் நீங்க பேய் , பிசாசுன்னு பயந்துட்டு இருக்கீங்க .

***ஏட்டு கந்தசாமி*** *: சார் ! நீங்க வேற , நானே ரெண்டு மூணு தடவ பேயப் பாத்து பயந்துருக்கென் .*

***இன்ஸ்பெக்டர் ரவி*** *: IS IT ? அப்படியா ? பேய் எப்படிய்யா ? இருக்கும் என்றார் சிரித்துக்கொண்டே .*

***ஏட்டு கந்தசாமி*** *: தனியா இருக்கும்போது , திடீர்னு நம்ம கண்ணு முன்னாடி , எதோ ஒரு உருவம் வந்துட்டு போன மாதிரி இருக்கும் சார் ! . அவ்ளோதான் ரெண்டு நாளைக்கு தூக்கம் வராது . எந்த வேலையும் பண்ண முடியாது . அதனால தான் சார் நாம் எப்பவுமே தனியா இருக்கிறதில்ல .*

***இன்ஸ்பெக்டர் ரவி*** *: மெல்ல சிரித்தவாறே , அப்ப கும்பல்லயே கோவிந்தா போட்டுட்டு இருக்கன்னு சொல்லு ..... சரி அத விடு . குமாரசாமி பேயடிச்சு.... செத்துப்போய்ட்டதா சொல்றாங்களே , பேய்க்கும் அவருக்கும் என்ன சம்பந்தம் ? எந்த பேய் அவர சாகடிச்சது ?*

**ஏட்டு கந்தசாமி** : *சார் ! கொஞ்ச நாளைக்கு முன்னால , தூக்குப்போட்டு செத்துப் போன வெண்ணிலாப் பொண்ணு தான் பேயா வந்து இதையெல்லாம் பண்ணீட்டு இருக்கிறதா சொல்றாங்க .*

**இன்ஸ்பெக்டர் ரவி** : *சரி ! அந்த வெண்ணிலாங்கற பொண்ணுக்கும் , குமாரசாமிக்கும் ஏதாவது முன்விரோதம் , பிரச்சனைன்னு இருந்துச்சா ?*

**ஏட்டு கந்தசாமி** : *இல்ல சார் ! அதெல்லாம் ஒன்னும் இல்ல .*

**இன்ஸ்பெக்டர் ரவி** : *அப்புறம் எப்படிய்யா ! ஒரு LOGIC க்கே இல்லாம இதையெல்லாம் நம்புறீங்க .*

**ஏட்டு கந்தசாமி** : *சார் ! இதுல கூடவா LOGIC பாக்குறீங்க .*

**இன்ஸ்பெக்டர் ரவி** : *நிரூபணம் ஆகாத எந்த விசயத்தையும் நான் நம்பறதே இல்ல . குறிப்பா*

இந்த சாமி , பேய் , ஆவி , இந்த மாதிரி விசயங்கள நான் என்னிக்குமே நம்ப மாட்டேன் என்றார் .

நேரம் இரவு 11.3 o-ஐத் தாண்டியிருந்தது . நெடுஞ்சாலையில் கொஞ்ச தூரப்பயணம் . சற்று தொலைவில் **கொள்ளிடம் டீ - ஸ்டால்** என்ற பெயர் பலகையைப் பார்த்தவுடன் , வண்டியை ஓரங்கட்டினார் ஏட்டு கந்தசாமி . இருவரும் இறங்கி டீக்கடையை நோக்கி நடந்தனர் . கந்தசாமியைப் பார்த்தவுடன் , வாங்க சார் ! என்று சிரித்தவாறே வணக்கம் வைத்தார் டீக்கடைக்காரரர் .

***டீக்கடைக்காரரர்*** : சார் ! இவரு யாரு ?

***ஏட்டு கந்தசாமி*** : இவர்தான்யா நம்ம ஊருக்கு , புதுசா வந்துருக்கிற இன்ஸ்பெக்டர் .

***டீக்கடைக்காரரர்*** : சார் ! வணக்கம் ! என்று சொல்லி கையில் டீ கிளாஸ்களோடு வந்து நின்றிருந்தார் .

இருவரும் டீயை வாங்கிக்கொண்டு , வெளியே போலீஸ் ஜீப்புக்கு பக்கத்தில் வந்து நின்று கொண்டிருந்தார்கள் .

**இன்ஸ்பெக்டர் ரவி** *:  இன்னும் ஸ்டேஷன் போறதுக்கு எவ்ளோ நேரம் ஆகும் ?*

**ஏட்டு கந்தசாமி** *: சார் ! இன்னும் ஒரு கால்மணி நேரமமாவது ஆகும் சார்.*

**இன்ஸ்பெக்டர் ரவி** *: ஹ்ம்ம் !!! . ஆமா !! அந்த வெண்ணிலாங்கற பொண்ணு யாரு ?*

**ஏட்டு கந்தசாமி** *: சார் ! அது வந்து ........ நம்ம ஊர்த்தலைவர் (மாத்தூர்) தவபுண்ணியம் ஐயாவோட , பையன் கலையரசனும் , அந்த வெண்ணிலாங்கற பொண்ணும் ரெண்டு வருசமா உயிருக்குயிரா காதலிச்சுருக்காங்க . இது பையன் வீட்டுக்கு எப்படியோ தெரிஞ்சிருச்சு .... பொண்ணு வேற ஜாதிங்கிரதால , பையன் வீட்டுல கடுமையான எதிர்ப்பு ...... இருந்தாலும் ..... கல்யாணம் பண்ணா , அந்தப் பொண்ணத்தான் கல்யாணம் பண்ணுவேன்னு ,*

கலையரசன் தம்பி தீர்க்கமா சொல்லியிருக்காரு .... வேற வழியே இல்லாம , தவபுண்ணியம் ஐயா , அவரோட நண்பர்கள் சிவநேசன் , ராமலிங்கம் , அப்புறம் ஊர்க்காரங்களையும் கூட்டிட்டுப் போய் , அந்தப் பொண்ணோட , அப்பா அம்மாவ அடிச்சு மெரட்டிருக்காங்க . ஒரு ஊரே அவங்களுக்கு எதிரா வந்து , நின்னதப் பாத்து , இடிஞ்சு போய்ட்டாங்க அவங்க ரெண்டு பேரும் . அதத் தாங்கிக்க முடியாம , அந்த பொண்ணு , லெட்டர் எழுதி வெச்சுட்டு , தற்கொலை பண்ணிருச்சு . லெட்டர்ல , கடைசில மீண்டும் சந்திக்க வாய்ப்பிருந்தால் , மீண்டு வருவேன்னு அந்தப் பொண்ணு எழுதீர்ந்தது . இத வெறும் சாதாரணமாத் தான் நாங்க எடுத்திருந்தோம் ......... ஆனா கொஞ்ச நாளைக்கு அப்புறம் தான் ,..... லெட்டர்ல அந்த பொண்ணு எழுதீர்ந்த , சில வார்த்தைகளோட அர்த்தமே , எங்களுக்கு புரிய ஆரம்பிச்சுச்சு ... ஊர்ல பல பேர் , பல விதமான அமானுஷ்யமான விசயங்களைப் பார்த்திருகிறாங்க . தீடீர்னு ஒரு உருவம் , நம்மளத் தாண்டிப் போன மாதிரி இருக்கும் .

இரவு நேரங்கள்ல , வீட்டுக் கதவ யாரோ தட்டுற மாதிரி , சத்தம் கேக்கும் . கதவத் திறந்து பார்த்தா , யாரும் இருக்க மாட்டாங்க . குமாரசாமி ஐயா இறந்து போனதும்கூட , ராத்திரி 8 மணிக்கு மேலதான் . இதுனாலதான் எங்க ஊர்ல , ராத்திரி 7 மணில இருந்து , காலைல 6 மணி வரைக்கும் , யாரும் வீட்ட விட்டு வெளியே வர்றதில்ல .

**இன்ஸ்பெக்டர் ரவி** : ஹ்ம்ம் !!! சரி வண்டிய எடு , ஸ்டேஷன் போலாம் . இருவரும் ஏறி அமர்ந்தவுடன் , போலீஸ் ஜீப் காற்றைக் கிழித்துக்கொண்டு பறந்தது . கொஞ்ச தூரம் சென்றவுடன் , அகல்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட ஒரு கட்டிடம் , சாலையில் இருந்து ஒரு கிலோமீட்டர் தொலைவில் வண்ணமயமாகக் காட்சியளித்தது . அகல்விளக்குகளின் வெளிச்சம் , அந்த கட்டிடத்தின் அழகை மெருகூட்டியிருந்தது . அதைப் பார்த்தவுடன் , இன்ஸ்பெக்டர் ரவி ,

“ யோவ் ! கந்தசாமி . என்ன பங்களாய்யா இது ! . பார்க்கவே ரொம்ப அருமையா இருக்குது ......“

வண்டியின் வேகத்தை சற்று குறைத்த ஏட்டு கந்தசாமி ,

“ சார் ! அது ஒரு ஆசிரமம் , அதுக்கு பேரு அன்பாலயம் . வேதாந்த சாமிகள்ங்கறவர் தான் , அந்த ஆஸ்ரமத்த நடத்துறாரு . ரொம்ப சக்திவாய்ந்த சாமியார் சார் அவரு . எங்க ஊர்ல சில அமானுஷ்ய நடமாட்டங்கள் இருக்குன்னு , அவர் தான் மொதல்ல கண்டுபிடிச்சாரு . கொஞ்ச நாளைக்கு யாரும் , இரவு நேரங்கள்ல , வெளியே வரவேண்டாம்னு அவர் தான் சொல்லியிருந்தார் சார் ! ..”

**இன்ஸ்பெக்டர் ரவி :** ஹ்ம்ம் !!! ஓகே !......... அப்ப அவர கண்டிப்பா நாம MEET பண்ணியே ஆகணும் ......

கிட்டத்தட்ட பத்து நிமிடப் பயணம் . தூத்தூர் காவல் நிலையம் ... என்ற பெயர் பலகை போலீஸ் ஜீப்பின் வெளிச்சத்தால் , மின்னிட்டுத் தெரிந்தது . இருவரும் இறங்கி , போலீஸ் ஸ்டேஷனுக்குள் நுழைந்தார்கள் . தூங்கிக் கொண்டிருந்த , இரவு நேர பாதுகாப்பு

*போலீஸ்காரர்கள் , திடீரென்று எழுந்து சல்யூட்டுடன் எதிர்பட்டார்கள் . தூக்கக் கலக்கம் அவர்கள் கண்களில் , தெரிந்திருந்தது . அவர்களைக் கையமர்த்திய இன்ஸ்பெக்டர் ரவி , கந்தசாமியைப் பார்த்து ,*

*“ மாத்தூர் கிராமத்துல நான் STAY பண்றதுக்கு ஒரு வீடு கேட்ருந்தேனே ... என்னாச்சு ? .... ” என்றார் .*

***ஏட்டு கந்தசாமி** : சார் ! வீடெல்லாம் ரெடி பண்ணியாச்சு . இன்னிக்கு மட்டும் இங்க ரெஸ்ட் எடுங்க .. காலைல அங்க போய்ப் பாத்துக்கலாம் ..*

*சார் ! அப்படியே நான் கௌம்புறேன் சார் ... என்றார் தலையை சொரிந்து கொண்டே .*

***இன்ஸ்பெக்டர் ரவி** : ஹ்ம்ம் ! சரி ! ... நாளைக்கு காலைல ஆறு மணிக்கு வந்து என்ன PICK UP பண்ணிக்கோங்க ..... GOOD NIGHT என்றவர் , அங்கிருந்த சாய்வு நாற்காலியில்*

*சாய்ந்தவாறே , அப்படியே மேசையில் கால் வைத்து  மல்லார்ந்தார் ..*

*காலைல ஆறு மணிக்கே வரணுமா !  என அதிர்ச்சியடைந்தவராய் , தன் கைக் கடிகாரத்தைப் பார்த்தார் ஏட்டு கந்தசாமி . மணி 12.00 –ஐக் காட்டியிருந்தது . வேக வேகமாகப் புறப்பட்டிருந்தார் ....*

# 4

அடுத்த நாள் காலை 6.3 o மணி . பொழுது புலர்ந்திருந்தது . ஏட்டு கந்தசாமி அவசர அவசரமாக வந்து , வண்டியை நிறுத்தி விட்டு , காவல் நிலையத்துக்குள் நுழைந்திருந்த அவருக்கு , ஒரே ஆச்சர்யம் . நேற்றைய ஒரே இரவில் , காவல் நிலையம் தூசி தட்டப்பட்டு , மிடுக்காக காட்சியளித்திருந்தது . காலையில் வீட்டுக்குச் செல்ல தயாராயிருந்த , இரவு நேரக் காவல்துறையினர் ,

“ DUTY ல JOIN பண்ண மொதல் நாளே , எங்கள இப்படி நல்லா வேலை வாங்கிட்டாருய்யா ! என்று கந்தசாமியின் காதுகளில் , முனுமுனுத்துக் கொண்டு சென்றனர் . காக்கிச் சட்டையில் கம்பீரமாகத் தெரிந்தார் இன்ஸ்பெக்டர் ரவி . குமாரசாமி கேஸ் விவரங்களை ஆராய்ந்து கொண்டிருந்தார் . உள்ளே சென்ற கந்தசாமி , GOOD MORNING-உடன் SALUTE அடித்தார் .

**இன்ஸ்பெக்டர் ரவி** : *வாங்க கந்தசாமி ! GOOD MORNING .... உக்காருங்க .*

*குமாரசாமி கேஸப் பத்தி , பழைய இன்ஸ்பெக்டர் சுந்தரம் தயார் பண்ண ரிப்போர்ட்டத்தான் இப்பப் பாத்துட்டு இருக்கேன் ...... எனக்கு அந்த வேளாண் ஆசிரியர் குமாரசாமியின் பிரேதப் பரிசோதனை ரிப்போர்ட்ல , சில சந்தேகங்கள் இருக்கு . இது பற்றி , இந்த கேஸ்ல சில முக்கியமான விவரங்கள் சுந்தரத்திற்கு தெரிய வாய்ப்பிருக்கு ..... அதனால , இன்னிக்கு சாயந்தரம் சுந்தரத்தோட , நாம போன்ல இது பத்தி பேசியாகணும். ..... சரி ஓகே ... அதெல்லாம் இருக்கட்டும் ... எனக்கு அந்த செத்துப்போன , வெண்ணிலாவோட போட்டோ வேணும் ..*

**ஏட்டு கந்தசாமி** : *இதோ எடுத்துத் தர்றேன் சார் ! என்று , பழைய ரெகார்ட்ஸ்களைப் புரட்டிப் பார்த்த அவர் , வெண்ணிலாவின் புகைப்படத்தைக் கண்டதும் , சார் இதான் சார் அந்தப் பொண்ணோட போட்டோ , அப்புறம் இது அந்தப் பொண்ணு எழுதின கடிதம் ! என்று*

எடுத்து நீட்டினார். வயல் வரப்புகளில் அமர்ந்து, தண்ணீரைத் தடவிக் கொண்டிருப்பதைப் போன்று வெண்ணிலாவின் புகைப்படம் எடுக்கப்பட்டிருந்தது. வயது கிட்டத்தட்ட 25 இருக்கும். கிராமத்து தேவதை போல் அழகாகக் காட்சியளித்திருந்தாள். அதைப் பார்த்துவிட்டு, அடுத்ததாக கடிதத்திற்குள் நுழைந்தார். வெள்ளைத் தாளில் சிவப்பு மையால் எழுதப் பட்டிருந்த எழுத்துக்கள், அவள் வாழ்க்கையின் கடைசி நிமிடங்களை பிரதிபலித்திருந்தது.

" அன்புள்ள அப்பா! அம்மாவுக்கு!

இது உங்கள் அன்பு மகளின் கடைசிக் கடிதம். சிறு வயதில் இருந்தே, நான் கேட்டதை எல்லாம், எனக்கு மறுக்காமல் தந்த உங்களிடம், நான் என் காதலை மட்டும், முற்றிலுமாக மறைத்து விட்டேன். நேரம் வரும்போது, எடுத்து சொல்லலாம் என்று நினைத்திருந்த எனக்கு, இந்தக் கடிதம் எழுதும் நேரமே, என் வாழ்க்கையின் கடைசி நேரம் என்பதை, என்னால் கணிக்க முடியவில்லை. ஊரார் மெச்சும் பிள்ளையாக, நான் வாழ

வேண்டும் என்று நினைத்த உங்களை, இன்று என் காதலால், அவர்களே காரி உமிழும்படி செய்து விட்டேன். என்னால் இன்று நீங்கள் தலை குனிந்து நின்றீர்கள். இப்படி நிகழும் என்று நான் கனவிலும் நினைக்கவில்லை. உங்களைப் பார்க்கக் கூடிய அருகதை கூட எனக்கு இல்லை. என்னை மன்னித்து விடுங்கள்.

என் காதலன் கலையரசனுக்கு,

ஜாதியும், வசதியும் தான், நம் காதலைத் தீர்மானிக்கின்றது என்றால், அப்படிப்பட்ட காதல் நமக்குத் தேவையேயில்லை. நம்முடைய காதலுக்கு எதிராக, ஊரே அணி திரண்டு நிற்கிறது. நம் காதல் கரை சேரும் என்கின்ற நம்பிக்கை, உனக்கே இல்லாத போது, அது எப்படி சாத்தியமாகும். உன்னுடைய நினைவுகளை, ... மறப்பதை விட, இறப்பதே சிறந்தது என்று நான் முடிவெடுத்து விட்டேன்.

*.......... மீண்டும் சந்திக்க வாய்ப்பிருந்தால் மீண்டு வருவேன் ........*

*இப்படிக்கு*

*உன்*

*வெண்ணிலா ...*

*என்று படித்து முடித்தார் இன்ஸ்பெக்டர் ரவி . அடுத்த நிமிடம் இருவரும் போலீஸ் ஜீப்பில் ஏறியிருந்தார்கள் .*

***ஏட்டு கந்தசாமி** : சார் ! இப்ப நாம எங்க போகப் போறோம் சார் ????...*

***இன்ஸ்பெக்டர் ரவி** : மாத்தூர் கிராமத்தலைவர் தவபுண்ணியம் வீட்டுக்கு ...*

*போலீஸ் ஜீப் ..... வேகம் எடுத்திருந்தது . சாலையோரத்தில் இருந்த மரங்களெல்லாம் , இவர்களுக்கு பின்னே வேகமாக சென்று கொண்டிருந்தன ................ 2 o நிமிடப் பயணம் . காலை **7.3 o** மணி . மாத்தூர் கிராமத்தின் எல்லையை அடைந்திருந்தார்கள் . அறிவியல்*

தொழில்நுட்பங்களை , அதிக அளவில் கண்டிராத ஒரு கிராமம் . எங்கு பார்த்தாலும் பச்சை பசேலென வயல்வெளிகள் .............. எந்த விதக் கவலையும் இல்லாமல் , ஒலி எழுப்பிக்கொண்டு , சுதந்திரமாகப் பறந்து சென்றுகொண்டிருக்கின்ற பறவைகள் கூட்டம் ...... ஏசுநாதரைப் போன்று , இடுப்பில் வெறும் வேட்டியுடன், தோளில் கலப்பைகளை சுமந்தபடி , உழவர்கள் ஒரு பக்கம் வயலில் இறங்கியிருந்தார்கள் . கிராமத்துப் பாட்டின் ஒரு வரியை ஒருவர் பாட , அதே வரியைப் , பின்னணியில் இருப்பவர்கள் ஒரு சேரப் பாடிக்கொண்டே , ஒருபுறம் நாற்று நடவும் பணி தொடர்ந்திருந்தது .

“ என்ன வளம் இல்லை இந்தத் திருநாட்டில் , ஏன் கையை ஏந்த வேண்டும் வெளிநாட்டில் , ஒழுங்காய் பாடுபடு வயற்காட்டில் .. உயரும் உன்மதிப்பு அயல்நாட்டில் “ என்ற அந்தக் காலத்துப் பாடல் வரிகளுக்கு , இந்த மாத்தூர் கிராமமே சாட்சியளித்திருந்தது .

சற்று நேரத்தில் , ஊர்த்தலைவர் தவபுண்ணியத்தின் தென்னந்தோப்பை நோக்கி போலீஸ் ஜீப் சென்று கொண்டிருந்தது .

**ஏட்டு கந்தசாமி :** என்ன சார் ! ஒரே மௌனமா இருக்கீங்க ....

**இன்ஸ்பெக்டர் ரவி :** உங்க ஊரோட அழகு என்ன மெய்சிலிர்க்க வைக்கின்றது . உழவன் சேற்றில் கால் வைத்தால் தான் , உன்னால் சோற்றில் கை வைக்க முடியும்ன்னு சும்மாவா சொன்னாங்க ! உங்க கிராமம் எனக்கு ரொம்ப பிடிச்சுருக்குய்யா .... என்று சொல்லிக்கொண்டிருக்கும்போதே தவபுண்ணியத்தின் வீடு வந்திருந்தது . தென்னந்தோப்பை ஒட்டி , ஒரு பெரிய மாடி வீடு தெரிந்தது . போலீஸ் ஜீப் சத்தம் கேட்டதும் , உள்ளே இருந்து , தவபுண்ணியத்தின் மகன் , கலையரசன் , இருண்ட முகத்தோடு எதிர்பட்டான் . அவனுடைய காதலின் வலியை , அவன் முகத்தில் நன்றாக உணர முடிந்திருந்தது .

***ஏட்டு கந்தசாமி*** *: தம்பி ! ஐயா வீட்ல இருக்காருங்களா என்றார் பவ்யமாக.*

***கலையரசன்*** *: அப்பா ! வாக்கிங் போயிருக்காரு .. உள்ள வாங்க என்று அவர்களை வீட்டுக்குள் அழைத்து சென்று , உட்கார வைத்து விட்டு , அவனுடைய அறைக்குச் சென்று விட்டான் .*

*தவபுண்ணியத்தின் மனைவி மரகதம் , இவர்களைப் பார்த்தவுடன் , வாங்க !........... என்றார் முகமலர்ச்சியுடன் . அவரு இப்பதான் வாக்கிங் போயிருக்காரு . இப்ப வந்துருவார் . என்ன சாப்ட்றீங்க ? காபியா ? டீயா ?*

*அதெல்லாம் ஒன்னும் வேண்டாங்கம்மா ! என்று இன்ஸ்பெக்டர் ரவி சொல்ல ஆரம்பிப்பதற்குள் , காபியே குடுத்துருங்கம்மா ! என்றார் ஏட்டு கந்தசாமி. சற்று நேரத்தில் , காபி டம்ளர்களில் இருந்து ஆவி பறந்திருந்தது .*

***ஏட்டு கந்தசாமி*** *: அம்மா ! தம்பி இப்ப எப்படி இருக்கிறாரு .. கொஞ்சம் பரவாயில்லையா ?*

**மரகதம் :** *எங்கப்பா ! நானும் என்னென்னவோ சொல்லிப் பாத்துட்டேன் . கேக்கவே மாட்டீங்கறான் . ராத்திரியெல்லாம் தனியா , அவனாவே பேசிட்டு இருக்கிறான் . கேட்டா வெண்ணிலாகூடதாம்மா பேசிட்டு இருக்கேன்கிறான் . நானும் எத்தனையோ டாக்டர்ஸ் கிட்ட காட்டிப் பாத்துட்டேன் . இது அந்தப் பொண்ணு இறந்த அதிர்ச்சிதான் , போற போக்குல சரியாயிருன்னுதான் எல்லாரும் சொல்றாங்க . ஆனா எனக்கு என்னமோ பயமாயிருக்குது . நீங்களே வந்து பாருங்க என்று கலையரசனின் அறையைக் காண்பித்தாள் .*

*மெத்தை மீது அமர்ந்துகொண்டு , வெண்ணிலாவின் புகைப்படத்தையே , பார்த்துக் கொண்டிருந்தான் கலையரசன் . சின்னச்சின்னதாக சிகரெட் துண்டுகள் ஆங்காங்கே சிதறிக் கிடந்திருந்தன . அறையின் சுவர் முழுவதும் , வெண்ணிலாவின் பெயரால் நிரம்பியிருந்தது .  ஏட்டு கந்தசாமி , மெல்ல கலையரசன் பக்கம் சென்று , அவன் தோள்களைத் தொட்டு ,*

*“தம்பி !!!! “ என்றார் .*

**கலையரசன் :** *(திடீரென்று திரும்பி )* *அவரையே உற்றுப் பார்த்தான் .*

**ஏட்டு கந்தசாமி :** *வெண்ணிலா ...........என்று ஆரம்பித்தவுடன் , கலையரசனின் முகத்தில் மெல்ல மகிழ்ச்சி தெரிந்தது .*

*" சொல்லுங்க சார் !! வெண்ணிலாவுக்கு ... என்னாச்சு என்றான் .*

*இன்ஸ்பெக்டர் ரவி : " தம்பி ! வெண்ணிலா ................ இப்ப உயிரோட இல்லைங்கற விஷயம் உங்களுக்குத் தெரியும்னு நெனைக்கிறேன் . " என்றார் தயக்கத்துடன் .*

*(அதைக் கேட்டவுடன் உரத்த குரலில் சிரித்தவாறே கலையரசன் ...)*

*" சார் ! யார் சொன்னது வெண்ணிலா செத்துப்போய்ட்டான்னு .. நீங்க உட்கார்ந்துட்டு இருக்கிற இதே இடத்துல தான் , நேத்து ராத்திரி , அவளும் உக்காந்து பேசிட்டுப் போனா .. யார ஏமாத்தப் பாக்குறீங்க ..??????          என்*

அப்பா அம்மாதான் என்ன ஏமாத்த நெனைக்கிறாங்க ..... இப்ப புதுசா வந்துருக்கிற நீங்களுமா ............. என்றான் .

அதற்கும்மேல் எதுவும் பேச மனதில்லாமல், இருவரும் நடந்து , வெளியே வராந்தாவில் வந்து உட்கார்ந்திருந்தார்கள் .

அந்த நேரம் பார்த்து , உடற்பயிற்சிகளை முடித்துவிட்டு , வியர்த்து வழிந்த முகங்களுடன் , தவபுண்ணியமும் , அவர் சகாக்களான சிவநேசனும் , ராமலிங்கமும் வந்து கொண்டிருந்தார்கள் . அவர்களை நெருங்கியதும் ,

ஐயா ! வணக்கம் என்றார் ஏட்டு கந்தசாமி . இவர்தான்யா நம்ம ஊருக்கு புதுசா வந்துருக்கிற இன்ஸ்பெக்டர் ! என்றார் பௌவ்யமாக . இன்ஸ்பெக்டர் ரவி , தவபுண்ணியத்திடம் , கை குலுக்கி விட்டு , சார் ! நான் ரவி என்றார் .

**தவபுண்ணியம் :** *ஹ்ம்ம் .. வணக்கம் .... உங்களப்பத்தி நெறையா கேள்வி பட்ருக்கேன் ...... அப்புறம் எங்க ஊர் எல்லாம் எப்படி இருக்குது ....*

**இன்ஸ்பெக்டர் ரவி :** *உங்க ஊர் எனக்கு ரொம்ப பிடிச்சிருக்கு . இங்க வந்ததுக்கப்புறம் , இயற்கையோடவே வாழ்ற மாதிரி ஒரு FEELING இருக்குது சார் . ஆனா ........... என்று இழுத்தார் .*

**சிவநேசன் :** *அப்புறம் என்ன சார் ! அந்த ஆனா ............????*

**இன்ஸ்பெக்டர் ரவி :** *................... அது ஒன்னும் இல்ல . இந்த ஊர்ல சொல்றமாதிரி இந்த ஆவி , பேய்ங்கற கட்டுக் கதைகளைத்தான் என்னால நம்ப முடியல .*

**சிவநேசன் :** *( ..... சிரித்துக்கொண்டே .....) சார் ! நீங்க என்ன நாத்திகரா ????....*

**இன்ஸ்பெக்டர் ரவி :** *நான் நாத்திகன்ல்லாம் கெடையாது சார் ....... நிருபீக்க முடியாத*

எதையுமே நான் நம்பறதேயில்ல . அவ்ளோதான் ..... வேளாண் ஆசிரியர் குமாரசாமியின் மரணம் , ஒரு திட்டமிட்ட கொலைன்னு தான் நான் நெனைக்கிறேன் .................... என்னால முடிஞ்சவரைக்கும் அதை நிருபீக்க முயற்சி பண்ணுவேன் . இதுல எப்படிப்பட்ட பிரச்சனை வந்தாலும் நான் சந்திக்கத் தயாரா இருக்கேன் சார் .

*( ..... தவபுண்ணியம் முகத்தில் பிரளயம் தெரிந்திருந்தது ....)*

சற்று சுதாரித்துக் கொண்ட ராமலிங்கம் பேசத் தொடங்கினார் .

***ராமலிங்கம் :*** இன்ஸ்பெக்டர் சார் ! நான் உங்க மன தைரியத்தப் பாராட்றேன் ... போலீஸ்காரன்னா ! இப்படித்தான் இருக்கணும் . ஆனா அதுக்காக எல்லா விசயத்துலயும் , இந்த மாதிரி குருட்டு நம்பிகையை வைக்கக் கூடாது . மொதல்ல நாங்களும் இந்த விசயத்தை நம்பல . நேர்ல பாத்ததுக்கப்புறம் தான் , எங்களுக்கே நம்பிக்கை வந்துச்சு .

**இன்ஸ்பெக்டர் ரவி** : அப்படி என்ன பாத்தீங்க .. எங்கிட்ட சொல்லுங்க . இந்த கேஸ்ல எனக்கு உபயோகமாயிருந்தாலும் இருக்கலாம் .

இதுவரை பேசாமல் இருந்த தவபுண்ணியம் பேச ஆரம்பித்தார் .

**தவபுண்ணியம்** : தம்பி ! நீங்க இப்பதான இங்க வந்துருக்கீங்க . போகப் போகப் பாருங்க . உங்களுக்கே தெரியும் . பழைய இன்ஸ்பெக்டர் சுந்தரம் இதே மாதிரி தான் பேசிட்டுத் திரிஞ்சார் .. இப்பப் பாருங்க ட்ரான்ஸ்பர் வாங்கிட்டு போயிட்டாரு ... ஏன் போனார்ங்கிற காரணம் யாருக்குமே தெரியல . எதுக்கும் நீங்களும் கொஞ்சம் ஜாக்கிரதையா இருங்க என்றார்..

**இன்ஸ்பெக்டர் ரவி** : (சற்று புன்னகைத்தவாறே) .......... நான் பாத்துக்கறேன் .. கூடிய சீக்கிரம் , இந்த புதிருக்கான விடையை நான் கண்டுபுடிச்சுக் காட்றேன் சார் ! என்றார் பெருமிதத்தோடு .

***தவபுண்ணியம் :*** *ஹ்ம்ம் .... வாழ்த்துக்கள் என்றார் வெற்றுப்புன்முறுவலுடன் ...*

*இன்ஸ்பெக்டர் ரவியும் , ஏட்டு கந்தசாமியும் போலீஸ் ஜீப்பில் ஏறிப் புறப்பட்டிருந்தார்கள் . அவர்கள் கிளம்பியவுடன் ,*

***ராமலிங்கம் :*** *தலைவரே ! இவன இப்படியே விட்ரக்கூடாது . இன்னிக்கு ராத்திரி , நாம பண்ற வேலையில , அவன் நாளைக்கு காலைலயே , தானா ஊர விட்டே ஓடிருவான் .*

***தவபுண்ணியம் :*** *இவன் சாதாரணமான ஆள் மாதிரி தெரியல . இவன்கிட்ட கொஞ்சம் ஜாக்கிரதையா இருக்கங்க . எதா இருந்தாலும் , யோசிச்சுப் பண்ணுங்க . அப்புறம் , இன்னும் ரெண்டு நாள்ல , அந்த உரம் தயாரிக்கிற கம்பெனிக்காரங்க .. **(NEXTGEN FERTILIZERS LTD)** கூட ஒரு மீட்டிங் இருக்குது . மறந்திராதீங்க .*

# *5*

*நேரம் காலை 11 மணி . வேதாந்த சுவாமிகளின் அன்பாலயத்துக்குள் , போலீஸ் ஜீப் நுழைந்திருந்தது . நாலாப்புறமும் மரங்களடர்ந்து , பறவைகள் சூழ , ஒரு எழில்மிகு பூங்காவாகக் காட்சியளித்தது அன்பாலயம் . அன்பாலய பாதுகாவலர்கள் , போலீஸ் வாகனத்தைக் கண்டதும் , வணக்கத்துடன் , வலது புறமாக கையசைத்து , போர்டிகோவுக்கு வழி காட்டினர் . போர்டிகோவில் வண்டியை நிறுத்தி விட்டு , இருவரும் வெளியே நடந்தார்கள் .*

*ஆங்காங்கே கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டு , அன்பாலயத்தின் நடவடிக்கைகள் கண்காணிக்கப் பட்டிருந்தது . ஒய்வறைகளில் பக்தர்களின் கூட்டம் அதிகமிருந்தது .  நன்றாக வழித்து எடுக்கப்பட்ட தலையுடன் கூடிய அன்பாலய நிர்வாகிகள் , அங்கு வரும் பக்தர்களுக்கு*

*வழிகாட்டிக்கொண்டிருந்தனர் . இன்ஸ்பெக்டர் ரவி அன்பாலாயத்தின் ஒவ்வொரு அசைவையும் , கண்காணித்துக் கொண்டே வந்தார் . அன்பாலய நிர்வாகி ஒருவர் , இவர்கள் இருவரையும் பார்த்து , சார் ! நீங்க யாரப் பார்க்கணும் என்றார் ..*

***ஏட்டு கந்தசாமி*** *: நாங்க வேதாந்த சுவாமிகளப் பாக்கணும் ...*

***அன்பாலய நிர்வாகி*** *: அதோ அந்த கலையரங்கத்தில் தான் , சுவாமிகள் பிரசங்கத்தில் இருக்கிறார் .. இன்னும் 1 o நிமிஷத்துல பிரசங்கத்த முடிச்சுடுவார் . நீங்க உள்ள போய் உட்காருங்க .. நான் சுவாமிகள் கிட்ட விசயத்த சொல்றேன் .. என்றார்*

*இருவரும் நடந்து உள்ளே சென்றார்கள் . துளசிதாசர் கலையரங்கம் என்று பெயரிடப்பட்டிருந்த , அந்த மண்டபத்துக்குள் நுழைந்திருந்தார்கள் .*

மனித வாழ்க்கையின் , உன்னதமான கருத்துக்கள் , அந்த மண்டபத்தின் சுவர்களில் பொறிக்கப்பட்டிருந்தன . அதன் உட்பக்க சுவரில் எழுதப்பட்டிருந்த ஒரு வாசகம் , அவர்களைப் பெரிதும் கவர்ந்திருந்தது .

“ அழகாய் இருக்கிற பொருளை நீங்கள் விரும்புவதில்லை . நீங்கள் விரும்புகின்ற பொருள் உங்களுக்கு , அழகாய் இருக்கிறது ... “ .

அதைப் படித்துப் பார்த்துவிட்டு , இருவரும் நடந்தார்கள் .

கொஞ்ச தூரம் உள்ளே நடந்ததும் , ஆழ்ந்த நிசப்தத்துக்கு நடுவே , வேதாந்த சுவாமிகள் உரை நிகழ்த்திக் கொண்டிருந்தார் . நம்பிக்கை தரக்கூடிய ஒரு குரலால் , அந்த கலையரங்கத்தில் இருந்தவர்களைத் தன் வசப்படுத்தியிருந்தார் சுவாமிகள் .

மிகுந்த உற்சாகத்துடன் , பேசிக் கொண்டிருந்த அவர் ,

“ ஜனனம் , மரணம் இந்த இரண்டுமே மனித வாழ்க்கையில் , மறுக்க முடியாத இரு தருணங்களாகும் . இந்த பூமியில் பிறப்பெடுத்த ஒவ்வொருவருக்கும் , மரணம் ஒரு நாள் சம்பவிக்கத்தான் போகின்றது . அந்த மரணத்திற்கான யாத்திரைதான் , மனிதனின் இறுதியாத்திரை . மரணத்தினால் , சில பாவங்கள் தீரும் . மரணத்தினால் , சில சாபங்கள் தீரும் . ஒரு உயிர் , இந்த பூமியில் ஜெனித்த உடனேயே , அதனுடைய இறுதியாத்திரைக்காண கடிகார முள் ஓட ஆரம்பித்துவிடுகின்றது . எந்த நேரத்திலும் , அந்த கடிகார முள்ளின் ஓட்டம் நின்று விடலாம் . எனவே நாம் , நம்முடைய இறுதியாத்திரைக்காகத் எப்பொழுதும் தயாராயிருக்க வேண்டும் . “ எதற்கும் தயாராயிருங்கள் . உங்களிடம் மலை போன்ற உறுதியிருந்தால் , பாம்பின் விஷம் கூட , உங்கள் முன் சக்தியற்றுப் போய்விடும் . இந்த அளவிலே , இன்றைய பிரசங்கத்தை முடிக்கிறேன் நன்றி வணக்கம் “. என்று பேசி முடித்திருந்தார் . பிரசங்கத்தைக் கேட்ட பக்தர்கள் , புத்துணர்ச்சி

பெற்றவர்களாய், கலைந்து சென்று கொண்டிருந்தனர். இன்ஸ்பெக்டர் ரவியும், ஏட்டு கந்தசாமியும், வேதாந்த சுவாமிகளின் பக்கம் சென்று, வணக்கம் வைத்தனர். புன்னகையான முகத்துடன் அவர்களை வரவேற்ற சுவாமிகள், அவர்கள் இருவருக்கும், எதிரே இருந்த நாற்காலியை, அடையாளம் காட்டினார். இருவரும் அமர்ந்தவுடன், ஏட்டு கந்தசாமி பேச ஆரம்பித்தார்.

**ஏட்டு கந்தசாமி** : சுவாமிஜி ! இவர்தான் நம்ம ஊருக்குப் புதுசா வந்துருக்கிற இன்ஸ்பெக்டர். அவர் கேஸ் விசயமா, சில சந்தேகங்கள உங்ககிட்ட கேக்கணும்னு நெனைக்கிறார்.

புன்முறுவலுடன், இன்ஸ்பெக்டர் ரவியைப் பார்த்த, வேதாந்த சுவாமிகள் “ தயக்கமில்லாம, உங்க கேள்விகளக் கேளுங்க ...” என்றார்.

உடனே இன்ஸ்பெக்டர் ரவி, ஏட்டு கந்தசாமியை திரும்பி ஒரு பார்வை பார்த்தார். உடனே கந்தசாமி, முகத்தைத் திருப்பிக்கொண்டு, அந்த மண்டபத்தின்

*கதவுகளுக்குப் பக்கத்தில் போய் நின்று கொண்டார் .*

***இன்ஸ்பெக்டர் ரவி*** *: மாத்தூரில் நடக்கின்ற சில விசயங்கள் ரொம்ப விசித்திரமா இருக்கு . ஏதோ அமானுஷ்ய நடமாட்டம் இருக்குன்னு , நீங்களே கூட சொல்லிருக்கீங்க .*

*" ஆமாம் ! நான் தான் சொன்னேன் ........"*

***இன்ஸ்பெக்டர் ரவி*** *: அப்படி அந்த ஊர்ல , என்னதான் நடக்குது ?*

***சுவாமிகள்*** *: " ஹ்ம்ம் !!! ............. அந்த ஊர்ல , நிச்சயமா , ஏதோ ஒரு அமானுஷ்யம் இருக்கு . போன மாசம் .....   அந்த ஊருக்கு பிரசங்கத்துக்கு போன அன்னிக்கே , என்னால அத உணர முடிஞ்சது .   நானும் , எனக்குத் தெரிந்த பரிகாரங்கள பண்ணிப் பாத்துட்டேன் . இதுவரைக்கும் எந்த பலனும் இல்ல . கடைசியா நம்ம முன்னோர்கள் , எழுதி வச்சிருந்த , சில புத்தகங்கள புரட்டிப் பார்த்தபோது தான் , எனக்கு ஒரு தீர்வு கெடச்சுச்சு ..... அதான் வர்ற*

*பௌர்ணமியன்று, ஒரு அர்த்த சாம யாகம் பண்ணலாம்னு இருக்கிறேன். அதற்கான முயற்சிகளத்தான் இப்ப பண்ணிட்டு இருக்கிறேன். அதப் பண்ணிட்டன்னா! என்னால அந்த அமானுஷ்யத்தக் கட்டுப்படுத்த முடியும். பௌர்ணமி வர்றதுக்கு இன்னும் 3 நாட்கள்தான் இருக்கு. அதுவரைக்கும் எல்லாரையும், கொஞ்ச நாளைக்கு, எச்சரிகையா இருக்க சொல்லிருக்கிறேன் ".*

**இன்ஸ்பெக்டர் ரவி** : *அது அப்படி! உங்களுக்கு மட்டும் அந்த அமானுஷ்யம் தெரியுது? ....*

**வேதாந்த சுவாமிகள்** : *(.........கொஞ்சம் நேரம் யோசித்துவிட்டு..........) அது ஒரு உள்ளுணர்வுதான் ...... எங்கள மாதிரி ஆளுங்களுக்கு ஏற்படுகின்ற ஒரு, சாதாரண உணர்வு தான் அது.*

*(.........மெல்ல சிரித்தார் இன்ஸ்பெக்டர் ரவி.........)*

**இன்ஸ்பெக்டர் ரவி** : " அப்ப குமார சாமியக் கொன்னது அந்த அமானுஷ்ய ஆவி தான்னு சொல்றீங்க . "

**வேதாந்த சுவாமிகள்** : இருக்கலாம் ........ இல்லாமலும் இருக்கலாம் . இதுபோன்ற சம்பவங்கள் மீண்டும் நடக்கலாம் ..... இன்னும் என்னோட வார்த்தைகள்ல , உங்களுக்கு நம்பிக்கை வரலைன்னு நெனைக்கிறேன் .

**இன்ஸ்பெக்டர் ரவி** : இல்ல சுவாமிஜி ! எனக்கு சுத்தமா நம்பிக்கை இல்ல ... இந்த உலகத்துல இருக்கிற எல்லாவற்றுக்கும் , ஒரு அறிவியல் பூர்வமான சிந்தனை இருக்கும்னு நெனைக்கிறவன் நான் . கடவுள் இல்லைன்னு சொன்ன , ஈ.வெ.ரா.பெரியார நாம நாத்திகன்னு சொன்னோம் . ஆனா .......... இந்த உலகத்துல , கடவுளே இல்லைன்னு ஒரு அறிவியல் விஞ்ஞானி ஆதாரத்தோடு சொல்லிருக்காரு ................ அவர் பேரு , ஸ்டீபன் வில்லியம் ஹாக்கிங் !!! . அது மட்டுமில்லாம , நம்முடைய மரணத்துக்கப்பால் , எதுவுமே இல்லை .... சொர்க்கம் , நரகம்ன்னு

சொல்றதெல்லாம் சும்மா ஒரு கட்டுக்கதைன்னு , அவருடைய ஆய்வுல சொல்றாரு ............... கடவுள் இந்த உலகத்த படைக்கல . *BIG BANG THEORY ((*பெரு வெடிப்புக் கொள்கை*))* மூலமாத் தான் , இந்த உலகம் உருவானதுன்னு இப்ப , அறிவியல் கண்டுபிடிச்சிருக்கு . இதயெல்லாம் பாக்கும்போது , எனக்கு மாத்துார்ல நடக்கின்ற சம்பவங்கள் வெறும் வேடிக்கையாய்த்தான் தெரியுது .. இப்படி உலகம் எங்கயோ போய்க்கொண்டிருக்கிறது . ஆனா இன்னும் நாம , ஆவி , அமானுஷ்யம்ன்னு சொல்லிட்டு இருக்கோம் .

*(....*சிறிது நேர மௌனத்திற்கு பிறகு பேச ஆரம்பித்தார் வேதாந்த சுவாமிகள்*....)*

**வேதாந்த சுவாமிகள்** *:* நீங்க சொன்னதெல்லாம் சரி தாங்க சார் ..... இன்றைக்கு அறிவியல் கண்டுபிடிக்கின்ற , ஒவ்வொன்றுமே நமக்கு ஆச்சரியமாத்தான் தெரியும் ..... *BIG BANG THEORY* ப் படி தான் இந்த உலகம் உருவானதுங்கற கூற்று , பரவலாக ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்று .... அதை நான்

மறுக்கவில்லை . ஆனா , நம்ம பண்டைய கால , வேதங்களில் , இந்த உலகம் எப்படி உருவானதுங்கறதப் பத்தின குறிப்புகள் இருக்கின்றது . *BIG BANG THEORY* யின் பல கோட்பாடுகள் , வேதங்கள்ல சொல்லப்பட்டிருக்கிற கருத்துக்களோடு ஒத்துப் போகின்றது . நீங்க சொல்றது வெறும் , ஒரு உலகத்தைப் பற்றி தான் , ஆனா வேதங்கள்ல , இதே போல பல பிரபஞ்சங்கள் இருந்திருக்கின்னு சொல்லப்பட்டிருகின்றது .....

இவை எல்லாவற்றையும் விட , இன்று , அதி நவீன கருவிகளுடன் , விண்வெளிக்குச் சென்று , அங்கு இருக்கின்ற கிரகங்களைப் பற்றி , அறிவியலாளர்கள் ஆராயச்சி செய்து கொண்டிருக்கின்றார்கள் ....... ஆனால் அன்று ,,,,,,,,,,, எந்த வகையான அறிவியல் சாதனங்களுமே இல்லாத அந்தக் காலத்திலயே , கோள்களைப் பற்றித் துல்லியமாகக் கணித்த , ஆர்யப்பட்டாவின் வானவியல் சாஸ்திரம் ஒரு மிகப்பெரும் ஆச்சர்யம் . இதுமாதிரி இன்னும் எத்தனையோ இருக்கின்றது . என்றைக்குமே

ஆன்மீகமும் , அமானுஷ்யமும் அறிவியலுக்கு அப்பாற்பட்டதுங்கறத விசயத்த மொதல்ல நீங்க புரிஞ்சுக்கணும் .

பதில் பேச மனமில்லாமல் நின்ற இன்ஸ்பெக்டர் ரவி ,

சுவாமிஜி ! உங்ககிட்ட பேசினதுல ரொம்ப மகிழ்ச்சி . நான் கெளம்புறேன் . வேறு ஏதாவதுன்னா நான் உங்கள CONTACT பண்றேன் . THANK YOU சுவாமிஜி .

மெல்ல சிரித்த சுவாமிகள் ,

“ தம்பி ! எதுக்கும் நீங்களும் கொஞ்சம் ஜாக்கிரதையா இருங்க !          ஏன்னா ! இது வெறும் சாதாரண விஷயமல்ல “ .

**இன்ஸ்பெக்டர் ரவி** : அது என்னவோ சுவாமிஜி ! நீங்க சொன்ன இதே பதிலத்தான் மாத்தூர் கிராமத் தலைவர் தவபுண்ணியமும் சொன்னார் . ஒரு கிராமத்தலைவரே இப்படி பயந்திட்டு

இருந்தா , அப்புறம் ஊர் மக்கள் எப்படி பயப்படாம இருப்பாங்க .

சற்றே முகம் மாறிய வேதாந்த சுவாமிகள் , சற்று இறுக்கமான தொனியுடன் ,

“ யாரு ! அந்த தவபுண்ணியம் பயப்பட்றான்னா…..... சொல்றீங்க . கண்டிப்பா இருக்காது ..... ஏன்னா ! காசு மேல அதிகமா ஆசை வச்சுருக்கிற எவனுக்கும் , பயம்ங்கற ஒன்னு அறவே இருக்காது .

வேதாந்த சுவாமிகளின் முகமாற்றத்தை , அடையாளம் கண்ட இன்ஸ்பெக்டர் ரவி , மேற்கொண்டு விசாரிக்கலானார் .

**இன்ஸ்பெக்டர் ரவி** : ஏன் சுவாமிஜி ? அவருக்கும் உங்களுக்கும் ஏதாவது தனிப்பட்ட பிரச்சனையா ?

**சுவாமிகள்** : அப்படியெல்லாம் ஒன்னும் இல்ல ..... அன்னதானம் , மருத்துவ உதவிகள்ன்னு , இன்னும் எத்தனையோ உதவிகள , நம்ம

அன்பாலயத்தின் மூலமா , அந்த மாத்தூர் கிராம மக்களுக்கு , பண்ணலாம்னு நெனச்சோம் . ஆனா அந்த தவபுண்ணியம்தான் அதுக்குத் தடையாய் இருக்கிறார் . இன்னும் ரெண்டு மாசத்துல , உள்ளாட்சித் தேர்தல் வேற வர்றதால , புது ஆளுங்கள யாரையும் , எதையும் பண்ண விடறதில்லை . பாவம் , ஒரு வேடிக்கையான மனுஷன் !!! .

**இன்ஸ்பெக்டர் ரவி** : சரிங்க ! சுவாமிஜி ! நான் ஏதாவதுன்னா ! உங்கள தொடர்பு கொள்றேன் . நான் வர்றேன் என்று நடையைக் கட்டியிருந்தார் .

போலீஸ் ஜீப் அன்பாலயத்திலிருந்து வெளியே கிளம்பியிருந்தது .

# 6

சாயுங்கால நேரம் **6.3 o** மணி . இருட்டு மெல்ல மெல்ல , பரவ ஆரம்பித்திருந்தது . காற்றின் வேகம் சற்று அதிகரித்திருந்தது . வயலில் இறங்கியிருந்தவர்கள் , அவசர அவசரமாக வீடுகளுக்குத் திரும்பிக் கொண்டிருந்தனர் . பஞ்சாயத்து அரச மரத்தின் கீழே , மிகப் பெரிய கூட்டம் நின்றிருந்தது . கிராமத் தலைவர் தவபுண்ணியம் எதோ ஒரு வழக்கை விசாரித்துக் கொண்டிருந்தார் . சிவநேசனும் , ராமலிங்கமும் உடன் அமர்ந்திருந்தார்கள் . வேலைக்காரன் பொன்னையா வெத்தலைப் பொட்டியுடன் , ஒரு ஓரமாக நின்றிருந்தான் . முகம் முழுவதும் பயத்தால் உறைந்திருந்த ஒரு பெண் , பஞ்சாயத்தில் உரக்கப் பேசிக் கொண்டிருந்தாள் . அந்த வழியாக வந்துகொண்டிருந்த இன்ஸ்பெக்டர் ரவியும் , ஏட்டு கந்தசாமியும் , கூட்டத்தைப் பார்த்ததும் , வண்டியை நிறுத்தி விட்டு , உள்ளே சென்று , நின்று பார்த்துக் கொண்டிருந்தனர் . இவர்கள் இருவரையும்

பார்த்த தவபுண்ணியம் , கையால் சைகை காட்டினார் . அந்த பெண் பேச ஆரம்பித்தாள் .

“ ஐயா ! கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி தான் , என்னோட ரெண்டு மாடுகளையும் தொழுவத்துல கட்டிட்டு , வெளிய வரும்போது , எனக்கு முன்னாடி , திடீர்ன்னு எதோ ஒரு உருவம் வந்துட்டு போன மாதிரி இருந்துச்சு . அது ரொம்ப பயங்கரமா இருந்துச்சு . அத நெனச்சா இன்னும் பயமாயிருக்குதுங்கய்யா . ஊருக்கு ஏதாவது பாதுகாப்பு ஏற்பாடுகளப் பண்ணுங்கய்யா “ என்று பயந்த படியே சொல்லிக்கொண்டிருந்தாள் அந்தப்பெண் . இன்ஸ்பெக்டர் ரவி அந்த பெண்ணையே சற்று கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தார் . தவபுண்ணியம் பக்கத்தில் அமர்ந்திருந்த , சிவநேசன் எழுந்து பேச ஆரம்பித்தார் .

**சிவநேசன்** : “ அதுக்குத்தாம்மா ! இப்ப நம்ம ஊருக்கு புது போலீஸ் அதிகாரிங்க வந்துருக்காங்க . அவங்ககிட்ட நம்ம பிரச்சனையை சொல்லுவோம் . அவுங்க

*பாத்துக்குவாங்க ! " என்று இன்ஸ்பெக்டர் ரவியை அடையாளம் காட்டினார் சிவநேசன் . இன்ஸ்பெக்டர் ரவியும் , ஏட்டு கந்தசாமியும் கூட்டத்தின் நடுவே வந்து நின்று வணக்கம் வைத்தனர் .*

***இன்ஸ்பெக்டர் ரவி*** *: " தூத்தூர் காவல் துறை சார்பில் , உங்கள் எல்லாருக்கும் வணக்கம் ! . " எந்த நேரத்திலும் , உங்கள் கிராமத்துக்கு முழு பாதுகாப்பு கொடுக்க நாங்க தயாரா இருக்கிறோம் . எங்கள் இரவு நேர பாதுகாப்புப் படை வீரர்கள் , எப்போதும் ரோந்து பணியில் இருப்பார்கள் . எதுவாக இருந்தாலும் எங்களுக்கு INFORM பண்ணுங்க . அவசர உதவிக்கு உடனே தொடர்புகொள்ள , காவல் துறை உதவி எண்* ***04329 - 2669082 .*** *நம்பிக்கையோட இருங்க . நாங்க இருக்கோம் " என்றார் .*

*கூட்டம் மெல்ல மெல்ல கலைய ஆரம்பித்திருந்தது . இன்ஸ்பெக்டர் ரவியின் பக்கம் வந்த தவபுண்ணியம் ,*

“ தம்பி ! இது தான் இங்க நடக்கிற பிரச்சனை . நாங்க உங்கள முழுமையா நம்புறோம் . நீங்க தான் ஏதாவது பண்ணனும் .” என்றார் .

**இன்ஸ்பெக்டர் ரவி** : சார் ! இன்னும் எனக்கு இதுல நம்பிக்கை வர்ல . இருந்தாலும் , இனிமேல் இது போன்ற சம்பவங்கள் நடக்காது . இது சம்பந்தமா எங்க மேலதிகாரிகிட்ட பேசிட்டோம் .  எங்களோட நடவடிக்கைகள மேலும் துரிதப்படுத்தப் போறோம் . ஊர் முழுவதையும் எங்க கட்டுப்பாட்டுக்குள்ள கொண்டு வரப்போறோம் . இரவு முழுவதும் எங்க படை வீரர்கள் ரோந்து பணியில் சுத்திட்டு இருப்பாங்க . என்ன அசம்பாவிதம் நடந்தாலும் , உடனே  கட்டுப்பாட்டு அறைக்கு தகவல் போயிரும் .  நான் இந்த ஊருக்கு வந்த மொதல் நாளே , வேளாண் ஆசிரியர் குமாரசாமி பத்தின சில தகவல்கள சேகரிச்சுட்டேன் . அவரோட பிரேத பரிசோதனை ரிப்போர்ல எனக்கு சில சந்தேகங்கள் இருக்கு சார் ......  ஏன்னா ! குமாரசாமி பேயடிச்சு செத்துப் போயிட்டதா நாம நெனச்சுகிட்டு இருக்கோம் . ஆனா !

அவரோட பிரேத பரிசோதனை ரிப்போர்ட்ல , அவரோட இதயத்துல ஏற்பட்ட ஏதோ ஒரு அழுத்தத்தினால , இதய வால்வுகள் சிதைந்துபோயிருக்குன்னு குறிப்பிடப்பட்டுள்ளது . எனக்கு சந்தேகமே அதுல தான் .

திடுக்கிட்டுப் போயிருந்தனர் தவபுண்ணியமும் , அவரோட சகாக்களும் .

**ராமலிங்கம்** : அதுல என்ன சந்தேகம் ? . குமாரசாமி வயசான ஆள் . அவருக்கு வயசு 65 இருக்கும் . வயசானாவே ! நம்ம உடம்புல ஏகப்பட்ட மாற்றங்கள் ஏற்படும் . சாதாரண விஷயம் தானே இது .

**இன்ஸ்பெக்டர் ரவி** : சார் ! நானும் அப்படிதான் நெனச்சேன் . ஆனா கொஞ்ச நாளைக்கு முன்னாடி , மத்திய அரசாங்கம் ஒரு கணக்கெடுப்பு எடுத்திருக்கிறாங்க . அதாவது கிராமத்துல வாழ்றவங்களோட உடல் நிலையையும் , நகரத்துல வாழ்றவங்களோட உடல் நிலை பற்றியும் ஒரு சர்வே

எடுத்திருக்கிறாங்க . அதுல நம்ம குமாரசாமியும் ஒருத்தர் . நம்ம குமாரசாமியோட உடல் நிலைய சோதிச்சு பார்த்த , அவங்களுக்கு ஒரு மிகப்பெரிய ஆச்சர்யம் . காரணம் அந்த 6 o வயசிலும் , அவருக்கு ரத்த ஓட்டம் சீராக இருந்திருந்தது . கிட்டத்தட்ட ஒரு 25 வயது இளைஞனின் ரத்த ஓட்டம் அவருக்கு இருந்திருக்கிறது . இதயம் சீராக இயங்கியிருந்தது . இதய வால்வுகள் சீராக இருந்திருக்கின்றது . இதுக்கான ரிப்போர்ட் என்கிட்ட இருக்கு . குமாரசாமியிடம் அவர்கள் இது பற்றி கேட்ட பொழுது , அவர் சொல்லியிருக்கிறார் .

“ நான் வெறும் விவசாயப் பொருட்களையே உணவாக உட்கொள்கிறேன் . தினமும் வயல் வேளைகளில் ஈடுபடுகிறேன் . ஓய்வு என்பது எனக்கு அறவேயில்லைன்னு அவர் சொல்லிருக்கிறார் . “ SO , கண்டிப்பா , இவ்வளவு சீக்கிரம் , அவருடைய இதய வால்வுகள் பழுதடைய வாய்ப்பே இல்ல . இது தான் என்னை இந்த கேஸ்ல மேலும் , மேலும் ,

*விசாரணை பண்ண , எனக்கு உத்வேகம் கொடுக்கிறது “ என்று முடித்தார் .*

*தவபுண்ணியத்தின் முகத்தில் , அதிர்ச்சி தாண்டவமாடியிருந்தது . தூக்கி வாரிப் போட்டிருந்தது சிவனேசனுக்கும் , ராமலிங்கத்துக்கும் .*

**சிவநேசன் :** *ஓகே ! ரவி உங்க இன்வெஸ்டிகேஷன ஆரம்பீங்க . எப்படியோ இந்த பிரச்சனை தீர்ந்தா போதும் என்று மழுப்பினார் .*

*இன்ஸ்பெக்டர் ரவியும் , ஏட்டு கந்தசாமியும் அவர்களிடமிருந்து விடைபெற்று போலீஸ் ஜீப்பில் ஏறிப் புறப்பட்டிருந்தனர் .*

*தவபுண்ணியத்தின் முகம் இருண்டிருந்தது . அவரது முகத்தைப் பார்த்த சிவநேசன் சற்று ஆறுதலான வார்த்தைகளை பேசினார் .*

***சிவநேசன் :*** *நீங்க கவலைப் படாதீங்க தலைவரே ! இன்னிக்கு ராத்திரி அவன எப்படி அலற விடப்போறோம்னு பாருங்க தலைவரே !.*

***தவபுண்ணியம் :*** *அவன் கண்டிப்பா பயபட்ற ஆளே இல்ல . எனக்கு என்னவோ பயமாயிருக்குது . நம்ம மேல அவனுக்கு ஒரு துளி கூட சந்தேகம் வரக்கூடாது . ஆனா அவன ஏதாவது பண்ணியாகனும் . கொஞ்சம் பொறுமையா இருங்க . நாளைக்கு, அந்த உரம் தயாரிக்கிற கம்பெனிக்காரங்க கூட ( **NEXTGEN FRETILIZERS LTD** (உரம் தயாரிப்பு நிறுவனம்) ) மீட்டிங்க முடிச்சிட்டு காச வாங்குறவரைக்கும் கொஞ்சம் அவசரப் படாதீங்க .*

***ராமலிங்கம் :*** *தலைவரே ! நீங்க தைரியமா போங்க . நாங்க பாத்துக்கறோம் .*

*இருண்ட மனதோடு நடையைக் கட்டியிருந்தார் தவபுண்ணியம் . சிவநேசனும் , ராமலிங்கமும் அவரைப் பின் தொடர்ந்திருந்தார்கள் .*

# 7

*நேரம் இரவு **7:3 o** மணி . போலீஸ் ஜீப் சரியாக , தூத்தூர் காவல் நிலையத்தை அடைந்திருந்தது . இருவரும் இறங்கி உள்ளே நடந்திருந்தனர் .*

***இன்ஸ்பெக்டர் ரவி** : “ கந்தசாமி ! பழைய இன்ஸ்பெக்டர் சுந்தரத்திற்கு CALL பண்ணுங்க . அவர்கிட்ட இந்த கேஸ் விசயமா சில சந்தேகங்கள கேக்க வேண்டியிருக்கு “ ... என்றார் .*

*எஸ் சார் ! என்றவர் மேசையில் இருந்த தொலைபேசியில் எண்களைத் தட்டினார் . “ இந்த நம்பர் சுவிட்ச் ஆப் செய்யப்பட்டுள்ளது “ என்று மறுமுனையில் பதிவு செய்யப் பட்ட பெண்ணின் குரல் பேசியது .*

***ஏட்டு கந்தசாமி** : சார் ! போன் சுவிட்ச் ஆப் சார் !*

***இன்ஸ்பெக்டர் ரவி** : (.....சிறிது நேரம் யோசித்துவிட்டு......) ........... ஹ்ம்ம் !*

*ஓகே ! விடுங்க நாளைக்கு பாத்துக்கலாம் .... அப்புறம் நம்ம குமாரசாமியோட போன் நம்பர் குறித்த தகவல்கள் கேட்ருந்தேனே ? என்னாச்சு ???*

**ஏட்டு கந்தசாமி** *: சார் ! அவர் இதுவரைக்கும் பேசின , எல்லா நம்பர்சையும் TRACE பண்ணியாச்சு . இந்தாங்க சார் அதோட DETAILS .*

*அதைப் புரட்டிப் பார்த்த இன்ஸ்பெக்டர் ரவி , சில நம்பர்களை மட்டும் வட்டமிட்டுக் கொண்டிருந்தார் .*

*சரியாக எட்டு மணியளவில் , இரவு நேர சிறப்பு ரோந்து படையினர் 5 o பேர் , தூத்தூர் காவல் நிலையத்துக்கு வெளியே சல்யூட்டுடன் நின்றிருந்தனர் . அவர்களின் வணக்கத்தை ஏற்றுக்கொண்ட இன்ஸ்பெக்டர் ரவி , அவர்கள் முன்னிலையில் சத்தமான தொனியில் பேசலானார் .*

*“ HELLO GUYS ! GOOD EVENING ஒரு கேஸ் விசயமா , மாத்தூர் கிராமத்துக்கு , இரவு*

நேரங்கள்ல நம்முடைய பாதுகாப்பு தேவைப்படுது . அதனாலதான் மேலிடத்துல , உத்தரவு வாங்கி , உங்க 5 o பேர SELECT பண்ணிருக்கேன் . *SO* , மாத்தூர்ல , எந்த அசம்பாவிதமும் நடக்காம பாத்துக்க வேண்டிய பொறுப்பு நம்மளோடது . அங்க பேய் நடமாட்டம் இருக்கிறதா எல்லாரும் பயபட்றாங்க. அப்படி எதுவும் அங்க இல்லன்னு நிரூபிக்கத் தான் நான் உங்கள அங்க அனுப்புறேன் . வரப்போகிற ரெண்டு வாரம் , நாம அங்க பாதுகாப்பு குடுக்கப் போறோம் . நாம குடுக்கப் போற பாதுகாப்புல தான் , அவங்களோட பயத்தை போக்க முடியும் . ஒருவேளை , சந்தேகத்திற்கிடமான எதாயவது நீங்க பாத்தீங்கன்னா ! உடனே கன்ட்ரோல் ரூம்க்கு தகவல் குடுத்துருங்க . “ *YOU CAN CALL ME ANYTIME . I AM REACHABLE AT ANYTIME . BE ALERT AND GO AHEAD !* “ என்று பேசி முடித்திருந்தார் .

*ரோந்து படையினரின் வாகனம் , மாத்தூர் கிராமத்தை நோக்கி முன்னேறியிருந்தது . இன்ஸ்பெக்டர் ரவியும் , கந்தசாமியும் இரு சக்கர வாகனத்தில் , பின் தொடர்ந்திருந்தனர் . வழி நெடுகிலும் ஒரே இருட்டு . சாலையோர மின் கம்பங்களில் வெளிச்சம் , வந்து வந்து போய்க் கொண்டிருந்தது . சற்று நிதானமாகவே வண்டியை ஓட்டிக் கொண்டிருந்தார் ஏட்டு கந்தசாமி . கொஞ்ச நேரத்தில் , மாத்தூர் கிராமத்தில் , இன்ஸ்பெக்டர் ரவிக்காகப் பார்த்து வைக்கப்பட்டிருந்த வீடு வந்திருந்தது . இன்ஸ்பெக்டர் ரவியின் கையில் , வீட்டின் சாவியைக் கொடுத்து விட்டு , கிளம்ப தயாராயிருந்தார் ஏட்டு கந்தசாமி . வீடு முழுவதையும் சுற்றிப் பார்த்துவிட்டு ,*

*வீடு அருமையாக இருக்குதுய்யா ! . " ஹ்ம்ம் !!! ஓகே ! கந்தசாமி .... நீங்க கௌம்பலாம் . BUT நாளைக்கு சீக்கிரம் வந்துருங்க .. நாம இன்வெஸ்டிகேஷனுக்கு போகனும் . " .. என்றார் ரவி . மெல்ல தலையை*

ஆட்டிக்கொண்டே புறப்பட்டிருந்தார் கந்தசாமி ............

ரவி சாப்பிட்டு முடிப்பதற்குள் , கிட்டத்தட்ட மணி இரவு பத்தைக் கடந்திருந்தது . மெத்தையில் படுத்துக்கொண்டே , பிரபல கிரைம் நாவலாசிரியர் ராஜேஷ்குமாரின் " நிதர்சனத்தின் பக்கம் நில் ! " என்ற நாவலைப் புரட்டிக்கொண்டிருந்தார் . பாதிப் பக்கங்களைப் படித்திருப்பார் . திடீரென்று , அந்த அறையில் இருந்த விளக்கின் வெளிச்சம் , மங்கி மங்கி எரிந்து கொண்டிருந்தது .......... அதைப் பார்த்த அவர் , உடனே , தன் தலைக்குப் பக்கத்தில் வைத்திருந்த , ANDROID மொபைல் போனை எடுத்து அதை ON செய்ய முற்பட்டார் . அது CHARGE செய்யப்படாமல் , SWITCH - OFF ஆகியிருந்தது அப்போதுதான் அவருக்குத் தெரிந்திருந்தது ....... ஒரு கட்டத்தில் விளக்கின் வெளிச்சம் முற்றிலுமாக நின்றிருந்தது .... ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்தார் இன்ஸ்பெக்டர் ரவி . ஊர் முழுவதும் , இருள் சூழ்ந்து ஒரே மயான அமைதி அங்கு

நிலவியிருந்தது . எங்கும் ஒரு துளி கூட வெளிச்சம் இல்லை ........ திடீரென்று கதவு தட்டப்படும் சப்தம் கேட்டது ....... திடுக்கிட்டுப் பார்த்த இன்ஸ்பெக்டர் ரவியின் மனதில் லேசான பதற்றம் தொற்றியிருந்தது .... மாத்தூர் கிராமவாசிகள் சொன்ன சம்பவங்கள் , அவர் மனதில் வந்து வந்து போய்க் கொண்டிருந்தது . நிலைமையை உணர்ந்த இன்ஸ்பெக்டர் ரவி , சற்று தைரியத்தை வரவழைத்துக் கொண்டு , தீப்பெட்டியையும் , மெழுகுவர்த்தியையும் தேடிக் கொண்டிருந்தார் .... மீண்டும் மீண்டும் கதவு தட்டப்படும் சப்தம் கேட்டுக் கொண்டிருந்தது .... ஒரு வழியாக தீப்பெட்டியையும் , மெழுகுவர்த்தியையும் கண்டுபிடித்த அவர் , தீக்குச்சியைப் பற்ற வைக்கும் போது , பதற்றத்தில் மெழுகுவர்த்தியைத் தவற விட்டார் ..... எரிகின்ற தீக்குச்சியின் வெளிச்சத்தில் , மெழுகுவர்த்தியைத் தேடிய அவர் , கட்டிலுக்கு கீழே குனிந்து பார்த்துக் கொண்டிருந்தார் ..... தூரத்தில் மெழுகுவர்த்தி இருப்பதைப் பார்த்த அவர் , அதை எடுக்கும்போது , திடீரென்று

தீக்குச்சி அணைந்திருந்தது . மீண்டும் தீப்பெட்டியை உரசிய அடுத்த வினாடி , தன் பின்னே யாரோ நிற்பதைப் போன்று உணர்ந்திருந்தார் இன்ஸ்பெக்டர் ரவி ..... திரும்பலாமா ? வேண்டாமா ? என்ற சிந்தனையில் , மெழுகுவர்த்தியில் , ஒளியை ஏற்றியிருந்த அவர் , சற்றே தைரியத்தை வரவழைத்துக் கொண்டு , பின்னே திரும்பினார் .... அங்கு யாரும் இல்லை . கதவு தட்டப்படும் சப்தம் மேலும் நீடித்துக்கொண்டிருந்தது . இந்த முறை இன்ஸ்பெக்டர் ரவி பதற்றமில்லாமல் , அலமாரியில் இருந்த , போலீஸ் ரிவால்வரை கையில் எடுத்துக்கொண்டு , மெழுகுவர்த்தியை , அணையாமல் பிடித்துக்கொண்டே , கதவுப் பக்கத்தில் வந்த அவர் , மெல்ல கதவைத் திறந்து பார்த்தார் . வெளிச்சம் தெரியும் இடமெங்கும் , வெளியே ஆள் அரவமற்று வெறிச்சோடி இருந்தது . ஒரே நிசப்தம் . பயத்தில் உறைந்திருந்தார் இன்ஸ்பெக்டர் ரவி . ஒரு கையில் மெழுகுவர்த்தியோடும் , மற்றொரு கையில் ரிவால்வருடனும் வீட்டைச் சுற்றி வந்துகொண்டிருந்தார் . இரவு நேரப்

பறவைகளின் சப்தம் , மேலும் பீதியை கிளப்பியிருந்தது . ஒவ்வொரு அடியையும் நிதானமாக எடுத்து வைத்திருந்தார் . திடீரென்று ஏதோ ஒரு உருவம் , தூரத்திலிருந்து நகர்ந்து வருவதைப் போல் இருந்தது . பயத்தில் நெஞ்சைப் பிடித்த படியே , அப்படியே வீட்டுச் சுவற்றில் சாய்ந்தபடி உட்கார்ந்தார் . மெழுகுவர்த்தி கீழே உருண்டு எரிந்து கொண்டிருந்தது . இருண்டு போயிருந்தார் இன்ஸ்பெக்டர் ரவி . அவரின் இதயத்துடிப்பு பன்மடங்கு அதிகரித்திருப்பதை அவரால் உணர முடிந்திருந்தது . அந்த நேரத்தில் என்ன செய்வதென்றே அவருக்குப் புரியவில்லை . அவரின் சிந்தனையில் பல எண்ண ஓட்டங்கள் ஓடிக்கொண்டிருந்தன . இதுதான் என் வாழ்வின் கடைசி நாளா ?? என்றெல்லாம் எண்ணத் தோன்றியிருந்தது . கடைசியாக அவர் படித்த ‘ நிதர்சனத்தின் பக்கம் நில் ! ‘ என்ற நாவலில் இருந்த ஒரு வாசகம் , அப்போது அவருக்கு நியாபகம் வந்தது .

“ இளமை உன் தோள்களில் இருக்கும்போதே , எது நிஜம் என்பதைத் தொட்டு விடு ! “ என்கின்ற வாசகம் , திடீரென்று அவருக்கு நியாபகம் வந்தது . அது ஒரு நேர்மறையான உத்வேகத்தை அவருக்கு அளித்தது . எதுவாக இருந்தாலும் சரி , என்ன நடந்தாலும் சரி . அது என்ன என்பதை ஒரு கை பார்த்து விடவேண்டும் என்கிற எண்ணத்தோடு , சுவற்றைப் பிடித்துக் கொண்டே , கடினப்பட்டு எழுந்தார் ....
ரிவால்வரை முன்னே நீட்டிக் கொண்டே அந்த உருவத்தை நோக்கி நடக்க ஆரம்பித்தார் . மீண்டும் மீண்டும் அந்த வாசகம் அவர் மனதை அரித்துக் கொண்டிருந்தது . சற்று நேரத்தில் அந்த உருவம் அவர் கண்ணில் இருந்து மறைந்திருந்தது . நல்ல நேரமாக மின்சாரம் மீண்டும் வந்து வெளிச்சம் பரவியிருந்தது . காற்று வேகமாக வீச ஆரம்பித்திருந்தது ....
வலதுபுறமாக ஏதோ சலசலப்பு சப்தம் கேட்டது .... அங்கு விரைந்து சென்ற இன்ஸ்பெக்டர் ரவி , அங்கு ஒரு ஒருவம் ஓடிக்கொண்டிருப்பதைக் கண்டார் . அதை வேகமாகப் பின் தொடர்ந்திருந்தார் ரவி . அதிவேகமாக ஓடிக்

கொண்டிருந்த அந்த உருவம் ,  கண் இமைக்கும் நேரத்தில் ,  சோளக்காட்டுக்குள் ஓடி மறைந்திருந்தது . கடைசிவரை பின்தொடர்ந்திருந்த இன்ஸ்பெக்டர் ரவி , களைப்பு மிகுதியால் , மூச்சு வாங்கினார் . சற்று நிதானித்த அவர் , தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டு , வீட்டை நோக்கி நடக்க ஆரம்பித்தார் .

# *8*

*அடுத்த நாள் காலை 11 மணி . இன்ஸ்பெக்டர் ரவியும் , ஏட்டு கந்தசாமியும் படு வேகத்துடன் போலீஸ் ஜீப்பில் ஏறியிருந்தார்கள் . மாத்தூர் பிரதான சாலையை அடைந்திருந்தார்கள் .*

***ஏட்டு கந்தசாமி** : ” சார் ! இப்ப நாம எங்க போறோம் சார் “ ???*

***இன்ஸ்பெக்டர் ரவி** : “ பெரியார் மணியம்மை பல்கலைக் கழகம் . அங்க போறதுக்கு எவ்ளோ நேரம் ஆகும் கந்தசாமி ? “*

***ஏட்டு கந்தசாமி** : “ சார் ! கிட்டத்தட்ட ஒன்றை மணி நேரம் ஆகும் சார் “ என்று வண்டியை வேகமாக செலுத்தியிருந்தார் ............*

*“ ஆனா இப்ப அங்க எதுக்கு சார் நாம போறோம் ? “*

***இன்ஸ்பெக்டர் ரவி** : வேளாண் ஆசிரியர் குமாரசாமியோட CONTACTS ல , யார் யார்கிட்டல்லாம் , அவர் அதிகமா பேசிருக்கார்ன்னு பாத்ததுல , பெரியார் மணியம்மை பல்கலைக்கழகத்துல , அவரோடுகூட வேலை பார்த்த , சதாசிவமும் ஒருத்தர் . குமாரசாமி , கடைசியாப் பேசின நம்பரும் , சதாசிவத்தோடதுதான் . SO JUST ஒரு FORMAL ENQUIRY . அவ்ளோதான் .*

***ஏட்டு கந்தசாமி** : என்ன சார் ! ஏதோ ஒரு மாதிரியா இருக்கீங்க .. நேத்து இராத்திரி ஏதாவது நடந்துச்சா ?*

***இன்ஸ்பெக்டர் ரவி** : ஆமாய்யா ! ராத்திரி கதவு தட்ற சத்தம் கேட்டுச்சு . அதுக்கப்புறம் வெளிய போய் பார்த்தேன் ............................*

***ஏட்டு கந்தசாமி** : (.....அதிர்ந்தவராய்......) என்ன சார் ? என்ன பாத்தீங்க ? எதாவது அமானுஷ்யத்தப் பாத்தீங்களா ?*

**இன்ஸ்பெக்டர் ரவி :**
*(......சிரித்துக்கொண்டே......)  நான் பாத்த உருவம் அமானுஷ்யமா ? இல்ல , அது ஒரு ஆசாமியா ??ன்னு , இன்னும் எனக்குத் தெளிவா தெரியல . ஆனா அதோட அசைவுகள் ஒவ்வொன்னும் இன்னும் , என் கண்ணுக்குள்ளேயே இருக்குது .*

**ஏட்டு கந்தசாமி :** *சார் .........................???????????????? உங்களுக்கு பயமாவேயில்லையா !!!*

**இன்ஸ்பெக்டர் ரவி :** *" பயம் இல்லைன்னு யாருய்யா சொன்னா ?? பயமாத்தான் இருந்துச்சு . போலீஸ் வேலைக்கு வந்ததுக்கப்புறம் , இதயெல்லாம் ஒரு பொருட்டா எடுத்துக்க கூடாதுன்னு , நெனச்சு , அந்த உருவத்தை பின் தொடர்ந்தேன் . ஆனா அது கண் இமைக்கிற நேரத்தில் , ஓடி மறஞ்சிடுச்சு . ஆனா இன்னொரு தடவ , அது என் கண்ணுல பட்டுச்சு..... அவ்ளோதான் " .*

**ஏட்டு கந்தசாமி :** *“ சார் ! உண்மையாலுமே நீங்க பெரிய ஆள் தான் சார் . நான் மட்டும் அங்க இருந்திருந்தேனா , பயத்துலயே செத்துருப்பேன் . இந்நேரம் நீங்க எனக்கு மலர்வளையம் வச்சிருக்க வேண்டியிருக்கும் “ என்றார் சிரித்துக்கொண்டே ..*

**இன்ஸ்பெக்டர் ரவி :** *(.....சிரித்தவாறே......) சரி ! கொஞ்சம் வேகமாப் போங்க . நமக்கு நேரம் ரொம்ப குறைவா இருக்கு .*

*ஒரு மணிநேரம் , இருபது நிமிடத்தில் பெரியார் மணியம்மை பல்கலைக் கழகத்தை அடைந்திருந்தார்கள் . தஞ்சாவூரில் , வல்லம் ஊராட்சி ஒன்றியத்தின் கீழ் அமைந்த , பெரியார் நகரில் , கிட்டத்தட்ட 216 ஏக்கர்களில் , பிரம்மாண்டமாக காட்சியளித்தது அந்த பல்கலைக்கழகம் . எங்கிருந்து பார்த்தாலும் தெரியும் அளவுக்கு ,*

***பெரியார் மணியம்மை பல்கலைக்கழகம் . வல்லம் , தஞ்சாவூர் – 613403*** *என்று செதுக்கப்பட்ட எழுதுக்கள் , அந்த பிரம்மாண்ட*

பல்கலைக்கழகத்தின் , தலைப் பகுதியை அலங்கரித்திருந்தது . சற்று விலாசமாக இருந்த போர்டிகோவில் , வண்டியை நிறுத்தி விட்டு , வெளியே நடந்து வந்தார்கள் . உள்ளே , ஒரு கிலோமீட்டர் தூரம் வரை நடந்தே , வரவேற்பறையை அடைந்திருந்தார்கள் . *DEPARTMENT OF AGRICULTURE* என்று வலதுபுறமாக அம்புக்குறிடப்பட்டிருந்த பதாகையைப் பார்த்தவுடன் , வலதுபுறம் நோக்கி நடக்க ஆரம்பித்தார்கள் .

“ இந்தியாவின் தேசியத் தொழில் விவசாயம் . உழவனின் வியர்வையில் தான் , இந்த உலகம் இயங்கிக் கொண்டிருக்கின்றது “ .

“ இயற்கை உரங்களை நிராகரித்து விடாதீர்கள் “

“ மரபணுமாற்றம் செய்யப்பட்ட விதைகளைத் தவிருங்கள் . ”

“ விவசாயத்தை அடுத்த தலைமுறைக்கு , எடுத்துச் செல்ல வேண்டிய பொறுப்பு நம்முடையது “

என்கின்ற வாசங்ககள் வழியெங்கும் நிரம்பியிருந்தது . ஆங்காங்கே அரியவகை மரங்கள் , தங்கள் பெயர்களுடன் கூடிய விளக்கத்தைத் தாங்கிக் கொண்டு , நின்று கொண்டிருந்தன . ஒருவழியாக **AGRICULTURE DEPARTMENT** க்குள் நுழைந்திருந்தார்கள் . பழங்காலத்தில் இருந்து , இன்று வரை , மனிதன் பயன்படுத்திய விவசாயக் கருவிகள் அங்கே பார்வைக்காக வைக்கப்பட்டிருந்தது ........... சதாசிவம் , வேளாண் பேராசிரியர் . என்ற பெயர்பலகை தொங்கப்பட்டிருந்த அறையில் நுழைந்திருந்தார்கள் . உள்ளே பழைய புத்தகங்களைப் புரட்டிப் பார்த்துக் கொண்டிருந்த சதாசிவம் , காக்கிச்சட்டைகளைப் பார்த்ததும் , எழுந்து நின்று வரவேற்றார் . அவர் முகத்தில் தொங்கிக் கொண்டிருந்த மூக்குக் கண்ணாடியும் , நரைமுடிகளால் மூடப்பட்டிருந்த கபாலமும் , அவரின் 6 0 வயதைத் தெளிவாகக் காட்டியிருந்தது .

**பேராசிரியர் சதாசிவம்** : " வணக்கம் சார் ! உக்காருங்க . சொல்லிருந்தீங்கன்னா ! நானே நேர்ல வந்திருப்பேனே " என்றார் .

**ஏட்டு கந்தசாமி** : பரவாயில்லைங்க சார் ! . நாங்க குமாரசாமி ஐயாவோட மரணம் பற்றிய விசாரணைக்காக வந்துருக்கறோம் .

**இன்ஸ்பெக்டர் ரவி** : அது ஒரு திட்டமிட்ட கொலையாகக்கூட இருக்கலாம்ன்னு நாங்க சந்தேகப்பட்றோம் ................ குமாரசாமி ஐயா ,,, அடிக்கடி உங்களோட தான் தொலைபேசியில் பேசியிருக்கிறார் . இறப்பதற்கு முன் , அவர்கூட கடைசியாப் பேசின ஆளும் நீங்கதான் . SO , நீங்க சொல்லப் போற பதில்களில் இருந்துகூட , எங்களுக்கு ஏதாவது துப்பு கெடைக்க வாய்ப்பிருக்கிறது . அவரபத்தி , உங்களுக்குத் தெரிஞ்ச தகவல்கள , நீங்க தைரியமா சொல்லுங்க . அது கூட இந்த கேஸ்ல உபயோகமா இருக்கலாம் .

**பேராசிரியர் சதாசிவம்** : இன்ஸ்பெக்டர் சார் ! உங்களோட கேள்விகளக் கேளுங்க . எனக்குத்

*தெரிந்த உண்மைகள , மறைக்காமல் சொல்றேன்*
*.*

***ஏட்டு கந்தசாமி*** *: அவர் பேயடிச்சு இறந்திட்டதா எல்லாரும் சொல்றாங்களே . அது உண்மையாக இருக்கும்னு நம்புறீங்களா ?*

*(.....சற்று நேரம் யோசித்த சதாசிவம் , மெல்ல பேச ஆரம்பித்தார் .....)*

***பேராசிரியர் சதாசிவம்*** *: எனக்கும் அந்த மாதிரி விஷயங்களில் , நம்பிக்கை இல்லை . ஆனா !........... அது , எனக்கே ஆச்சர்யமாத்தான் இருக்கு . அங்கு பேய் நடமாட்டம் இருப்பதாக , ஊர்மக்களே சொல்லும்போது , அதுக்கு நாம எப்படி மறுப்பு சொல்ல முடியும் ? .*
*குமாரசாமி ஐயா*

*..............................................,*
*விவசாயத்துறைல எங்களுக்கெல்லாம் ஒரு முன்னோடி ......... இந்த பல்கலைக்கழகத்துல , எனக்கு முன்னாடி , வேளாண் பேராசிரியரா இருந்தவர் . விவசாயம் குறித்து பல ஆராய்ச்சிகள் பண்ணியிருக்கிறாரு . பல நூல்கள்*

எழுதியிருக்கிறார் . கடைசியா அவர் எழுதின “ நம் பாரத மண்ணின் மகத்துவம் பாரீரோ ! “ என்ற கட்டுரைக்காக , மத்திய அரசு விருது வழங்கி சிறப்பித்திருக்கின்றது . அவருடைய இழப்பு என்பது , விவசாயத்துறைக்கே ஈடுகட்ட முடியாத ஒரு பேரிழப்பு .

சதாசிவத்தின் ஒவ்வொரு அசைவையும் , இன்ஸ்பெக்டர் ரவி கூர்ந்து கவனித்தார் . குமாரசாமி ஐயாவின் பிரிவை அவர் முகத்தில் காண முடிந்தது.

**இன்ஸ்பெக்டர் ரவி** : குமாரசாமி ஐயாவுக்கு , எதிரிகள் யாராச்சும் ............

**பேராசிரியர் சதாசிவம்** : ஹ்ம்ம் !!! எனக்குத் தெரிந்தவரை அவருக்கு எதிரிகளே கிடையாது . அவர் எதுக்காகவும் , யார்கிட்டயும் கோபப்பட்டு நான் பார்த்ததில்ல ....... ஏன்னா ! அவர் அதிகமா பழக்கம் வச்சிக்கிட்டதெல்லாம் , ஏழைபாழைங்க கூடத்தான் . அந்தக் காலத்து விவசாய உத்திகள , மீண்டும் , இந்த நவீன

*காலத்துல பயன்படுத்துவதைத் தான், அவர் குறிக்கோளாகக் கொண்டிருந்தார்.*

***ஏட்டு கந்தசாமி*** *: சார் !.................. அப்படி என்னதான் நீங்களும், அவரும் போன்ல பேசிக்குவீங்க ????.*

***பேராசிரியர் சதாசிவம் :*** *(....சிரித்துக்கொண்டே.....) " வருங்கால சந்ததிகளின் வாழ்க்கையைப் பத்தி ......... வாழப் போறதே, இன்னும் கொஞ்ச நாள் தானே ! அதுக்குள்ள விவசாயத்தப் பத்தின ஒரு விழிப்புணர்வ, வருங்கால சந்ததிகளுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும். அதப்பத்தி தான் அவர் சதாகாலமும் சிந்தித்தார். குறிப்பா ! எங்க வேளாண் பிரிவு இளைஞர்கள் மத்தியில், எப்படி அதைக் கொண்டுபோய் சேர்க்கணுங்கரதப் பத்தி தான் என்கிட்ட அவர் பேசுவார். இதுவரைக்கும் அவர் சொன்ன கருத்துக்களையெல்லாம், தொகுத்து, ஒரு புத்தகமா எழுதியிருந்தேன். அதை அவர் கையாலயே வெளியிடலாம்ன்னு நெனச்சிருந்தேன். ஆனா அதுக்குத்தான்*

*வாய்ப்பில்லாமல் போச்சு “. என்றார் வருத்தத்துடன் .......*

***இன்ஸ்பெக்டர் ரவி :*** *அவர் என்னைக்காவது மன வருத்தப்பட்டு எதாச்சும் பேசிருக்காரா ??? நல்லா யோசிச்சுப் பாருங்க ..*

***பேராசிரியர் சதாசிவம் :*** *(..... நன்றாக யோசித்துவிட்டு.....) என்கிட்ட இதுவரைக்கும் அப்படி பேசினதில்ல சார் !*

*கொஞ்ச நேர மௌனம் ........... இன்ஸ்பெக்டர் ரவி ஏமாற்றத்துடன் , ஏட்டு கந்தசாமியைப் பார்க்க , அவரும் போகலாம் என்பதைப் போல தலையை ஆட்டியிருந்தார் . சற்று நேரம் யோசித்துக் கொண்டிருந்த சதாசிவம் , திடீரென்று அவர்களைப் பார்த்து ,*

*“ சார் ஒரு நிமிஷம் . கொஞ்ச நாளைக்கு முன்னாடி அவர் பேசும்போது , ஒரு விஷயத்த என்கிட்ட சொன்னார் ... அது எந்த அளவுக்கு உங்களுக்கு , உபயோகமா இருக்கும்ன்னு தெரியல . இருந்தாலும் சொல்றேன் . “ என்றார் .*

இன்ஸ்பெக்டர் ரவியும் , கந்தசாமியும் ஆர்வமாய் அவரைப் பார்க்க , சதாசிவம் தொடர்ந்தார் ,

“ ***NEXTGEN FRETILIZERS LTD*** என்கிற உரம் தயாரிப்பு நிறுவனம் , கொஞ்ச நாளைக்கு முன்னாடி , அவங்களோட புதியவகை உரங்கள அறிமுகப்படுத்தியிருந்தாங்க . அந்த உரங்களத்தான் இந்த முறை , விவசாயத்துக்கு பயன்படுத்தப் போறதா , நம்ம மாத்தூர் கிராமத்தலைவர்களான தவபுண்ணியம் ஐயாவும் , அவரது சகாக்களும் முடிவு பண்ணியிருந்தாங்க . அப்ப அந்த உரங்கள சோதனை பண்றதுக்காக , நம்ம குமாரசாமி ஐயாவும் உடன் போயிருந்தார் . அதைச் சோதித்துப் பார்த்த குமாரசாமி ஐயா , இந்த ரசாயன உரங்கள் விவசாயத்திற்கு ஏற்றதல்ல . இதைப் பயன்படுத்தினால் நம்முடைய மண் மலடாகிப் போய்விடும் . இந்த செயற்கை உரங்களால் நமக்கு மிகப்பெரிய அபாயம் இருக்கிறது . இதைத் தவிர்த்து விடுங்கள்ன்னு , நம்ம மாத்தூர் கிராமத்தலைவர்கள் கிட்ட

சொல்லியிருந்தார் . அவங்களும் அதை ஏற்றுக் கொண்டார்கள்ன்னு அவர் என்கிட்ட சொல்லியிருந்தார் “ என்று முடித்தார் சதாசிவம் . இதைக் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்த இன்ஸ்பெக்டர் ரவி , சற்றே தெளிவு பிறந்ததை அடுத்து “ சார் ! நீங்க குடுத்த தகவல்களுக்கு , ரொம்ப நன்றி . குமாரசாமி ஐயாவப் பத்தி நாங்க நெறைய தெரிஞ்சுக்கிட்டோம் . நாங்க வர்றோம் என்று கிளம்பியிருந்தார்கள் .

# 9

*“ NEXTGEN FERTILIZERS LTD “ - உரம் தயாரிப்பு நிறுவனம் , மாத்தூரின் பிரதான சாலையில் , வடக்கு நோக்கி அமைந்திருந்தது ......... நன்றாக திணிக்கப்பட்ட உரமூட்டைகள் , அங்கு மலை போல் குவிக்கப்பட்டிருந்தது . கட்டுக்கோப்பான உடம்புகளுடன் கூடிய வேலையாட்கள் , அந்த மூட்டைகளை , கனரக வாகனங்களில் ஏற்றிக்கொண்டிருந்தனர் . நன்றாக செதுக்கப்பட்ட உடற்கட்டுகளில் , அவர்களின் கடின உழைப்பின் பயன் தெரிந்தது . வரவேற்பறையின் உள்ளே அந்த நிறுவனத்தின் பங்குதாரர்களான பிரனேஷும் , திலீபனும் வெள்ளை நிற ஆடைகளில் ஜொலித்திருந்தார்கள் . சற்று நேரத்தில் , மிகுந்த இரைச்சலுடன் வந்த , போலீஸ் ஜீப்பில் இருந்து இன்ஸ்பெக்டர் ரவியும் , ஏட்டு கந்தசாமியும் , வந்து இறங்கியிருந்தார்கள் . இதை சற்றும் எதிர்பாராத ப்ரனேஷும் , திலீபனும் திகைத்து*

*நின்றிருந்தார்கள் . இனம்புரியாத ஒரு பதற்றம் அவர்களைத் தொற்றியிருந்தது . சற்று நிதானத்தை வரவழைத்துக் கொண்டு , அவர்களை வரவேற்று உட்கார வைத்திருந்தார்கள் .*

**திலீபன்** *: " WELCOME சார் ! I'M திலீபன் . and HE IS பிரனேஷ் ." என்று இருவரையும் அறிமுகப்படுத்தியிருந்தார்கள் .*

**இன்ஸ்பெக்டர் ரவி** *: " WELL MR. திலீபன் ......... WE ARE FROM தூத்தூர் போலீஸ் ஸ்டேஷன் . I'M இன்ஸ்பெக்டர் ரவி . and HE IS கந்தசாமி . ஒரு சின்ன ENQUIRY க்காக வந்துருக்கோம் " .*

**பிரனேஷ்** *: " எஸ் சார் .............! நாங்க முழு ஒத்துழைப்பு கொடுக்க கடமைப் பட்டுருக்கோம் . " என்றான் புரியாத புதிராக .*

**ஏட்டு கந்தசாமி** *: குமாரசாமி ஐயா , மரணம் தொடர்பான விசாரணை தான் இது . அவர் கடைசியா கலந்து கிட்ட ஒவ்வொரு நிகழ்ச்சிகள் , மற்றும் அவர் போன இடங்களிலெல்லாம்*

*விசாரணை நடந்துகிட்டு இருக்குது . அது சம்பந்தமான ஒரு FORMAL என்குயரி தான் இது . SO , ஒன்னும் பயப்பட தேவையில்ல " .*

*( அதிர்ந்து போயிருந்தார்கள் ப்ரனேஷும் திலீபனும் .... அவர்கள் முகத்தில் கலவரம் வெடித்திருந்தது . ) .*

***இன்ஸ்பெக்டர் ரவி** : " என்ன MR . பிரனேஷ் ? பேச்சையே காணோம் ".. என்றார் மெல்ல சிரித்தவாறே .*

***பிரனேஷ்** : " NO ! NO ! , அப்படியெல்லாம் ஒன்னும் இல்லைங்க சார் . அவரோட மரணத்த எங்களாலையே நம்ப முடியல . வயசானாவே அப்படிதான் சார் .... குமாரசாமி ஐயாவ , நாங்க கடைசியா எப்ப பாத்தோம்ன்னா....... என்று இழுத்தார் . உடனே பக்கத்தில் இருந்த திலீபன் , நிலைமையைப் புரிந்துகொண்டு , " சார்ர்ர்ர்ர்ர்ர்............... ! போன மாசம் , எங்களோட கம்பெனி உரங்கள , கிராமத்து விவசாயத்துக்கு , பயன்படுத்துவதற்காக அறிமுகப்படுத்தியிருந்தோம் . அதை சோதனை*

பண்றதுக்காக , மாத்தூர் கிராமத்துல இருந்து , தவபுண்ணியம் , ராமலிங்கம் , அப்புறம் ...... சிவநேசன் இவங்கெல்லாம் வந்துருந்தாங்க . கூடவே நம்ம குமாரசாமி ஐயாவும் வந்துருந்தாரு . அப்பதான் நாங்க , அவரக் கடைசியாப்பார்த்தோம் . ஆனா .......... நல்லாருந்த மனுஷன் , இவ்வளவு சீக்கிரம் போய்ட்டாரேன்னுதான் வருத்தமா இருக்குது சார் ... , போகிற காலம் வந்துச்சுன்னா போக வேண்டியது தானே “ என்றார் .

**இன்ஸ்பெக்டர் ரவி** : “ ஹ்ம்ம் ! .... ஓகே ..... அப்புறம் என்னாச்சு ? உர சோதனையெல்லாம் முடிஞ்சுடுச்சா ? “

**பிரனேஷ்** : “ ஆமா சார் ! சோதனையெல்லாம் முடிஞ்சுடுச்சு . அவங்க எல்லாத்தையும் , தரவா சோதனை பண்ணிட்டு , எங்களோட உரங்கள பயன்படுத்த ஒப்புதல் குடுத்துட்டாங்க . இன்னும் ஒரு வாரத்துல , எங்க கம்பெனியோட உரங்கள் , பயன்பாட்டுக்கு வந்துரும் “ .

*( பிரனேஷின் இந்த பதிலைக் கேட்டதும் , அதிர்ந்து போயிருந்தார்கள் இன்ஸ்பெக்டர் ரவியும் , ஏட்டு கந்தசாமியும் . பேராசிரியர் சதாசிவத்தின் கருத்துக்களுக்கு , முற்றிலும் முரண்பட்டதாக இருந்தது பிரனேஷின் அந்த பதில் . சற்று சுதாரித்துக்கொண்ட கந்தசாமி , அடுத்த கேள்வியைத் தொடங்கினார் ............ )*

***ஏட்டு கந்தசாமி** : " நம்ம குமாரசாமி ஐயா..., அதப் பத்தி என்ன சொன்னாரு ?*

***திலீபன்** : (.....பதற்றத்துடன்......) " எங்க கம்பெனி உரங்கள பயன்படுத்த , அவர்தான் சார் , மொதல்ல ஒப்புதல் குடுத்தாரு ...... " என்றார் .*

*குமாரசாமியின் மரணத்தில் இருக்கின்ற மர்மத்தை , இந்த தகவல் மேலும் உறுதிப்படுத்தியிருந்தது . இவர்களிடத்தில் , ஏதோ ஒரு உண்மை மறைந்திருப்பதை , ஏட்டு கந்தசாமியின் கண்கள் , இன்ஸ்பெக்டர் ரவிக்கு அடையாளம் காட்டியிருந்தது . அதை வெளிப்படையாகக் காட்டிக் கொள்ளாமல் ,*

*வழக்கமான விசாரணை போல , அவர்களிடம் விசாரித்துவிட்டு வெளியே வந்தனர் .....*

***இன்ஸ்பெக்டர் ரவி** : “ ஓகே ! THANK YOU FOR YOUR KIND CO-OPERATION . நாங்க கௌம்புறோம் . “ என்று வண்டியில் ஏறியிருந்தார்கள் . அவர்கள் போகும் வரை பார்த்திருந்து , நிம்மதிப் பெருமூச்சு விட்ட பிரனேஷ் “ ஒரு வழியா அவங்கள சமாளிச்சு அனுப்பிட்டோம் . கொஞ்ச நேரத்துல , கதி கலங்கிடுச்சே !..*

***திலீபன்** : “ எனக்கும் அப்படிதான் இருந்துச்சு . எதுக்கும் , இந்த விசயத்துல நாம கொஞ்ச ஜாக்கிரதையா இருக்கணும் ..... “ என்று சொல்லி முடித்த அடுத்த வினாடி , திலீபனின் செல்போன் திடீரென்று அலறியது . எடுத்துப் பார்த்த அவர் , ஹலோ ! என்றார் .. மறுமுனையில் , சிவநேசன் பேசினார் .*

***சிவநேசன்** : “ தம்பி ! நான் சிவநேசன் பேசுறேன் ... நாங்க இப்ப அங்கதான் வந்துட்டு இருக்கோம் ..... ரெடியா இருங்க .. இன்னும்*

*அரை மணி நேரத்துல வந்துருவோம் . "* *என்றவுடன் இணைப்பைத் துண்டித்திருந்தார்....*

*எரிச்சலுடன் செல்போனை பாக்கெட்டில் வைத்தான் தீலீபன் .*

***பிரனேஷ் :*** *" போன்ல யாரு ? "*

***தீலீபன் :*** *" மாத்தூர் கிராமத்துக்காரனுங்க .... காசு வாங்கறதுக்குன்னே ! வரிஞ்சுகட்டிட்டு வந்திட்டுருக்கானுங்க " என்றான் உச்சகட்ட எரிச்சலோடு .*

***பிரனேஷ் :*** *வரட்டும் ! வரட்டும் ! ............... சரி ! அதெல்லாம் இருக்கட்டும் . எனக்கு ஒரு யோசனை தோணுது .....*

***திலீபன் :*** *என்ன யோசனை ????*

***பிரனேஷ் :*** *" நாம எதுக்குடா காசு குடுக்கணும் ?? . இப்ப போலீஸ் ஸ்டேஷன்ல இருந்து , இன்ஸ்பெக்டர் வந்துட்டு போனதைச் சொல்லி , அவங்கள மெரட்டுவோம் . வேறு ஏதாவது பிரச்சனை வந்துச்சுன்னா , அவனுங்கள போட்டு*

*குடுத்துருவோம்ன்னு சொல்லி பயமுறுத்துவோம். நாமளா பாத்து , என்ன குடுக்கறோமோ , அதை வாங்கிட்டு போகட்டும் " ... நீ என்ன சொல்ற ???*

***திலீபன்** : " எனக்கென்னமோ ? இது சரியாப்படல .... இருந்தாலும் , நீ சொல்றியேன்னுதான் பாக்குறேன் " ..*

***பிரனேஷ்** : " விடுடா ! நான் பாத்துக்கறேன் ....." என்றவன் ,,,,, வேலையாட்கள் பதிவேட்டைத் திறந்து பார்த்துக்கொண்டிருந்தான் .*

*" என்னடா யாரோ ஒருத்தன் , இன்னிக்கு வேலைக்கு வர்ல போல இருக்கு . "*

***திலீபன்** : " ஆமாண்டா ! அவன் எதோ பேயப் பார்த்து பயந்துருக்கானாம் ... அதுனாலதான் அவன் இன்னிக்கு லீவாம் ....." என்றான் சிரித்துக்கொண்டே .*

**பிரனேஷ்** : “ இந்த மாத்தூர் கிராமத்துக்காரனுங்களுக்கு , வேற வேலையே இல்ல போல . லீவ் எடுத்துக்கறதுக்காக , என்னல்லாம் , சாக்குபோக்கு சொல்றானுங்க பாத்தியா ...“ என்றான் .

சரியாக அரைமணி நேரம் ... மாத்தூர் கிராமத்தலைவர் தவபுண்ணியத்தின் , ஸ்கார்பியோ கார் , உள்ளே வந்திருந்தது . காரிலிருந்து வேலைக்காரன் பொன்னையா , முதல் ஆளாக வெளியே இறங்கினான் . சிவநேசனும் ராமலிங்கமும் பின்னே இறங்க , கடைசியாக இறங்கினார் தவபுண்ணியம் . வேலைக்காரன் பொன்னையாவைப் பார்த்த அவர் ,

“ நீ இங்கயே இரு . நாங்க போயிட்டு வந்தர்றோம் “ என்று அவனை காருக்குப் பக்கத்தில் , நிக்க வைத்துவிட்டு , முன்னேறினார் . பிரனேஷும் , திலீபனும் , வேண்டா வெறுப்பாக , அவர்களை வரவேற்றிருந்தனர் . அனைவரும் உள்ளே சென்றவுடன் , அலுவலகக்

*கதவுகளையும் , ஜன்னலையும் சாத்தியிருந்தார்கள் .*

***ராமலிங்கம் :*** *“ என்ன பிரனேஷ் ? வெளியே , வேலையெல்லாம் படு பயங்கரமா நடந்துகிட்டு இருக்குது போல “ , என்றார் சிரித்தவாறே .*

***பிரனேஷ் :*** *“ ஆமாங்கய்யா ! இந்த வாரத்துக்குள்ள , எல்லா வாடிக்கையாளர்களுக்கும் , உரங்கள கொண்டுபோய் சேர்க்கணும் . அதுக்கான ஆயத்த பணிகள் தான் , இப்போ வேகமா போயிட்டு இருக்கு . “*

***சிவநேசன் :*** *“ அப்ப ! அடுத்த வாரத்துக்குள்ள நம்ம மாத்தூர் கிராமம் முழுவதற்கும் , உங்க உரங்கள தான் உபயோகப்படுத்த போறாங்க . அப்படித்தானே ! இல்லையா ! “*

***திலீபன் :*** *“ ஆமாம்யா ! “ என்றவன் , உள்ளே சென்று , ஒரு பையை எடுத்து வந்து கொடுத்தான் .*

அதை வாங்கிப் பார்த்த ராமலிங்கமும் , சிவநேசனும் , உள்ளே இருந்த பணக்கட்டுகளைப் பார்த்தவுடன் , எண்ண ஆரம்பித்தனர் . தவபுண்ணியம் எதுவும் பேசாமல் , அவர்களையே பார்த்துக் கொண்டிருந்தார் . பணத்தை எண்ணிக் கொண்டிருந்த அவர்களின் முகம் , ஒரு கட்டத்தில் , மாறியிருந்தது . திடீரென்று முகம் சிவந்த ராமலிங்கம் அவர்களைப் பார்த்து ,

“ தம்பி ! நாங்க காட்டு மிராண்டிங்க தான் . ஆனா ! கணக்கு வழக்கு தெரியாதவங்க இல்ல . பேசுனபடி , 2 லட்சம் இதுல இல்லியே . வெறும் அம்பதாயிரம் தான் இருக்குது “ .. என்றார் கோபத்தோடு .

(.....மெல்ல புன்னகைத்திருந்தார் தவபுண்ணியம்.....)

**பிரனேஷ்** : எதுவுமே குடுக்க வேண்டாம்னு நெனச்சோம் . ஏதோ பழகுன தோஷத்துக்காக , வேற வழியில்லாம இதை குடுக்கறோம் . மரியாதையா எடுத்துட்டு போயிருங்க .

***சிவநேசன்*** *: " என்ன தம்பி ! பேசறது யார்கிட்டன்னு தெரிஞ்சுதான் பேசுறியா ? . " எங்ககிட்டயே உங்க வேலையக் காட்டுறீங்களா ! " .*

***ராமலிங்கம்*** *: " அந்த குமாரசாமி போன இடத்துக்கே , நீங்களும் போறீங்களா .................. "*

***திலீபன்*** *: " ஐயா !!!!! ஒரு நிமிஷம் WAIT பண்ணுங்க .......... இப்பதான் , தூத்தூர் போலீஸ் ஸ்டேஷன்ல இருந்து , வந்து , குமாரசாமி கேஸ் சம்பந்தமா , விசாரணை பண்ணிட்டு போயிருக்காங்க .... நாங்க ஒரு வார்த்த உங்களப் பத்தி சொல்லிருந்தோம்னா , இன்னிக்கு நீங்க மூணு பேரும் , ஜெயில்ல களி தின்னுட்டு , கம்பி எண்ண வேண்டியது தான் " .*

***பிரனேஷ்*** *: " அதனால மரியாதையா , குடுக்கறத வாங்கிட்டு போயிருங்க .. இல்ல , இன்னும் முரண்டு புடிச்சீங்கன்னா , இப்பவே இன்ஸ்பெக்டர் ரவிக்கு கால் பண்ணி , எல்லா விவரத்தையும் , விலாவாரியா சொல்லிருவோம்*

. அதுக்கப்புறம் உங்க இஷ்டம் “ என்றான் கேலியாக .

இதயெல்லாம் பார்த்துக்கொண்டிருந்த தவபுண்ணியம் , திடீரென்று எழுந்து , சிவநேசனையும் , ராமலிங்கத்தையும் பார்க்க , அவர்களும் எழுந்து நின்றனர் . தவபுண்ணியம் தன் தலையை , லேசாக வருடிக்கொண்டே , பிரனேஷையும் , திலீபனையும் பார்த்து ,,,,,, லேசாக சிரித்து விட்டு ,

“ தம்பி ! உரம் தயாரிக்கற வேலைய மட்டும் பாருங்க ! ..... இல்ல ,,,,,,, நீங்களே இந்த மண்ணுக்கு உரமாயிரப் போறீங்க !!! . “ என்று எச்சரித்துவிட்டு வெகு வேகமாக வெளியேறினார் . “ .

வெளியே கைகளைக் கட்டிக் கொண்டு , காருக்குப் பக்கத்தில் நின்று கொண்டிருந்தான் பொன்னையா . வேகமாக சென்ற தவபுண்ணியம் , பொன்னையாவின் காதுகளில் ஏதோ முணுமுணுத்துவிட்டு , அனைவரும் காரில் ஏறிப் புறப்பட்டிருந்தார்கள் .

இதயெல்லாம் ஜன்னலுக்கு வெளியே , நின்று ஒட்டுக் கேட்டுக் கொண்டிருந்த ஒரு பெரியவர் , அடுத்த பத்தாவது நிமிடத்தில் , இன்ஸ்பெக்டர் ரவியின் காதுகளுக்கு செல்போன் மூலமாக நடந்த விசயங்களையெல்லாம் , தெரியப்படுத்தியிருந்தார் .

# 10

பொழுது சாய்ந்து கொண்டிருக்கின்ற நேரம். கடிகார முள் சரியாக, ஏழு மணியைத் தொட்டிருந்தது. இருட்டு மெல்ல மெல்ல பரவிக் கொண்டிருந்தது. தூத்தூர் காவல் நிலையத்தை நோக்கி, போலீஸ் ஜீப் பயணித்திருந்தது. அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்து, யோசித்துக் கொண்டே வந்திருந்தார் இன்ஸ்பெக்டர் ரவி.

**ஏட்டு கந்தசாமி** : சார்! குமாரசாமி ஐயா, பேயடிச்சு செத்துப் போயிட்டார்ன்னு, ஒரு ஊரையே நம்ப வச்சிருக்கானுங்க. இது எவ்வளோ பெரிய குற்றம் !!!!

**இன்ஸ்பெக்டர் ரவி** : " ஹ்ம்ம் !!! அது மட்டும் இல்ல ,,,, " பாவம் அந்த வெண்ணிலாப் பொண்ணு மேல, பழியப் போட்டுட்டு, இவனுங்க சுதந்திரமா நடமாடிக்கிட்டு இருக்கானுங்க ".

***ஏட்டு கந்தசாமி :*** *“ பெரிய மனுஷன்ங்கற போர்வைல , இன்னும் என்னென்ன அட்டூழியங்கள பண்ணிட்டு இருக்கானுங்களோ ??? “*

***இன்ஸ்பெக்டர் ரவி :*** *“ இவனுங்க மட்டும் இல்ல கந்தசாமி ................... நம்ம நாட்ல ,,,, இப்படிப்பட்டவங்க நெறைய பேர் இருக்கானுங்க . “ இவர்களோட போலி பிம்பங்கள் உடைத்தெறியப்பட வேண்டும் . பொதுமக்கள் முன்னிலையில் , இவர்களோட கபட நாடங்கள வெளிக்கொண்டு வரணும் .*

***ஏட்டு கந்தசாமி :*** *“ சார் !!! ..... இருந்தாலும் ,,,,,, நாங்க பார்த்த அந்த அமானுஷ்யமான விசயங்கள் , கேட்ட சப்தங்கள் எல்லாம் பொய்ன்னு நீங்க நெனைக்கிறீங்களா ???.*

***இன்ஸ்பெக்டர் ரவி :*** *“ நான் எதையுமே பொய்ன்னு சொல்லல . எல்லாமே ஒரு IMAGINATION தான் .... ஒரு சின்ன லாஜிக் தான் அது . நாம தனியா இருக்கும் போது , ஒரு சின்ன சப்தம் கேட்டாக்கூட , அதுவே நம்மளோட*

மனசுக்கு , கொஞ்சம் நெருடலாக இருக்கும் . ஆனா இவனுங்க வேண்டுமென்றே , மக்கள் மனசுல , ஒரு அமானுஷ்ய சாயத்த பூசியிருக்கானுங்க .... *SO* , அதைப் பற்றி நெனைக்க , நெனைக்க , நம்மளோட மனசும் , எந்த ஒரு புது விஷயம் நடந்தாலும் , அதை இதோட தொடர்புபடுத்தியே சிந்திக்கும் . அதுதான் இப்ப மாத்தூர் கிராமத்து மக்கள் மனசுல நடந்துட்டு இருக்கு . குமாரசாமியின் மரணத்துக்கு , கொஞ்சம் நாளைக்கு முன்னாடிதான் , அந்த வெண்ணிலாங்கற பொண்ணு செத்துப் போயிருக்கு ..... *SO* , இத அவங்களுக்கு சாதகமா பயன்படுத்திட்டு , பழியை , அந்தப் பொண்ணு மேல போட்ருக்கானுங்க ................... அப்படிப் பார்க்கும்போது , அன்னிக்கு என் வீட்டுக் கதவத் தட்டினது கூட ,,,,,,, இவனுங்க வேலையா இருக்கலாம்ன்னு எனக்கு நினைக்கத் தோணுது ... “

**ஏட்டு கந்தசாமி** : “ சார் !!! இதுல எனக்கு இன்னொரு சந்தேகமும் இருக்கு . மாத்தூர்

*கிராமத்துல , அமானுஷ்ய நடமாட்டங்கள் இருக்குதுன்னு , வேதாந்த சுவாமிகள் ஏன் சொல்லணும் ?? “*

*(….சற்று நேரம் யோசித்துவிட்டு….)*

***இன்ஸ்பெக்டர் ரவி** : “ எனக்கும் அது சந்தேகத்திற்கிடமாத்தான் இருக்குது . ஏன் அவர் இத சொல்லணும் ? . தவபுண்ணியம் , சிவநேசன் , ராமலிங்கம் , வேதாந்த சுவாமிகள் , இவங்க எல்லாருமே , அமானுஷ்யம்ங்கற ஒரே விசயத்துல ஒத்துப்போறாங்க . SO , இந்த விசயத்தில , இவங்க எல்லாருக்குமே தொடர்பு இருக்குமோன்னு நான் சந்தேகப்பட்றேன் . மொதல்ல , விசாரணை பண்ண வேண்டிய விதத்தில , மாத்தூர் கிராமத்தலைவர்கள விசாரிச்சா , பல உண்மைகள் வெளில வந்துரும் . “ என்றார் . திடீரென்று மழை , தூறல்போட ஆரம்பித்திருந்தது . சற்று நேரத்தில் , அதுவே பெரிய மழையாக உருமாறியிருந்தது . அதற்குள் தூத்தூர் காவல் நிலையம் வந்திருந்தது . ஜீப்பிலிருந்து வெளியே இறங்கியதும் , வேகவேகமாக இருவரும் உள்ளே*

புறப்பட்டிருந்தார்கள். காவலுக்கு நின்றுகொண்டிருந்த போலீசார், சல்யூட்டுடன் அவர்களுக்கு எதிர்பட்டிருந்தார்கள். உள்ளே விசாரணைக் கைதிகளை விசாரிக்கக் கூடிய அறையில், இருவரும் தனியாக விவாதிக்க ஆரம்பித்திருந்தனர்.

**இன்ஸ்பெக்டர் ரவி** : *" கந்தசாமி ! இப்ப மணி 8 ஆகப்போகுது. இன்னிக்கு ராத்திரி சரியா பத்து மணிக்கு, தவபுண்ணியத்தையும், அவரோட சகாக்களையும், விசாரணைங்கற பேர்ல, தனித் தனியா ஸ்டேஷனுக்குக் கூட்டிட்டு வரப்போறோம். நாம அவங்கள கைது பண்ணப் போறோம்ங்கற விஷயம், எக்காரணத்தைக் கொண்டும், யாருக்குமே தெரியக்கூடாது. குறிப்பா அவங்க மூணு பேருக்குமே, இந்த விஷயம் தெரியவே கூடாது.*

**ஏட்டு கந்தசாமி** : *" எஸ் சார் ! ... ஆனா இதுல ஏதாவது பிரச்சனை வருமோன்னு நெனக்கிறேன் ... விசாரணைன்னு சொன்னா, அவங்க ஒத்துழைப்பாங்கன்னு நெனைக்கிறீங்களா ! " .*

**இன்ஸ்பெக்டர் ரவி :** “ வேற வழியில்ல . அவங்கள எப்படியாச்சும் ஒத்துழைக்க வெச்சு , இங்க கூட்டிட்டு வந்தே ஆகணும் ... ஏன்னா நாம கைது பண்ணப் போறோம்ன்னு , தெரிஞ்சா அவனுங்க ALERT ஆயிருவாங்க . தப்பிக்க நெனைப்பாங்க . அதுக்கு முன்னாடி , மேலிடத்துல உத்தரவு வாங்கிட்டுத்தான் , நாம நம்ம வேலைய ஆரம்பிக்கணும் . நான் இன்னும் கொஞ்ச நேரத்துல மேலிடத்துல பேசி APPROVAL வாங்கிடுவேன் . அதுக்குள்ள நீங்க மத்த வேலைகளைப் பாருங்க . “

ஓகே சார் ! என்ற கந்தசாமி , அடுத்த கட்ட வேளைகளில் துரிதம் காட்டியிருந்தார் ........... மேலதிகாரிகளோடு , அரை மணி நேரமாகப் பேசிக்கொண்டிருந்தார் இன்ஸ்பெக்டர் ரவி . “ சார் ! கவலைப்படாதீங்க ! எந்தப் பிரச்சனையும் வராது . அப்படி வந்தாலும் நான் பாத்துக்குறேன் . நீங்க PERMISSION மட்டும் குடுங்க . “ என அவர்களை சமாதானப்படுத்தும் விதமாக , கடைசிவரை பேசிக்கொண்டிருந்தார் . நேரம் மணி 9 –ஐத் தொட்டிருந்தது . ஒரு வழியாக

அவர்களிடம் , சமாதானம் வாங்கிய அவர் , பெருமூச்சு விட்டிருந்தார் . அதைப் பார்த்த ஏட்டு கந்தசாமி , “ சார் ! ஒரு வழியா அவங்கள ஓகே பண்ணீட்டீங்க போல “ என்றார் சிரித்துக்கொண்டே “ .

**இன்ஸ்பெக்டர் ரவி** : “ ஆமாய்யா !............... எப்படியோ சம்மதிக்க வச்சுருக்கேன் . இன்னிக்கு ராத்திரியோட ராத்திரியா , மாத்தூர் கிராமத்து மர்மத்துக்கு , ஒரு முற்றுப்புள்ளி வச்சிர வேண்டியதுதான் .... சரி கெளம்ப ரெடியா இருங்க .. “

**ஏட்டு கந்தசாமி** : “ ஓகே சார் ! கண்டிப்பா .....“ என இருவரும் கிளம்ப தயாராயிருந்தார்கள் . மழையும் விட்டிருந்தது . நீடித்திருந்த மர்மம் , நீங்கிய சந்தோஷத்தில் , இன்ஸ்பெக்டர் ரவி , தன்னுடைய முகத்தில் தண்ணீரைத் தெளித்து , நிம்மதிப் பெருமூச்சு விட்டிருந்தார் . அந்த நேரம் பார்த்து , ஏட்டு கந்தசாமியின் செல்போன் அலறியது . எடுத்துப் பார்த்த , அவர் ஹலோ என்று பேச ஆரம்பித்தார் ......... கொஞ்ச நேரத்தில் , ஏட்டு கந்தசாமியின் முகம்

*மாறியிருந்தது . அவரது முகமாற்றத்தை , ஆச்சர்யமாகப் பார்த்த இன்ஸ்பெக்டர் ரவி , கந்தசாமியைப் பார்த்து , “ யோவ் ! என்னாச்சுய்யா ????? ” . என்றார்*

**ஏட்டு கந்தசாமி** *: “ சார் !!!!!!!!! மாத்தூர் கிராமத்தலைவர்களில் ,, ஒருவரான சிவநேசன் ............................................ இறந்துட்டாராம் “ .*

**இன்ஸ்பெக்டர் ரவி** *: (..... பேரதிர்ச்சியுடன் .....) “ WHAT ?????????????????? “ .*

**ஏட்டு கந்தசாமி** *: “ ஆமா சார் ! , இப்பதான் , நம்பத்தகுந்த வட்டாரங்களில் இருந்து , நமக்குத் தகவல் வந்துருக்கு . “ .*

*மீளாத அதிர்ச்சியில் உறைந்திருந்த , இன்ஸ்பெக்டர் ரவி ,,, தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டு , “ எப்படிடிடிடிடி இறந்தாராம் ???? “ . என்றார் .*

**ஏட்டு கந்தசாமி** : " தெரியல சார் ! நாம போய்தான் பாக்கணும் . " .

**இன்ஸ்பெக்டர் ரவி** : " COME ON , LET'S GO ..........." என்றவுடன் இருவரும் போலீஸ் ஜீப்பில் ஏறியிருந்தார்கள் .

மிகப்பெரிய குழப்பத்தினிடையில் , போலீஸ் ஜீப் , புயலாகக் கிளம்பியிருந்தது . போலிஸ் ஜீப்பின் வெளிச்சத்தால் , வழிநெடுகிலும் இருந்த இருட்டு , தன்னை விலக்கிக் கொண்டு அவர்களுக்கு வழிகாட்டியிருந்தது . இன்ஸ்பெக்டர் ரவியின் மனதில் , சந்தேக மேகங்கள் சூழ்ந்திருந்தது . எப்பொழுதும் , எதையாவது பேசிக்கொண்டு வரும் , ஏட்டு கந்தசாமியும் மௌனம் காக்க , ஒரு மயான அமைதி அங்கு நிலவியிருந்தது . இருபது நிமிடப் பயணத்தில் , மாத்தூரின் எல்லையை அடைந்திருந்தார்கள் . ஆங்காங்கே பொதுமக்கள் கூட்டம் கூட்டமாக நின்று பேசிக்கொண்டிருந்தனர் . கொஞ்ச நேரத்தில் , சிவநேசனின் தோப்புவீடு வந்திருந்தது . அந்த இரவு நேர அமைதியிலும் , அழுகுரல் சத்தம்

அந்த ஏரியாவையே , துக்கத்தில் ஆழ்த்தியிருந்தது . தோளில் துண்டுகளோடு , பெருசுகள் தோப்பின் வெளியே நின்றுகொண்டு , பேசிக் கொண்டிருந்தார்கள் . அவர்களையெல்லாம் தாண்டி , வீட்டை நோக்கி முன்னேறியிருந்தார்கள் இன்ஸ்பெக்டர் ரவியும் , ஏட்டு கந்தசாமியும் ........... வீட்டின் உள்ளே , போர்வையின் விரிப்பில் , நேராகப் படுத்தவாறு கிடத்தப்பட்டிருந்தார் சிவநேசன் ........ சிவநேசனின் மனைவி , அவரின் இறப்பை ஜீரணிக்க முடியாமல் , பிரம்மை பிடித்தவர் போல் ,,, அவர் பக்கத்திலேயே உட்கார்ந்திருந்தார் . அவரைச் சுற்றி , அழுதபடியே பெண்கள் கூட்டம் மொய்த்திருந்தது . உள்ளே சென்று பார்த்து விட்டு , வெளியே வரும்போது , திண்ணையில் தவபுண்ணியமும் , ராமலிங்கமும் சோகமே உருவாய் உட்காந்திருந்தார்கள் . சிவந்து கிடந்த தவபுண்ணியத்தின் கண்களில் , தண்ணீர் தடாகம் , ஊற்றெடுத்திருந்தது . எப்பொழுதும் கம்பீரமாய் தோற்றமளிக்கும் தவபுண்ணியத்தின் முகம் , சிவநேசனின் ஈடுகட்ட முடியாத

*இழப்பால் , கலவரமடைந்திருப்பதை அங்கு காண முடிந்திருந்தது . ஒரு கட்டத்தில் பொறுமையிழந்த ராமலிங்கம் , தவபுண்ணியதைப் பார்த்து*

***ராமலிங்கம்** : " ஐயா ! நீங்க கவலைப்படாதீங்க ஐயா ! , எனக்குத் தெரிஞ்சு , ,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,, அந்த NEXTGEN உரம் தயாரிக்கிற கம்பெனிக்காரனுங்க தான், இப்படி பண்ணியிருக்கணும் . அவனுங்கள............ நாளைக்கு காலைலக்குள்ள அவனுங்களோட கதைய முடிச்சிட்றேன் . அப்பதான் என்னோட ஆத்திரம் தீரும்யா . " என்று எழுந்து நின்றார் கோபமாக .*

***தவபுண்ணியம்** : ( ...... கோபத்துடன் நின்றிருந்த ராமலிங்கத்தைப் பார்த்து , கையமர்த்திய தவபுண்ணியம் ...... ) " ராமலிங்கம் ! கொஞ்சம் அமைதியா இரு . அவனுங்க இதப் பண்ணீருக்க மாட்டாங்க . அவனுங்களுக்கு அந்த அளவுக்கு தைரியம் இல்ல . நல்லா யோசிச்சுப் பாரு ... நம்மளப்*

பத்தி , நல்லா தெரிஞ்ச எவனோ தான் இதைப் பண்ணீருக்கான் .......    “ .

பக்கத்தில் இருந்த நபர்களிடம் , விசாரித்துக் கொண்டிருந்த ஏட்டு கந்தசாமி , இன்ஸ்பெக்டர் ரவியின் பக்கத்தில் வந்து ,

“ சார் !  கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி , இந்த வீட்டுக் கதவு தட்டப்படும் சப்தம் கேட்ருக்குது . சிவநேசன் ஐயா , எழுந்து போய் கதவத் திறந்து பாத்துருக்காரு . வெளில யாருமேயில்ல . அப்ப நல்ல மழை வேற .   கையில டார்ச் எடுத்துட்டு வெளில போயிருக்காரு . போனவர் ரொம்ப நேரமா திரும்பி வரலையேன்னு , இவங்கெல்லாம் போய்ப் பார்த்துருக்காங்க . அப்பதான் அவர் அந்த இடத்துலேயே இறந்து கிடந்தது இவங்களுக்கு தெரிஞ்சுருக்கு . உடனே நமக்கு தகவல் குடுத்துருக்காங்க . இது ஒரு இயற்கையான மரணாமாக்கூட இருக்கலாம் சார் !!!  ஆனா வெண்ணிலாவோட ஆவி தான் இவர பழி வாங்கிருக்குன்னு , ஊர்க்காரங்கல்லாம் பேசிக்கிறாங்க . இவங்க சொல்றபடி பாத்தா , கொஞ்ச நேரத்துக்கு முன்னாடிதான் , அவர்

இறந்துருக்கார் . ஆனா அவர் உடம்புல எந்தவிதமான காயங்களுமே இல்ல . .... "

**இன்ஸ்பெக்டர் ரவி** : (............... சற்று நேரம் யோசித்துவிட்டு ...............) ஹ்ம்ம் !!! ஓகே !!! . அவர் இறந்து கிடந்த ஸ்பாட்ட நான் பார்க்கணும் . " என்றார் .

பக்கத்தில் இருந்த நபர் வழியைக் காட்ட , ஏட்டு கந்தசாமியும் , இன்ஸ்பெக்டர் ரவியும் பின்தொடர்ந்திருந்தார்கள் . கொஞ்ச நேர நடையில் , வீட்டுக்குப் பின்னால் இருந்த , செம்பருத்தித் தோட்டத்தை நெருங்கியிருந்தார்கள் . சிவநேசன் இறந்து கிடந்த இடத்தை , அடையாளம் காட்டிவிட்டு சென்றிருந்தார் அந்த நபர் ... ( ஏட்டு கந்தசாமி , அடையாளம் காட்டப்பட்ட இடத்தைச் சுற்றி ஒரு பெரிய வட்டம் போட்டிருந்தார் .) அந்த இடம் முழுவதையும் , தன் கண்களால் அலசியிருந்தார் இன்ஸ்பெக்டர் ரவி . ஒவ்வொரு இடமாகப் பார்த்துக் கொண்டிருந்த அவரின் பார்வை , தூரத்தில் இருந்த செம்பருத்திச் செடியை நோக்கிச் சென்றது .. அந்தச் செடியின்

கிளைகள் சற்றே உடைக்கப்பட்டிருந்தது அப்போது தெரியவந்தது . பக்கத்தில் சென்று அதை ஊர்ஜிதப்படுத்திக் கொண்டார் . அதன் வழியாக , யாரேனும் ஊடுருவி வந்திருக்கலாம் என்கின்ற யூகத்தில் , குறிப்பிட்ட அந்த இடத்தைச் சுற்றியே மேலும் , தனது பார்வையைக் கூர்மைப்படுத்தியிருந்தார் . கனமழை பெய்ததன் காரணமாக , அந்த இடமே சேறும் சகதியுமாகக் காட்சியளித்திருந்தது . கொஞ்ச நேரமாகவே , அந்த சகதியையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்த ஏட்டு கந்தசாமி , திடீரென இன்ஸ்பெக்டர் ரவியைக் கூப்பிட்டு , அந்த சகதியின் ஓரத்தை நோக்கி , தன் கையைக் காட்டினார் . அதில் மனிதக் காலடித்தடம் , பதிந்திருந்ததைக் கண்டதும் , திடுக்கிட்டிருந்தார் இன்ஸ்பெக்டர் ரவி . அதே காலடித்தடம் , தூரத்தில் இருந்த மதில் சுவர் வரை , பரவியிருந்ததை அங்கு பார்க்க முடிந்தது . அந்த கால்தடங்களையே , நன்கு உற்றுப் பார்த்துக் கொண்டிருந்த இன்ஸ்பெக்டர் ரவி , தன்னுடைய செல்போனில் , அவற்றைப் புகைப்படமெடுத்துக் கொண்டார் . அந்தக்

கால்தடங்களின் இடதுகுதிங்காலில், ஏதோ ஒரு வெட்டு விழுந்திருப்பதைப் போல, எல்லாப் புகைப்படங்களிலும் தெரிந்திருந்தது. அதை உணர்ந்து கொண்ட இருவரும், அந்த மதில் சுவர் வரை சென்று பார்த்தார்கள். வெளியே ஆள் அரவமற்று வெறிச்சோடியிருந்தது.

***ஏட்டு கந்தசாமி*** *: " சார்!, எனக்கு தெரிஞ்சு இது கொலை தான்னு நான் நெனைக்கிறேன். நமக்கு இப்ப கெடச்சிருக்கிற ஒரே தடயம், இந்த இடதுகுதிங்கால் வெட்டு தான் சார் .... "*.

***இன்ஸ்பெக்டர் ரவி*** *: " இந்த விஷயம், நமக்குள்ள மட்டுமே இருக்கட்டும். வெளில தெரிஞ்ச மாதிரி காட்டிக்காதீங்க. "* என்றார்.

இருவரும் வெளியே நடந்து வந்தார்கள். அங்கிருந்த ஒவ்வொருவரையும், தன் பார்வையால் சலித்துக்கொண்டிருந்தார் இன்ஸ்பெக்டர் ரவி. ( வேளாண் ஆசிரியர் குமாரசாமியின் மரணத்துக்குக் காரணமானவர், தவபுண்ணியம்தான் என்று

தெரிந்தும் , தற்போதைய சூழ்நிலையைக் காரணம் காட்டி , மௌனம் சாதித்திருந்தார்கள் இன்ஸ்பெக்டர் ரவியும் , ஏட்டு கந்தசாமியும் . ) நேரம் ஆக , ஆக , கூட்டம் சற்று குறைய ஆரம்பித்திருந்தது ... ஒரு கட்டத்தில் நேரம் நள்ளிரவைக் கடந்திருந்தது . தவபுண்ணியம் மற்றும் ராமலிங்கத்தின் வீடுகளுக்கு கூடுதல் பாதுகாப்பு கொடுக்கப்பட்டிருந்தது . தவபுண்ணியமும் , ராமலிங்கமும் கிளம்பத் தயாராயிருந்தார்கள் . தவபுண்ணியத்தைப் பார்த்த இன்ஸ்பெக்டர் ரவி , " சாரி சார் ! உங்க நண்பர் இறப்பிற்கு , எங்களோட ஆழ்ந்த அனுதாபங்கள் சார் . "குமாரசாமியின் மரணத்தில் ஆரம்பித்து , இப்பொழுது சிவநேசன் வரை மாத்தூர் சம்பவங்கள் நீண்டுகொண்டிருக்கின்றது . அவர் எப்படி இறந்தார்ன்னு விசாரணை போய்ட்டிருக்கு .... (என்று முடிப்பதற்குள் , தவபுண்ணியம் கறாரான குரலில் பேச ஆரம்பித்தார் ... )

**தவபுண்ணியம்** : ( .... சிவந்த முகத்துடன் ..... ) இது நிச்சயமா சாதாரணமான சாவு இல்ல . ஆள்

யார்ன்னு தெரிஞ்சா, உடனே சொல்லுங்க. மத்தத நான் பாத்துக்கறேன். நான் இத சாதரணமா விடப்போறதில்ல. நீங்க என்ன வேணாலும் பண்ணிக்குங்க. ஆனா, அவன் யார்ன்னு எனக்குத் தெரிஞ்சாகணும் .... " என்றார்.

**இன்ஸ்பெக்டர் ரவி** : " சரிங்க சார்! எதுக்கும், நீங்களும் கொஞ்சம் ஜாக்கிரதையா இருங்க. உங்க வீடுகளுக்கெல்லாம், கூடுதல் பாதுகாப்பு குடுத்துருக்கோம். " என்று அவர்கள் இருவரையும், அவரவர் கார்களில் வழியனுப்பியிருந்தார்.

உடைந்த மனதுடன் ராமலிங்கமும், தவபுண்ணியமும் அவரவர் வீடுகளுக்குத் திரும்பியிருந்தார்கள். கூடுதல் பாதுகாப்புக்காக, இரவு நேர ரோந்துப் படையினர் நான்கு பேர், அவர்களுக்குத் துணையாக அனுப்பி வைக்கப் பட்டிருந்தனர். அடுத்த பதினைந்து நிமிடங்களில், போலீஸ் ஜீப், தூத்தூர் போலீஸ் ஸ்டேஷனை நோக்கிப் பறந்திருந்தது. இரவுப் பொழுதை, போலிஸ் ஸ்டேஷனிலேயே கழிக்க

முடிவெடுத்திருந்தார்கள் இன்ஸ்பெக்டர் ரவியும் , ஏட்டு கந்தசாமியும் .... களைப்பு மிகுதியால், ஸ்டேஷனில் வைக்கப்பட்டிருந்த மேசையிலேயே கண்ணயர்ந்திருந்தார் ஏட்டு கந்தசாமி . இன்ஸ்பெக்டர் ரவியின் கண்கள் உறக்கத்துக்கு, முட்டுக்கட்டை போட்டிருந்தது . இந்த கேஸ் சம்பந்தமான யோசனையிலேயே உறக்கத்தைத் தொலைத்திருந்தார் இன்ஸ்பெக்டர் ரவி .

# *11*

*அடுத்த நாள் காலை 9 மணி . மாத்தூர் கிராமப் பஞ்சாயத்து அரசமரத்தடியே , மிகப்பெரிய மக்கள் கூட்டம் நின்றுகொண்டிருந்தது . வேதாந்த சுவாமிகள் , தன்னுடைய சீடர்களுடன் அங்கே முகாமிட்டிருந்தார் . மாத்தூர் சம்பவங்களுக்கான ஒரு தீர்வை எதிர்பார்த்து , கிராம மக்கள் அங்கே காத்துக் கொண்டிருந்தனர் . அந்த வழியாக வந்த , போலீஸ் ஜீப் , இந்த கூட்டத்தைப் பார்த்ததும் நின்றிருந்தது . புரியாத புதிராய் , அந்த ஜன சங்கமத்தில் கலந்திருந்தார்கள் இன்ஸ்பெக்டர் ரவியும் , ஏட்டு கந்தசாமியும் . சரியாக 09:1 o மணிக்கு சுவாமிகள் பேச ஆரம்பித்திருந்தார் .*

**வேதாந்த சுவாமிகள்** *: “ இங்கு கூடியிருக்கின்ற அனைவருக்கும் , என் முதற்கண் வணக்கங்கள் . நான் முன்பே சொன்னது போல , மாத்தூர் கிராமத்தில் அமானுஷ்ய நடமாட்டங்கள் ,*

மிகவும் மோசமான அளவில் அதிகரிக்க ஆரம்பித்திருக்கின்றது . அதற்க்கு உங்களின் கவலை தோய்ந்த முகங்ககளே சாட்சி . இன்று இரவுக்குள் , யாருக்கும் , என்ன வேண்டுமானாலும் நடக்கலாம் . நாம் இன்று , அதன் முடிவுக்கான கடைசிக் கட்டத்தை நெருங்கியிருக்கிறோம் . இன்று இரவு நடைபெறவிருக்கும் அர்த்த சாம யாகத்தோடு , அந்த அமானுஷ்ய நடமாட்டத்துக்கு ஒரு முற்றுப் புள்ளி வைக்கப் போகிறோம் . எனவே அதுவரை பொதுமக்கள் , மிகுந்த பாதுகாப்போடு இருக்க வேண்டியது அவசியம் . அதற்கான வழிமுறைகளைத் தான் , நான் இப்பொழுது சொல்லப்போகிறேன் “ என்று பேசலானார் .

“ இதோ நான் கையில் வைத்திருப்பது , எங்கள் அன்பாலயத்தால் பிரத்யேகமாகத் தயாரிக்கப்பட்ட , ஒரு சுத்தமான தீர்த்தம் .... இதை ஒவ்வொரு வீட்டின் வாசலிலும் , சரியாக ஆறு மணிக்கு மேல் , தெளிக்க வேண்டும் . அதன் பின்னர் , மூன்று நெய் விளக்குகளை ,

மேற்கு நோக்கி , வீட்டைப் பார்த்தவாறு ஏற்ற வேண்டும் . இரவு நேரம் ஆக , ஆக , அந்த அமானுஷ்யத்தின் ஆட்டம் அதிகரிக்க ஆரம்பித்திருக்கும் . எனவே இன்று ஒரு இரவு , அனைவரும் வெளியே செல்வதைத் தவிர்ப்பது சாலச்சிறந்தது ........................... இந்த யாகத்திற்கு , தங்களால் முடிந்த பொருளுதவியை , காணிக்கையாக அளிக்க முற்பட்டால் , அதை இந்த அன்பாலயம் , பரிபூரணமாக ஏற்றுக் கொள்ளும் . ” என்று பேசி முடித்திருந்தார் .

அங்கிருந்த பொதுமக்கள் , தங்களால் முடிந்த காணிக்கையை செலுத்தி விட்டு , அந்த தீர்த்தத்தை வாங்கிக்கொண்டு செல்ல ஆரம்பித்திருந்தனர் . அதைப் பார்த்துக் கொண்டிருந்த இன்ஸ்பெக்டர் ரவி , எதுவும் பேசமனதில்லாமல் , கந்தசாமியைப் பார்த்து ,

“ வாய்யா போலாம் !!! .... என்றார் எரிச்சலோடு ..

*இருவரும் மீண்டும் , ஜீப்பை நோக்கி செல்ல ஆரம்பித்த கணம் , வேதாந்த சுவாமிகள் இன்ஸ்பெக்டர் ரவியைப் பார்த்து ,*

*“ ரவி ! ரவி “ என்று கூப்பிட ஆரம்பித்தார் .... திரும்பிப் பார்த்த இருவரும் ,,,, வேதாந்த சுவாமிகளின் பக்கம் வந்தனர் .*

***வேதாந்த சுவாமிகள் :** “ என்ன ரவி ! நீங்க சொன்னமாதிரி , மாத்தூர் கிராமத்துல , நடக்குற சம்பவங்களுக்கான , அறிவியல் பூர்வமான உண்மையை எதையாவது , கண்டுபிடிச்சீங்களா ??? “ என்றார் கேலியாக . “*

***இன்ஸ்பெக்டர் ரவி :** (... மிகுந்த எரிச்சலுடன் ...) “ ஆமாங்க சுவாமி ! இன்னும் கூடிய சீக்கிரத்துல , இந்த மாத்தூர் கிராமத்த ஏமாத்திகிட்டு , சுத்திட்டு இருக்கற , அத்தனை பேர்த்தையும் , புடிச்சு ஜெயில் கம்பிக்குள்ள , தள்ளி , களி திங்க வைக்கத்தான் போறேன் . அந்த நாள் வெகுதூரத்தில் இல்லை ...... “ என்றார் .*

**வேதாந்த சுவாமிகள்** *: (... ரவி மறைமுகமாக , தன்னையும் தாக்குகிறார் என்பதைத் தெரிந்தும் , முகமலர்ச்சியுடன் , சிரித்துக்கொண்டே .... )*

*“ ..... உங்களோட முயற்சிக்கு , என்னோட வாழ்த்துக்கள் .... ஆனா இதுக்கப்புறம்தான் , நீங்க இன்னும் ஜாக்கிரதையா இருக்கனும் ... உங்களுடைய பாதுகாப்புகள துரிதப்படுத்துங்க ... எந்த நேரத்திலும் , என்ன வேண்டுமானாலும் நடக்கலாம் . “ என்றார் எச்சரிக்கையோடு .*

**இன்ஸ்பெக்டர் ரவி** *: (... உச்ச கட்ட எரிச்சலோடு ...) “ சுவாமிஜி !!! என்ன பண்ணனும்னு , எங்களுக்கு நல்லாத் தெரியும் . உங்க அக்கறைக்கு ரொம்ப நன்றி .... என்று இருவரும் , அங்கிருந்து கிளம்ப முற்பட்ட அடுத்த வினாடி , இன்ஸ்பெக்டர் ரவியின் செல்போன் கதறியது . எடுத்துப் பேச ஆரம்பித்திருந்த அவரின் முகம் , கொஞ்ச நேரத்தில் , சட்டென்று மாறியிருந்தது .*

**ஏட்டு கந்தசாமி** *: “ சார் ! என்னாச்சு ??? . “*

*(... சிரித்தபடியே நின்றுகொண்டிருந்தார் வேதாந்த சுவாமிகள் ....)*

***இன்ஸ்பெக்டர் ரவி** : " நேத்து ராத்திரி தூங்கச் சென்ற ராமலிங்கம் ஐயாவோட , அறைக்கதவு இதுவரை திறக்கப்படவில்லையாம் .... தட்டுனாலும் , உள்ள சப்தமே இல்லையாம் .. "*

*(.... வேதாந்த சுவாமிகளின் முகத்தில் இருந்த புன்னகை , இன்னும் மறையவில்லை ....)*

***வேதாந்த சுவாமிகள்** : " அதனோட ஆட்டம் ஆரம்பிச்சிடுச்சு ... உங்களுக்கான வேலையும் வந்திடுச்சு ..... " என்றார் .*

*அவரின் பேச்சுக்கு மதிப்புகொடுக்காமல் , அடுத்த இரு வினாடிகளில் , அந்த இடத்தை விட்டுப் புறப்பட்டிருந்தது போலீஸ் ஜீப் . 15 நிமிடப் பயணத்தில் , ராமலிங்கத்தின் வீட்டை அடைந்திருந்தார்கள் . அங்கு ஒரு மயான அமைதி நிலவியிருந்தது . அந்த வீட்டில் இருந்த மேல் தளத்தில் , ராமலிங்கத்தின் உறவினர்கள் , பதற்றத்தின் உச்சத்தில் , நின்று*

கொண்டிருந்தார்கள். வெகுநேரமாக தட்டியும், ராமலிங்கத்தின் அறைக் கதவு திறக்கப்படாததால், அது உடைக்கப்பட்டு, கீழே வைக்கப்பட்டிருந்தது. உள்ளே ராமலிங்கம் மெத்தையில் படுக்க வைக்கப்பட்டிருந்தார். மருத்துவர்கள் அவரை சோதித்துப் பார்த்துக் கொண்டிருந்தனர். முகத்தில் சேலைத்தலைப்பை வைத்துக்கொண்டு, கண்கள் கலங்கியபடி நின்று கொண்டிருந்தாள் ராமலிங்கத்தின் மனைவி. மருத்துவர்களிடம் நம்பிக்கையான வார்த்தைகளை எதிர்பார்த்து, ராமலிங்கத்தின் உறவினர்கள் நின்று கொண்டிருந்தார்கள். அந்த நேரம் பார்த்து, மாத்தூர் கிராமத்தலைவர் தவபுண்ணியம், மனைவி மரகதம், மற்றும் மகன் கலையரசனோடு அங்கு வேகமாக வந்திருந்தார். தவபுண்ணியத்தின் மனைவி மரகதம், ராமலிங்கத்தின் மனைவிக்கு ஆறுதலான வார்த்தைகளை சொல்லித் தேற்றிக் கொண்டிருந்தார். கனத்த இதயத்தோடு காத்திருந்தார் தவபுண்ணியம். திடீரென்று எழுந்த மருத்துவர்கள், ராமலிங்கம்

இறந்துவிட்டதாக அறிவித்தார்கள் . அங்கே மரண ஓலம் ஆரம்பமாயிருந்தது . ராமலிங்கத்தின் மனைவி , கதறிக்கொண்டிருந்தாள் . கண்ணீர் தாரை தரையாக வழிந்து கொண்டிருந்தது . ஏட்டு கந்தசாமியின் முகத்தில் , ஈ ஆடவில்லை . அதிர்ச்சியில் உறைந்திருந்தார் இன்ஸ்பெக்டர் ரவி . இந்த செய்தியைக் கேட்டுத் திகைத்துப் போயிருந்த தவபுண்ணியம் , சவமாய்க் கிடக்கின்ற தன் நண்பன் ராமலிங்கத்தின் பக்கத்தில் வந்து , தன் தலையில் அடித்துக்கொண்டு , கதறியிருந்தார் .

“ டேய் ! என்ன மட்டும் , தனியா இங்க விட்டுட்டு , நீங்க ரெண்டு பேரும் , போய்ட்டீங்க . என்னையும் , உங்ககூடவே , கூட்டிட்டுப் போயிருக்க வேண்டியதுதானே ! “ என்று மார்பில் அடித்துக் கொண்டு அழுதிருந்தார் . எத்தனையோ பேர் ஆறுதல் கூறியும் , தவபுண்ணியத்தை சமாதானம் செய்ய முடியவில்லை . பார்ப்பவர்களைப் பதற வைத்திருந்தது அந்தக் காட்சி . நேரம் ஆக , ஆக

கூட்டம் அதிகரித்துக் கொண்டே இருந்தது . உறவினர்கள் சடங்குகளுக்கும் , சம்பிரதாயங்களுக்கும் தயாராயிருந்தார்கள் . மணி மதியம் 2 –ஐக் கடந்திருந்தது . பல பந்திகள் பரிமாறப் பட்டிருந்தது . இன்ஸ்பெக்டர் ரவி அந்த வீடு முழுவதையும் , தன் பார்வையால் அலசிக் கொண்டிருந்தார் . அங்கு இருக்கின்ற ஒவ்வொருவரின் , குதிங்காலையே உற்று நோக்கிக் கொண்டிருந்தார் ஏட்டு கந்தசாமி . ராமலிங்கம் இறந்த செய்தி கேட்டு , அவரின் உறவினர்கள் , நாலாப்புறமும் இருந்து வந்து கொண்டிருந்தார்கள் . பெரியார் மணியம்மை பல்கலைக்கழக , வேளாண் பேராசிரியர் சதாசிவமும் , அங்கு வந்து துக்கத்தில் பங்கேற்றிருந்தார் . இன்ஸ்பெக்டர் ரவியும் , ஏட்டு கந்தசாமியும் அவரிடம் , பேசிக் கொண்டிருந்தனர் . கொஞ்ச நேரத்தில் , ***NEXTGEN FERTILIZERS LTD*** உரிமையாளர்களான பிரனேஷும் , திலீபனும் அங்கு இருண்ட முகத்தோடு வந்திருந்தார்கள் . அவர்களைப் பார்க்கப் பார்க்க , தவபுண்ணியம்

*முகம் உக்கிரமடைந்திருந்தது . இருந்தும் காரியம் நடந்து கொண்டிருக்கின்ற இடத்தில் , கலவரம் வேண்டாம் என்று பொறுமையோடு காத்திருந்தார் . திடீரென்று , தவபுண்ணியத்தின் மகன் கலையரசன் , தவபுண்ணியத்திடம் அழுதுகொண்டே வந்து ,*

***கலையரசன்** : " அப்பா !! வெண்ணிலாதான்ப்பா !!! இந்த கொலையப் பண்ணது . எனக்கு நல்லாத் தெரியும்ப்பா !!! " என்றான் . இதை பார்த்துக் கொண்டிருந்த இன்ஸ்பெக்டர் ரவி திடுக்கிட்டுப்போனார் . ஏற்கனவே கோபத்தின் உச்சத்தில் இருந்த தவபுண்ணியம் , இந்த பதிலைக் கேட்டதும் , கடுப்பான அவர் ,*

*" பைத்தியகார நாயே ! இன்னும் , அந்த செத்துப் போன பொண்ணு நெனப்பாவே சுத்திகிட்டு திரியற ... எந்த நேரத்துல , எதப் பேசணும்னு உனக்குத் தெரியாது ........... " என்று அவன் கன்னத்தில் பளார் பளார் என்று அடிக்க ஆரம்பித்தார் ... இது அவங்க குடும்ப விஷயம்*

என்பதுபோல் , யாரும் அவரைத் தடுத்து நிறுத்த முன்வரவில்லை .

இன்ஸ்பெக்டர் ரவி இடையில் சென்று , அவரின் கையைப் பிடித்து ,

“ சார் ! விடுங்க சார் ! ஏன் , தோளுக்கு மேல வளந்த பையனப் போய் , இந்த அடி , அடிக்கறீங்க .. “ என்றார் .....

உடனே ரவியின் பக்கம் திரும்பிய , தவபுண்ணியம் ,

“ வாய்யா !!! வா !!! , இதுக்கெல்லாம் நல்லா வக்காலத்துக்கு வந்துடு .... என் பையன நான் அடிப்பேன் .. அதைக் கேக்கறதுக்கு நீ யாருய்யா ??? “ என்றார் கோபத்தோடு ..

ஏட்டு கந்தசாமி இடையில் வந்து , தவபுண்ணியத்தை சமாதானப்படுத்தி ,

“ ஐயா !!! எல்லாரும் பாக்கறாங்க .... கொஞ்சம் பாத்து பேசுங்க .....” என்றார் பௌவ்யமாக ....

இன்னும் கோபம் தணியாத , தவபுண்ணியம் ,

*“ என்னத்தய்யா !!! பாத்துப் பேசணும் ......*
*நேத்து சிவநேசன் , இன்னிக்கு ராமலிங்கம் ,*
*நாளைக்கு நானா ??????????? ....*
*நீங்கெல்லாம் என்ன பண்ணிட்டு இருக்கீங்க ....*
*இதுவரைக்கும் ஏதாவது துப்பு கிடச்சுதா .....*
*பெருசா சமாதானம் பேச வந்திட்ட ......*
*போய்யா ...“ என்றார் . ( இன்ஸ்பெக்டர்*
*ரவியின் கண்கள் சிவந்திருந்தது ...)*

***ஏட்டு கந்தசாமி** : “ ஐயா ! விசாரணை*
*போயிட்டு தான் இருக்கிறது . இது கொலையா*
*இருக்குமேயானால் , இன்னும் கூடிய*
*சீக்கிரத்தில கொலையாளியப் புடிச்சுக்*
*காட்டுறோம் ...”*

***தவபுண்ணியம்** : (.... கோபத்துடன் ....) எப்ப*
*??? நானும் செத்ததுக்கு அப்புறமா ???? ..*
*எனக்கு என்னமோ , இந்த மரணங்கள்ல*
*போலிஸ் தலையீடு , இருக்குமோன்னு*
*சந்தேகமாயிருக்குதுய்யா ?? ” என்றார் .*

**இன்ஸ்பெக்டர் ரவி** : " சார் ! கொஞ்சம் வார்த்தையை , அளந்து பேசுங்க ........ குமாரசாமி , பேய் அடிச்சுத்தான் செத்துப் போயிட்டார்ன்னு , நீங்க சொன்னீங்க ... அப்ப அத நாங்க நம்பினோம் .... இந்த மரணமும் கூட அதே மாதிரி , இருக்கலாமே .. இதை மட்டும் ஏன் , உங்க மனசு ஏத்துக்க மாட்டிங்குது ??? . " என்று ஆக்ரோஷமாக பேசிக்கொண்டிருந்த இன்ஸ்பெக்டர் ரவியைத் தடுத்து நிறுத்திய , ஏட்டு கந்தசாமி ,

" சார் !!! சாவு வீட்டுக்கு வந்துருக்கோம் ..... இங்க வந்து , சண்டை போடறது அவ்ளோ , நல்லா இல்லை .... எதுவாக இருந்தாலும் , விசாரணையின் முடிவுல , பேசிக்கலாம் ... " என்று அவரை சமாதானப் படுத்தினார் .... கோபம் தணியாத முகத்துடன் , கைகளைக் கட்டிக்கொண்டு நின்று கொண்டிருந்தார் தவபுண்ணியம் ....... இன்ஸ்பெக்டர் ரவியும் , ஏட்டு கந்தசாமியும் , ஓரத்தில் இருந்த நாற்காலிகளில் போய் உட்காந்திருந்து , வெறும் யோசனையிலேயே நேரத்தைக்

கடத்தியிருந்தார்கள்..... களைப்பு மிகுதியால் , இன்ஸ்பெக்டர் ரவி அவ்வப்போது , தூங்கித் தூங்கி விழித்துக் கொண்டிருந்தார் . ராமலிங்கத்தின் உறவினர்கள் , வருவதும் , போவதுமாக இருந்தனர் . அவர்களைப் பார்த்துக் கொண்டே , மீண்டும் தன் கண்களை மூடியிருந்த , இன்ஸ்பெக்டர் ரவி திடுக்கிட்டார் ..... நேற்றைய முன்தினம் இரவு , அவருடைய வீட்டில் , பார்த்த , அந்த மர்ம உருவம் திடீரென்று அவர் நியாபகத்துக்கு வந்தது . அதன் நடை , பாவனைகளைக் கொண்ட ஒருவரை , அந்த ஜனக்கூட்டத்தில் , அவருடைய கண்கள் , அவருக்கு அடையாளம் காட்டியிருந்தது ... திடீரென்று , கண்களைத் திறந்து பார்த்த அவர் , ஏட்டுக் கந்தசாமியைக் கூப்பிட்டு , அந்த ஆசாமியை அவருக்கு அடையாளம் காட்டினார் ..

**இன்ஸ்பெக்டர் ரவி** : " யோவ் ! கந்தசாமி ! , அங்க நிற்கிற ஆள் யார் ??? " என்றார் பரபரப்பாக .....

***ஏட்டு கந்தசாமி :*** *" சார் ! அவன் பேர் பொன்னையா !!! தவபுண்ணியம் வீட்டு வேலைக்காரன் சார் ...." என்றார் ..*

***இன்ஸ்பெக்டர் ரவி :*** *(... யோசனையிலேயே ....) " ஹ்ம்ம் !!! " என்றார் .*

*(... அடுத்த 2 நிமிடங்களில் , பொன்னையாவையே , பார்த்துக்கொண்டிருந்த ஏட்டு கந்தசாமி சார் ! சார் ! என்று பதறினார்......)*

***இன்ஸ்பெக்டர் ரவி :*** *" என்னாச்சு கந்தசாமி ???? எனிதிங் சீரியஸ் ??? "*

***ஏட்டு கந்தசாமி :*** *" எஸ் சார் ! அவனோட இடது காலைப் பாருங்க ... " என்றார் .*

*சேற்றில் பதிந்திருந்த , அந்த இடதுகால் வெட்டுத் தடயம் , அவன் காலில் இருந்தது அவர்களை மேலும் அதிர வைத்திருந்தது ...... இன்ஸ்பெக்டர் ரவியும் , ஏட்டு கந்தசாமியும் , அதிர்ச்சியில் ஒருவரை ஒருவர் , பார்த்துக் கொண்டனர் .*

# 12

தூத்தூர் போலீஸ் ஸ்டேஷன், அந்த சாயுங்கால நேரத்திலும், உச்சகட்ட பரபரப்பில் இருந்தது ....... இன்ஸ்பெக்டர் ரவி, நாற்காலியில் சாய்ந்தபடியே, வாயில் சிகரெட் புகையை ஊதித் தள்ளிக் கொண்டிருந்தார்.... சிறை அறையில் இருந்து, " அய்யோ !! அம்மா !! " என்று கத்துகின்ற சத்தம், தொடர்ந்து வந்து கொண்டிருந்தது ..... எரிந்து கொண்டிருந்த சிகரெட்டின் கடைசித் துண்டை, வீசி எறிந்து விட்டு கோபமாக எழுந்த அவர், நேராக சிறை அறையை நோக்கி, வேகமாக வேகமாக நடந்தார்....... உள்ளே, வீங்கிய முகத்துடனும், உடல் முழுக்க இரத்த காயங்களோடும், கீழே படுக்க வைக்கப் பட்டிருந்தான் பொன்னையா ..... உடம்பின் பல பகுதிகளில் இருந்து, இரத்தம் பீறிட்டுக் கொண்டிருந்தது. இன்ஸ்பெக்டர் ரவியைப் பார்த்ததும், ஏட்டு கந்தசாமியும், மற்ற காவலர்களும் பொன்னையாவை, மேலே

*எழுப்பி , ஒரு நாற்காலியில் உட்கார வைத்திருந்தனர் ... ஒரு குண்டூசி விழுந்தாலும் , சப்தம் கேட்கும் அளவுக்கு , அங்கு அமைதி நிலவியிருந்தது ..... பொன்னையாவின் இதயம் வேகமாகத் துடித்துக் கொண்டிருந்தது ... அங்கிருந்த நிசப்தத்தைக் கலைத்தார் இன்ஸ்பெக்டர் ரவி ...*

**இன்ஸ்பெக்டர் ரவி** *: " பொன்னையா ! இப்ப நான் கேக்கிற கேள்விகளுக்கு , உண்மையான பதில , டக்கு டக்குன்னு சொல்லனும் ... இல்ல ,,, விசாரணை முன்பை விட , பயங்கரமா இருக்கும்..... என்ன ?? " என்றார் .*

*( சரி என்பதைப் போல தலையை ஆட்டினான் பொன்னையா .....)*

*பொன்னையாவின் பதில்களை , பதிவு செய்ய , அவன் எதிரே கேமரா ஒன்று வைக்கப்பட்டிருந்தது ..... (... இன்ஸ்பெக்டர் ரவி பேச ஆரம்பித்தார் ...)*

***இன்ஸ்பெக்டர் ரவி** : “ ஹ்ம்ம் !!! பொன்னையா ..... அன்னிக்கு ராத்திரி , என்னோட வீட்டுக் கதவத் தொடர்ந்து , தட்டிகிட்டே இருந்தது ... , அப்புறம் என்ன பாத்த உடனே ஓடினது .... எல்லாமே நீதானே ... சொல்லு என்றார் ....*

*முகத்தில் வடிந்திருந்த இரத்தத்தைத் துடைத்துக் கொண்டு , பொன்னையா பேச ஆரம்பித்தான் ...*

*“ ஐயா !!! ஆமாங்கய்யா !!! “ நான் தான் ....*

***இன்ஸ்பெக்டர் ரவி** : “ யார் அத பண்ண சொன்னது ????? “*

***பொன்னைய்யா** : “ யாரும் என்ன பண்ண சொல்லல ... நான் தான்யா வேணும்னே பண்ணுனேன் “ என்றான் ...*

*கேமராவை சற்று நேரம் , ஆப் செய்து விட்டு , அவன் கன்னத்தில் பளார் , பளார் என்று பலமாக அறைந்தார் இன்ஸ்பெக்டர் ரவி .... அவர்*

*அடித்த அடியில், நிலை குலைந்து போயிருந்த பொன்னையா,*

*“ ஐயா !! அடிக்காதீங்க !!! எல்லா உண்மையும் நானே என் வாயால சொல்லீறேன்ங்கய்யா !!! தயவு செய்து அடிக்காதீங்க !!! “ என்று கதறினான்.*

*மீண்டும் கேமராவில் , அவனுடைய பேச்சு , பதிவாகிக் கொண்டிருந்தது .*

***பொன்னையா** : “ குமாரசாமி ஐயாவ , கொலை பண்ணது நான் தான் .. ஆனா அதை பண்ண சொன்னது , தவபுண்ணியம் ஐயாவும் , அவரோட நண்பர்களான சிவநேசனும் , ராமலிங்கமும் தான் .... ஆனா அந்தப் பழிய இறந்து போன , அந்த வெண்ணிலாப் பொண்ணு மேல , போட்டுட்டு , ஊர் மக்கள நம்ப வச்சிட்டோம் ....... நான் அன்னிக்கு , உங்க வீட்டுக் , கதவத் தட்டின மாதிரி , எல்லார் வீட்டுக் கதவையும் , இரவு நேரங்கள்ல தட்டுவேன் ... அதை , பேய் அமானுஷ்யம்னு எல்லாரும் நம்பிட்டாங்க ...*

*( அவன் பேசிக் கொண்டிருந்தது அனைத்தும் , தெளிவாக அந்த கேமராவில் , பதிவாகிக் கொண்டிருந்தது ... இன்ஸ்பெக்டர் ரவியும் , ஏட்டு கந்தசாமியும் , அவனுடைய வாயிலிருந்து வரும் , ஒவ்வொரு வார்த்தையையும் உற்று கவனித்துக் கொண்டிருந்தனர் ... அவனை இடைமறித்த கந்தசாமி , )*

***ஏட்டு கந்தசாமி** : " வேதாந்த சுவாமிகளுக்கும் , உங்களுக்கும் என்ன தொடர்பு ???? ... "*

***பொன்னையா** : " சார் !!! மொதல்ல இருந்து , வேதாந்த சுவாமிகளுக்கும் , தவபுண்ணியம் ஐயாவுக்கும் , எந்த விஷயத்திலுமே ஒத்து வராது .... ஆனா இந்த விசயத்தில் மட்டும் , அவர் எப்படி ஒத்துப் போனார்ன்னுதான் இன்னும் எனக்கு தெரியலைங்கய்யா !!! ..... ஆனா , இந்த ஆவி , பேய் விசயத்துல , நாங்க சொன்னதைக்காட்டிலும் , வேதாந்த சுவாமிகள் சொன்னதத்தான் மக்கள் அதிகமாக நம்பினாங்க ..... அதை நாங்களும் , எங்களுக்கு , சாதகமாப் பயன்படுத்திகிட்டோம் ... இந்த கேஸ விசாரிக்க வந்த , பழைய இன்ஸ்பெக்டர் சுந்தரத்த , பல*

வகைல துன்புறுத்தி , இந்த கிராமத்த விட்டே ஓட வச்சிட்டோம் ... அதுக்கப்புறம் தான் நீங்க வந்தீங்க ..... உங்களையும் , இந்த கிராமத்த விட்டே ஓட வைக்கத்தான் , நான் அன்னிக்கு , உங்க வீட்டுக்கு வந்தேன்.. ஆனா நீங்க சுதாரிச்சுட்டீங்க ... ” என்று பேசி முடித்தான் .

**இன்ஸ்பெக்டர் ரவி** *: “ சரி ! அதெல்லாம் இருக்கட்டும் ..... ஆனா நீ ...... எதுக்காக , சிவநேசனையும் , ராமலிங்கத்தையும் கொலை பண்ணின ?? அவங்க கூடவே இருந்த நீ , எதுக்கு அவங்கள கொலை செஞ்ச ????? அவங்களுக்கும் உனக்கும் அப்படியென்ன , தனிப்பட்ட பிரச்சனை ??*

*(.... மௌனமாக இருந்தான் பொன்னையா .....)*

**ஏட்டு கந்தசாமி** *: “ எதுக்காக அவங்கள நீ கொலை பண்ணின ? .... நீ கொலை பண்ணதுக்கான ஆதாரங்கள் எங்க கிட்ட இருக்குது .... மரியாதையா உண்மைய சொல்லிடு .... உனக்கு பின்னாடி , யார் யாரெல்லாம் இருக்கா ???? உன்னோட அடுத்த*

*குறி யாரு ???? தவபுண்ணியம் தானே .... சொல்லு !!!...... " .*

**பொன்னையா** *: " அவங்க , ரெண்டு பேர்த்தையும் , கொலை பண்ண சொன்னதே , தவபுண்ணியம் ஐயா தான் ...... " என்றான் கோபமாக .*

*(... அதிர்ந்து போயிருந்தார்கள் இன்ஸ்பெக்டர் ரவியும் , ஏட்டு கந்தசாமியும் ...)*

**இன்ஸ்பெக்டர் ரவி** *: " என்ன ??? தவபுண்ணியமா ??????? அவர் எதுக்காக அவருடைய நண்பர்களையே ????? ......... " என்றார் .*

**பொன்னையா** *: " இதுவரைக்கும் நாங்க பண்ண எல்லாமே சரியாத்தான் நடந்துட்டு வந்துச்சு ... ஆனா நாங்க எதிர்பாராத ஒன்னு , என்னன்னா ??? அது உங்களோட விசாரணை தான் .... நீங்க விசாரிக்கிறதப் பார்த்த , இன்னும் கொஞ்ச நாள்லயே , தவபுண்ணியத்த நெருங்கிருவீங்களோன்னு , பயந்து தான் ...*

*அவர் ஒரு திட்டம் போட்டார் ... அதன்படி தான் , இந்த கேஸ திசை திருப்புவதற்காக , சிவநேசனையும் , ராமலிங்கத்தையுமே , அவர் கொலை பண்ண முடிவெடுத்தார் ... அவங்கள கொலை பண்ணிட்டா , இந்த கேஸ் மறுபடியும் , ஆவி , அமானுஷ்யங்கற கோணத்திலேயே , இன்னும் கொஞ்ச நாளைக்கு , இழுத்தடிக்கும் ... அதனால தான் , அவர் இதை பண்ண சொன்னார் ... "*

*(... இன்ஸ்பெக்டர் ரவி , தன் கன்னத்தில் கை வைத்து , பொன்னையாவையே பார்த்துக் கொண்டிருந்தார் .... அவனிடம் , ஆர்வமாக , அடுத்தடுத்து கேள்விகளைக் கேட்டுகொண்டிருந்தார் கந்தசாமி ...)*

***ஏட்டு கந்தசாமி** : " SO , ஒரு கொலைய மறைக்கறதுக்காக , நீங்க ரெண்டுபேரும் , அடுத்தடுத்து ரெண்டு கொலை பண்ணீருக்கீங்க ..... நாளைக்கு , உங்க ரெண்டு பேரையும் , உங்க ஊர்க்காரங்க முன்னாடி , அடிக்கிற அடியில , தவபுண்ணியத்தோடு வாயிலயிருந்தே , எல்லா*

உண்மையையும், வெளில கொண்டு வர்றோம் …. “

*(… அதை நினைத்து, அதிர்ந்து போன பொன்னையா … உடனே …)*

**பொன்னையா** : *“ சார் ! சார் …….. ! நான் அவங்கள கொலை பண்ணத்தான், அங்க போனேன் … ஆனா அவங்க ரெண்டு பேருமே, என்னைப் பார்த்த உடனே, எதோ ஒரு அதிர்ச்சியிலயே செத்துட்டாங்க … நான் அவங்கள கொலை பண்ணல சார் !!! நான் நிரபராதி ….. என்ன விட்டுடுங்க சார் !!! .. நான் புள்ளகுட்டிக்காரன் …. எனக்கு குடும்பம் இருக்குங்க சார் !!! … “ என்று திரும்பத்திரும்ப இதையே சொல்லி, அவர்கள் கால்களைப் பிடித்துக் கொண்டு கதறினான் ….*

**இன்ஸ்பெக்டர் ரவி** : *(…. உக்கிரமான முகத்துடன்….) “ அப்ப ….. செத்துப் போனவங்களுக்கெல்லாம் குடும்பம் இல்லையா ???? … “ என்று மீண்டும், ஆத்திரம் தீரும் அளவுக்கு அவனை அடித்துவிட்டு,*

*வெளியே வந்தார்கள் இன்ஸ்பெக்டர் ரவியும் , ஏட்டு கந்தசாமியும் " ....*

*கிட்டத்தட்ட இரண்டு மணி நேரம் , அவனை விசாரணை செய்திருப்பார்கள் .... மணி 9 –ஐத் தொட்டிருந்தது ... இருவரும் ஸ்டேஷனுக்கு வெளியே வந்து , சிகரெட்டைப் பற்ற வைத்து , புகையை ஊதித் தள்ளியிருந்தனர் ...*

***ஏட்டு கந்தசாமி** : " சார் ! எப்ப சார் ??? நாம , தவபுண்ணியத்த கைது பண்ணப் போறோம் ??? "*

***இன்ஸ்பெக்டர் ரவி** : " நாளைக்கு காலைல , சரியா 9 மணிக்கு , பொதுமக்கள் முன்னாடியே , தவபுண்ணியத்தோட கையில , விலங்க மாட்டி , ஸ்டேஷனுக்கு , இழுத்துட்டு வரப் போறோம் .... அதுக்கு அடுத்தபடியா , அன்பாலய வேதாந்த சுவாமிகளையும் கைது பண்ணி , ஸ்டேஷன்ல வெச்சு வெளுத்தா எல்லா உண்மையும் வெளில வந்துரும் .... இன்னிக்கு ஒரு நாள் ராத்திரி மட்டும் , நீங்க ஸ்டேஷன்லயே இருங்க ... ஏன்னா .... பொன்னையாவ கொஞ்சம்*

*பத்திரமா பாத்துக்கணும் " ... என்னால முடியல . ரொம்ப நாளைக்கு அப்புறம் , இன்னிக்குதான் நான் நல்லா தூங்கப் போறேன்னு நெனைக்கிறேன் ... " என்றார் சிரித்துக்கொண்டே ...*

***ஏட்டு கந்தசாமி** : " சார் ......! அதெல்லாம் நான் பாத்துக்கறேன் சார் .... நீங்க வந்ததுக்கப்புறம் தான் இந்த ஊருக்கும் , இந்த கேஸ்க்கும் , ஒரு விடிவு காலமே பொறந்திருக்குது ... உங்களுக்காக இதைக் கூட , நான் பண்ண மாட்டெனா ??? " என்றார் ...*

***இன்ஸ்பெக்டர் ரவி** : " இல்ல கந்தசாமி ..... நீங்க இல்லைன்னா .... இதப் பண்ணீருக்க முடியாது ..... நீங்க உங்க குடும்பத்தக் கூட , பாக்காம , இந்த மூணு நாளா , என்கூடவே இருந்தீங்க ... அதனால தான் , இதப் பண்ண முடிஞ்சது ... " என்றார் பெருமிதத்தோடு ....*

***ஏட்டு கந்தசாமி** : " சார் ! இன்னைல இருந்து , நானும் உங்களமாதிரி ஒரு நாத்திகன் சார் ..... " என்றார் கர்வத்தோடு .....*

***இன்ஸ்பெக்டர் ரவி :*** *(... சிரித்துக்கொண்டே ...)*
*“ அடப்போய்யா..... “ என்று*
*சொல்லிக்கொண்டே , தன் வீட்டுக்கு*
*கிளம்பியிருந்தார் இன்ஸ்பெக்டர் ரவி .*

# 13

இருபது நிமிடப் பயணத்தில் ,,,,, வீட்டை அடைந்திருந்தார் இன்ஸ்பெக்டர் ரவி ... எதையோ சாதிருந்த மகிழ்ச்சி , அவர் முகத்தில் தெரிந்திருந்தது . அடுத்தநாள் காலையில் செய்ய , வேண்டிய பணிகளைப் பற்றியே , அவரது சிந்தனை இருந்தது .... அதே யோசனையிலேயே இரவு உணவை , முடித்திருந்தார் .... வழக்கம் போல , கிரைம் நாவல்களை , அவர் வீட்டுப் புத்தகக் கிடங்கில் , தேடிக்கொண்டிருந்தார் .... பிரபல எழுத்தாளர் நடேசனின் , “ மரணத்துக்கு அப்பால் ” என்ற நாவலை எடுத்துப் புரட்ட ஆரம்பித்திருந்தார் ... மனிதனின் மரணத்துக்குப் பிறகு , நடக்கக் கூடிய சம்பவங்களை ஒட்டி , மிக விறுவிறுப்பாகவும் , பரபரப்பாகவும் சென்று கொண்டிருந்தது அந்த நாவலின் கதைக்களம் ... நிறைவேறாத ஆசையுடன் கூடிய ஆன்மாக்கள் , மீண்டும் கடந்து வந்த பாதைகளைகளியே ,

சுற்றித் திரிந்து கொண்டிருக்கும் , என்பதை மிக அழுத்தமாக சொல்லியிருந்தார் அந்த நாவலாசிரியர் நடேசன் ... பாதிப் பக்கங்களைப் புரட்டியிருப்பார் .... திடீரென அவர் வீட்டுக் கதவு தட்டப்படும் சப்தம் கேட்டது .... இந்த நேரத்தில் யாராக இருக்க முடியும் ??? என்று யோசித்துக் கொண்டே , கையில் டார்ச்சையும் , ரிவால்வரையும் எடுத்துக் கொண்டு , கதவுப் பக்கத்தில் சென்றார் ... கதவு வேகமாக தட்டப்பட்டுக் கொண்டிருந்தது .... மின்னல் வேகத்தில் , கதவைத் திறந்தார் ரவி ... வெளியே ஆள் அரவமற்று இருந்தது ... சற்றே திடுக்கிட்டுப் போனார் இன்ஸ்பெக்டர் ரவி ... வெளியே சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு , கதவுப் பக்கம் திரும்பிய அவரின் அடுத்த வினாடி , திடீரென்று , ஏதோ ஒரு உருவம் , வேகமாக அவரைக் கடந்து செல்வதைப் போல் இருந்தது ... பயத்தில் உறைந்திருந்த அவர் , உள்ளே சென்று தாளிட்டுக் கொண்டார் .... அந்த நேரம் பார்த்து , மீண்டும் மின்சாரம் வந்து , வந்து போய்க்கொண்டிருந்தது .... டார்ச் விளக்கை , தயாராகவே வைத்திருந்தார் இன்ஸ்பெக்டர் ரவி

... உள்ளே ஒவ்வொரு அடியாக எடுத்து வைத்துக் கொண்டிருந்தார் ... ஒரு கட்டத்தில், மின்சாரம் முற்றிலுமாக நின்றிருந்தது ... டார்ச் விளக்கை அடித்துக் கொண்டே, முன்னேறியிருந்தார் ... யாரோ, தன்னைப் பின் தொடர்வதைப் போல அவர் உணர்ந்தார் ..... பயத்தின் உச்சத்தில் இருந்த அவருக்கு, உடல் முழுக்க வியர்த்து வழிந்திருந்தது .... அவரின் வலதுபுறமாக கண்ணாடிக்குப் பக்கத்தில், யாரோ நிற்பது போல் இருந்தது .... டார்ச்சை வலதுபுறமாகத் திருப்பிய அவர், அரண்டு போயிருந்தார் ... தலைவிரிக் கோலத்தில், ஒரு பெண் குனிந்து, அவருக்குப் பின்னால் நின்று கொண்டிருந்ததை, அந்தக் கண்ணாடி அவருக்கு அடையாளம் காட்டியிருந்தது ... யார் .... யார்ரர்ர்ரு ????? என்று உளற ஆரம்பித்திருந்தார் இன்ஸ்பெக்டர் ரவி .... குனிந்திருந்த அந்த முகம், திடீரென நிமிர்ந்து, அவரைப் பார்த்து சிரித்தது ... சப்த நாடிகளுமே அடங்கிப் போயிருந்தது அவருக்கு ... கோர முகத்துடன், இறந்து போயிருந்த வெண்ணிலாதான் அங்கு நின்று கொண்டிருந்தாள் ... மீண்டும் மின்சாரம்

வந்திருந்தது .... அந்த உருவம் மறைந்திருந்தது .... அவருடைய மனம் படபடத்திருந்தது ... அந்தக் கண்ணாடியில் , எதோ குறிப்பு , எழுதியிருப்பதைப் போல அவருக்குத் தெரிந்தது .... அதைப் பக்கத்தில் சென்று , படிக்க ஆரம்பித்த அவர் அதிர்ந்து போனார் ....

" ... தவபுண்ணியத்தின் கடைசி அரைமணி நேரம் ..." என்று அதில் எழுதப்பட்டிருந்தது .... அப்பொழுது தான் பொன்னையா சொன்ன , பதில்கள் அவருக்கு நியாபகம் வந்திருந்தது ... சிவநேசனையும் , ராமலிங்கத்தையும் , வெண்ணிலாவின் ஆவிதான் பழி வாங்கியிருகிறது என்பதை , அவர் உணர்ந்தார் ... பதற்றத்துடன் தவபுண்ணியத்தின் , தொலைபேசி எண்களுக்குத் தொடர்பு கொண்டார் .... ரொம்ப நேரமாகவே , அழைப்பு மணி அடித்துக் கொண்டிருந்தது ... யாரும் எடுத்த பாடில்லை ... போலிஸ் ஜீப்பில் ஏறியிருந்த , அவர் மீண்டும் மீண்டும் அந்த எண்ணுக்கு தொடர்பு கொண்டார் .... " ***THE NUMBER YOU ARE TRYING TO REACH IS NOT***

*ATTENDING THE CALL .. PLEASE TRY AGAIN LATER* " என்ற பதிவு செய்யப்பட்ட பெண்ணின் குரல் பேசியிருந்தது .... போலீஸ் ஜீப்பை வேகமாக செலுத்தியிருந்தார் .... ஏட்டு கந்தசாமியின் எண்களைத் தொடர்பு கொண்டார் .... வெகுநேரமாகியும் அவரிடமிருந்தும் ஒரு பதிலுமில்லை ... அவருக்கு " CALL ME – URGENT " என்று MESSAGE அனுப்பிருந்தார் ... குழப்பத்தின் உச்சத்தில் , போலிஸ் ஜீப் புயலாகக் கிளம்பியிருந்தது .... அந்த நேரம் பார்த்து அவருக்கு , அன்பாலாய வேதாந்த சுவாமிகளின் நியாபகம் வந்திருந்தது ... தேடித்பிடித்து அவருடைய எண்களைத் தட்டினார் .. மறுமுனையில் , தொடர்ந்து ரிங் போய்க் கொண்டிருந்தது .. கடைசி நேரத்தில் , போனை எடுத்திருந்தார் வேதாந்த சுவாமிகள் ....

**இன்ஸ்பெக்டர் ரவி** : ( ... பதற்றத்தில் ...) சுவாமிஜி !!! சுவாமிஜி !!! என்று பதறினார் .... அவரின் பதற்றத்தைப் புரிந்து கொண்ட சுவாமிகள் ,

***வேதாந்த சுவாமிகள் :*** *" என்னாச்சு ரவி ??? ஏதாவது அமானுஷ்யத்தைப் பார்த்தீங்களா???? என்றார் படபடப்பாக ...*

*( .. இன்ஸ்பெக்டர் ரவி , நடந்த அனைத்தையும் சொல்ல , வேதாந்த சுவாமிகள் அன்பாலயத்தில் இருந்து புறப்பட்டிருந்தார் ...) . இந்தமுறை , தவபுண்ணியத்தின் வீட்டுத் தொலைபேசிக்கு தொடர்பு கொண்டார் ரவி ...*

*மீண்டும் ரிங் போய்க் கொண்டிருந்தது ... " COME – ON , PICK-UP , PICK-UP .... என்று இன்ஸ்பெக்டர் ரவியின் உள்ளுணர்வு அடித்துக் கொண்டிருந்தது .. ஒரு வழியாக போன் எடுக்கப் பட்டிருந்தது ....*

*" ஹலோ !!! என்றார் இன்ஸ்பெக்டர் ரவி .... மறுமுனையில் இருந்த குரலும் ஹலோ என்றது ..... தவபுண்ணியத்தின் மகன் கலையரசன் பேசினான் ..... ( ... இன்ஸ்பெக்டர் ரவி சற்றும் எதிர்பாராமல் கலையரசனிடம் .... )*

***இன்ஸ்பெக்டர் ரவி** : “ .... கலையரசன் .... நான் இன்ஸ்பெக்டர் ரவி பேசுறேன் ... உங்க அப்பாவ ஜாக்கிரதையா பார்த்துக்கோ .... வெண்ணிலாப் பொண்ணோட ஆவி , இன்னிக்கு உங்க , அப்பாவ பழி வாங்க காத்துட்டு இருக்குது .... நான் இப்ப அங்க தான் வந்துட்டே இருக்கேன் ... என்றார் ... “*

***கலையரசன்** : “ சார் !!! என்ன சார் சொல்றீங்க .... என் வெண்ணிலா , என் அப்பாவ கொலை பண்ணப் போறாளா ???? “ என்று சிரித்தான் ...*

***இன்ஸ்பெக்டர் ரவி** : “ தம்பி இது ரொம்ப சீரியஸான விஷயம் ... விளையாடாத ... உங்க அப்பாவப் போய்ப் பாரு என்றார் வண்டியின் வேகத்தோடே ....... “*

***கலையரசன்** : “ சார் !!! நீங்க தான் சார் ... விளையாடறீங்க .... வெண்ணிலா என் கூட தான் , இப்ப உட்கார்ந்து பேசிகிட்டிருக்கிறாள் .. “ என்றான் ...*

*(.... அதிர்ந்து போயிருந்தார் இன்ஸ்பெக்டர் ரவி , இணைப்பைத் துண்டித்து விட்டு , வண்டியின் வேகத்தைக் கூட்டினார் ...) அடுத்த 5 நிமிடத்தில் , ஏட்டு கந்தசாமியிடம் இருந்து போன் வந்தது ... நடந்த விவரங்களை அவரிடமும் சொல்ல , கந்தசாமியும் கான்ஸ்டபிள்களோடு அங்கு புறப்பட்டிருந்தார் ... தவபுண்ணியத்தின் வீட்டை அடைந்த இன்ஸ்பெக்டர் ரவி , ஜீப்பை , வெளியே அவசர அவசரமாக பார்க் செய்து விட்டு , வீட்டு GATE- ஐத் திறக்க முயற்சித்தார் .... கடினமான பூட்டால் , பூட்டப் பட்டிருந்த அந்த GATE-ஐ எளிதில் , திறக்க முடியவில்லை ... மீண்டும் மீண்டும் முயற்சித்து , ஒரு வழியாக GATE –ஐ உடைத்துக் கொண்டு உள்ளே சென்ற அவர் , அந்த வீட்டுக் கதவை வேக வேகமாகத் தட்டினார் ..... உள்ளேயிருந்து பதில் இல்லை ... வீட்டுத் தொலைபேசிக்கும் , விடாமல் தொடர்பு கொண்டிருந்தார் ... அந்த நேரம் பார்த்து , வேதாந்த சுவாமிகள் தன்னுடைய சீடர்களுடன் வந்திறங்கினார் ... சீடர்கள் வேகவேகமாக உள்ளே வந்து , கதவைத் திறக்க முயற்சித்தார்கள் ... நிலைமையை உணர்ந்த வேதாந்த சுவாமிகள் ,*

தன் பிரார்த்தனையால் , கதவைத் திறக்க முற்பட்டிருந்தார் ,, பதறிப் போயிருந்த இன்ஸ்பெக்டர் ரவி , அந்த வீட்டு ஜன்னல்களை கற்களைக் கொண்டு உடைக்க முற்பட்டார் .... அவர் எவ்வளவோ , முயற்சிகள் செய்தும் , அவரால் அதை உடைக்க முடியவில்லை .. அந்த இடம் முழுவதுமே , வெண்ணிலாவின் கட்டுப்பாட்டுக்குள் இருந்தது ... அந்த நேரம் பார்த்து , ஏட்டுக் கந்தசாமியும் , தன் போலிஸ் படையுடன் வந்து , இவர்களுக்கு உதவ முற்பட்டிருந்தார் ... அந்த இடம் முழுவதுமே , ஒரே பதற்றம் நிலவியிருந்தது .... கொஞ்ச நேரத்தில் , சப்தம் கேட்கக் கேட்க , ஊர்மக்களும் தவபுண்ணியத்தின் வீட்டில் கூடியிருந்தனர் ... ஒரு கட்டத்தில் , வேதாந்த சுவாமிகளின் இடைவிடாத பிரார்த்தனையால் , கதவு படாரென்று திறந்தது .... உள்ளே தவபுண்ணியத்தின் வீடே இருண்டிருந்தது ... தயாராக வைத்திருந்த அகல் விளக்குகளோடு , வேதாந்த சுவாமிகளின் சீடர்கள் , உள்ளே நுழைந்து , வீடு முழுவதும் தீபங்களை ஏற்றியிருந்தனர் ... இன்ஸ்பெக்டர் ரவியும் ,

ஏட்டு கந்தசாமியும் முதலில் உள்ளே செல்ல , வேதாந்த சுவாமிகளும் , ஊர் பெரியவர்களும் பின்னே சென்றிருந்தனர் .. வீட்டின் நடு ஹாலில் , வேதாந்த சுவாமிகள் , இரவு 12 மணிக்குப் பண்ண வேண்டிய , அர்த்த சாம யாகத்தை இப்பொழுதே தொடங்கியிருந்தார் ... தீப ஒளியின் வெளிச்சத்தால் , வீடு முழுவதையும் சல்லடை போல சலித்துக் கொண்டிருந்தார்கள் இன்ஸ்பெக்டர் ரவியும் , அவரைச் சுற்றியிருந்தவர்களும் ... உள்ளே ஒரு ஓரத்தில் , தவபுண்ணியத்தின் மனைவி மரகதமும் , மகன் கலையரசனும் , எதுவும் பேச முடியாமல் , பிரம்மை பிடித்தவர்கள் போல அண்ணார்ந்து பார்த்துக் கொண்டிருந்தனர்... ஏட்டு கந்தசாமி , அவர்களை இயல்பு நிலைக்கு கொண்டு வர முயற்சி செய்து கொண்டிருந்தார் ... அவர்கள் மேலேயே அண்ணார்ந்து பார்த்துக் கொண்டிருந்தனர் ... சட்டென்று மேலே பார்த்த ரவி , பதறினார் .... எல்லாருடைய கண்களும் , மேலே பார்க்க , அந்தரத்தில் தவபுண்ணியத்தின் உடல் ஊசலாடிக் கொண்டிருந்தது ... வேதாந்த சுவாமிகள் , மந்திர உச்சாடனங்களைப்

பிரயோகிக்க ஆரம்பித்தார் ... உள்ளே இருக்கின்ற பொருட்களெல்லாம் , நாலாப்புறமும் ஓடி , சிதறிக் கொண்டிருந்தன .... ஆனால் அன்பாலய அகல் விளக்குகள் மட்டும் , எந்த சலனமுமின்றி அதே ஒளியை விடாது தந்து கொண்டிருந்தது ... அடுத்த பத்தாவது நிமிடத்தில் , தவபுண்ணியத்தின் வீட்டை , தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்திருந்தார் வேதாந்த சுவாமிகள் ... மேலே சுற்றிக் கொண்டிருந்த தவபுண்ணியத்தின் உடல் , திடீரென பொத்தென்று கீழே விழுந்தது ... எல்லாரும் சென்று அவரைப் புரட்டிப் பார்க்க , அவர் சடலமாகத் திரும்பி வந்திருந்தது அனைவரையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியிருந்தது .. வீட்டுக்குள் வீசிக்கொண்டிருந்த புயல் , ஒரு வழியாக நின்றிருந்தது ... சுயநினைவுக்குத் திரும்பிய , மரகதமும் , கலையரசனும் , தன் தந்தையின் உடலைப் பிடித்துக் கொண்டு அழ ஆரம்பித்திருந்தனர் ... கண் விழித்திருந்தார் வேதாந்த சுவாமிகள் .... தவபுண்ணியத்தின் உயிரைக் காப்பாற்ற முடியாத சோகத்தை , அவரிடம் பார்க்க முடிந்தது ... துக்கமான

*முகத்துடன், வெளியே கைகளைக் கட்டிக் கொண்டு நின்று கொண்டிருந்தார்கள் இன்ஸ்பெக்டர் ரவியும், ஏட்டு கந்தசாமியும் ... வேதாந்த சுவாமிகள், வீட்டிலிருந்து வெளியே வர, ஜனக்கூட்டம், தவபுண்ணியத்தின் வீட்டை மொய்த்திருந்தது ... மரண ஓலம் அங்கு விண்ணைப் பிளந்திருந்தது .... இன்ஸ்பெக்டர் ரவியின் பக்கத்தில் வந்த, வேதாந்த சுவாமிகள்,*

*" ரவி !!! நானும் எவ்வளவோ ! முயற்சி பண்ணிப் பார்த்தேன்... தவபுண்ணியத்தக் காப்பாத்த முடியல ... இந்தப் பிறவியில், அவன் பண்ணின, பாவங்களிலிருந்து அவனை மீட்டேடுக்கவே முடியல .... இதைத் தான் பெரியவங்க, முற்பகல் செய்யின், பிற்பகல் விளையும்ன்னு " சொன்னாங்க என்றார் வருத்தத்துடன் ....*

***இன்ஸ்பெக்டர் ரவி** : " மன்னிச்சுக்கங்க சுவாமிஜி !!! உங்கள நான் தப்பான கோணத்திலயே வச்சுப் பாத்துட்டேன் ... உங்க பேச்சையெல்லாம் உதாசீனப்படுத்திட்டேன் ...*

*இப்பதான் நான் உண்மையப் புரிஞ்சுகிட்டேன் ... என்ன மன்னிச்சிருங்க !!! " என்றார் ...*

**வேதாந்த சுவாமிகள்** *: " நான் தான் அப்பவே சொன்னேனே ரவி ,*

*" ஆன்மீகமும் , அமானுஷ்யமும் .... அறிவியலுக்கு அப்பாற்பட்டதுன்னு . "... என்றார் ...*

**ஏட்டு கந்தசாமி** *: " சார் ! நாம அடுத்து எங்க சார் போறோம் ... " என்றார் ..*

**இன்ஸ்பெக்டர் ரவி** *: " அன்பாலயத்துக்கு ....... " என்றார் பூரண நம்பிகையையோடு ....*

*............................................ 15 – நாட்களுக்குப் பிறகு ............................................*

*இன்ஸ்பெக்டர் ரவிக்கு , மீண்டும் ட்ரான்ஸ்பர் வந்திருந்தது .... ஏட்டுக் கந்தசாமி வருத்தத்துடன் விடை கொடுத்திருந்தார் ... NEXTGEN உரம் தயாரிப்பு நிறுவனம் , தன்னுடைய உரங்களை மறுசீரமைப்பு செய்து கொண்டு , இயற்கையான*

வழியிலேயே , உரங்களைத் தயாரித்திருந்தார்கள் ... வேளாண் பேராசிரியர் சதாசிவம் , குமாரசாமி ஐயாவின் , கருத்துக்களைத் தொகுத்து , “ விவசாயமும் , அதன் அவசியமும் “ என்கின்ற நூலை வெளியிட்டிருந்தார் ....

**-- முற்றும்**

_

இந்த நாவல் உங்களுக்கு ஒரு நல்ல பொழுது போக்கை அளித்திருக்கும் என்று நான் நம்புகிறேன். முடிந்தால், உங்களுடைய கருத்துக்களை மறக்காமல் பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன். உங்களுடைய ஆலோசனைகளை வரவேற்கிறேன்.

இப்படிக்கு

பூபதி கோவை,

*boopathycovai@gmail.com,*

*+91-7299543057*